கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை		
அரசியல் விஞ்ஞானம் I		புதிய பாடத்திட்டம்
23 T I	மாதிரி வினாத்தாள்	இரண்டு மணித்தியாலம்

பகுதி - A

✧ **1 - 20 வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

01. அரசியல் என்பது,
    (1) தேர்தல் செயன்முறையோடு வரையறுக்கப்பட்ட பயன்பாடாகும்.
    (2) அரசாங்கப் பரப்போடு மட்டும் வரையறுக்கப்பட்ட அதிகாரப் போராட்டமாகும்.
    (3) சமூக விஞ்ஞானங்களோடு அண்மைக் காலத்தில் இணைந்த எண்ணக்கருவொன்றாகும்.
    (4) அரசு, அரசாங்கம் மற்றும் சமூகத்துக்கிடையில் நிலவும் அதிகாரத் தொடர்பாகும்.
    (5) பொதுத்துறை நிர்வாகத்தோடு வரையறுக்கப்பட்ட செயன்முறையாகும். (............)

02. அரசியல் கருத்தியல்களின் பணி ஆவது,
    (1) மக்களின் நலன்களிலிருந்து விடுபட்டு செயற்படுவதற்கு அரசாங்கத்துக்கு வாய்ப்பளிப்பதாகும்.
    (2) தேர்தல் செயன்முறையிலிருந்து சுயாதீனமாக நிற்பதற்குப் பொதுமக்களைத் தூண்டுவதாகும்.
    (3) குறிப்பிட்ட ஒரு அரசியல் கருத்தையும் இலக்கையும் சூழ மக்களை ஒன்று திரட்டுவதாகும்.
    (4) பிரஜைகளுக்கு பகுத்தறிவு வழங்குவதாகும்.
    (5) மதங்களை வளர்ப்பதாகும். (............)

03. அரசு என்பது,
    (1) அரசாங்கத்துக்கு இணைந்த பதம் ஒன்றாகும்.
    (2) பிரசைகள் இல்லாத சமூக நிறுவனம் ஒன்றாகும்.
    (3) நீண்ட வரலாறு இல்லாத சமூகத் தோற்றப்பாடு ஒன்றாகும்.
    (4) பூகோளமயமாக்கத்தினால் பலம் பெற்றுள்ள அரசியல் தாபனமொன்றாகும்.
    (5) சமூகத்திலுள்ள அரசியல் அதிகாரத் தாபனங்களின் உயர்ந்ததாகும். (............)

04. அரசாங்கம் என்பது,
    (1) அரசுக்கு வெளிவாரியாக நிலவும் அரசியல் தாபனமாகும்.
    (2) சமூகத்தில் நிலவும் உயர்தன்மை பொருந்திய அரசியல் நிறுவனமாகும்.
    (3) சனநாயக ரீதியாக குறிப்பிட்ட காலமொன்றுக்கு தெரிவு செய்யப்படுவதாகும்.
    (4) நிறைவேற்றுத் துறையோடு இன்றி நிலவக்கூடிய நிறுவனமாகும்.
    (5) தொடர்ச்சியான இருப்பினைக் கொண்ட அதிகாரக் கட்டமைவாகும். (............)

05. மாக்சியவாதத்துக்கேற்ப,
    (1) அரசானது வர்க்க ஆதிக்கத்தின் கருவியாகும்.
    (2) தாராளவாதமானது சமூக முன்னேற்றத்துக்கு ஊன்றுகோலாக அமையும் தத்துவமாகும்.
    (3) முதலாளித்துவப் பொருளாதார முறைமையே சிறந்த பொருளாதார முறைமையாகும்.
    (4) வர்க்க வேறுபாடு சமூகத்தின் பொது நன்மைக்கு அவசியமானதாகும்.
    (5) பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான தீர்வு நலன்புரி அரசாகும். (............)

A.C.M. Faleel (MA)

06. அரசியல் விஞ்ஞானத்துக்கான ஓர் அணுகுமுறை என்ற வகையில் பெண்ணிலைவாதம் முக்கியத்துவம் பெறுவது,

(1) அரசு பற்றி அதற்கேயுரிய கோட்பாடொன்று இன்மையினாலாகும்.
(2) அதில் பல்வேறு சிந்தனைவாதக் குழுவினர் இருப்பதனாலாகும்.
(3) பால்நிலை சமத்துவத்துக்காகப் போராடுவதை வலியுறுத்தவதனாலாகும்.
(4) அரசியல் பற்றி அடிப்படையான வினாக்களை எழுப்பி 'அரசியல்' என்ற எண்ணக்கருவை பரவலாக்கிய மையினாலாகும்.
(5) அதற்கு நீண்டதொரு வரலாறு இருப்பதனாலாகும். (............)

07. மோதல் நிலைமாற்றத்தின் மூலம்,

(1) மோதலொன்றின் ஒரு தரப்பு வெற்றி தவிர்க்கப்படுகின்றது.
(2) மோதலின் பரவல் கட்டுப்படுத்தப்படுகின்றது.
(3) மோதல் நீடிப்பு தவிர்க்கப்படுகின்றது.
(4) மோதல் தீர்வுக்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றது.
(5) மோதலின் இயங்குதன்மையும் நோக்கங்களும், நலன்களும் மாற்றத்துக்குட்படுத்தப்படுகின்றன. (............)

08. பேச்சுவார்த்தை என்ற எண்ணக்கருவுக்குப் பொருந்தாத கூற்று யாது?

(1) மோதலை அதிகரிக்கச் செய்யும் ஒரு பொறிமுறையாகும்.
(2) மோதலை முகாமைப்படுத்துவதற்கும் தீர்ப்பதற்குமான ஊடகமாகும்.
(3) மோதல் தரப்பினர்களுக்கிடையில் உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கு ஊன்றுகோலாக அமையும் ஊடகச் செயன்முறையாகும்.
(4) மோதலோடு தொடர்பான தரப்பினர்களுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறைப்பதற்கான ஆதரமொன் றாகும்.
(5) தரப்பினர்களுக்கிடையில் நிலவும் கலந்துரையாடல் செயன்முறையொன்றாகும். (............)

09. ஒற்றையாட்சி அரசாங்க முறையின் விசேட பண்பானது,

(1) மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்கள் என்ற இரு வகையான அரசாங்கக் கட்டமைப்புக்களைக் கொண்டிருத்தல்.
(2) இறைமை அதிகாரமானது தனியான தேசிய நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருத்தல்.
(3) வளர்ச்சியுற்ற உள்ளூராட்சி முறையொன்றைக் கொண்டிருத்தல்.
(4) சுயாதீனமான நீதி முறையொன்று நிலவுதல்.
(5) தனிமன்றச் சட்டத்துறை நிலவுதல். (............)

10. நாடடொன்றில் அடக்குமுறை ஆட்சி தோன்றுவதற்கு ஊன்றுகோலாக அமையும் மூலக்கொள்கை ஆவது,

(1) பெரும்பான்மையினரின் அபிப்பிராயம் மட்டும் சரியானது என ஏற்றுக்கொள்ளுதலாகும்.
(2) வலு வேறாக்கமாகும்.
(3) யாப்புறுவாதமாகும்.
(4) பிரதிநிதித்துவ ஜனநாயகமாகும்.
(5) சட்டத்தின் ஆட்சியாகும். (............)

A.C.M. Faleel (MA)

11. அரசாங்கமானது தனது அதகாரங்களை முறையற்றவாறு பிரயோகிப்பதைத் தடுப்பதற்கு மொன்டெஸ்கியு முன்வைத்த எண்ணகருவுக்குப் பொருந்துவது,
(1) அதிகாரத் தடைகள்சமன்பாடாகும்.
(2) நிர்வாகத்தை பன்முகப்படுத்தலாகும்.
(3) மனித உரிமைகளைப் பாதுகாத்தலாகும்.
(4) பலம் பொருந்திய சிவில் சமூகமொன்று நிலவுவதாகும்.
(5) நீதிப் புனராய்வு அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதாகும். (............)

12. அரசியல் யாப்பு என்பது ‘அரசாங்கத்தின் அதிகாரங்கள், ஆளப்படுவோரின் உரிமைகள், ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையிலான தொடர்புகள் என்பவற்றைத் தீர்மானிக்கும் மூலக்கொள்கைகள் முறைமை ஆகும்’ இந்த பொருள் விளக்கத்தை முன்வைத்தவர்.
(1) சேர். ஐவர் ஜெனிங்ஸ் ஆவார்.
(2) C.F. ஸ்ட்ரோங் ஆவார்.
(3) K.C. வெயார் ஆவார்.
(4) மொன்டெஸ்கியு ஆவார்.
(5) A.V. டைசி ஆவார். (............)

13. பழம் வெஸ்ட்மினிஸ்டர் அரசாங்க மாதிரியின் பண்பொன்று **அல்லாதது,**
(1) அரசாங்க கட்டமைவினில் பாராளுமன்றுக்கு கேத்திர இடம் கிடைக்கப்பெறுதலாகும்.
(2) நிறைவேற்றுத்துறை பாராளுமன்றுக்குப் பொறுப்புக் கூறுதலாகும்.
(3) சட்டங்கள் பற்றிய புனராய்வு அதிகாரம் நீதித்துறைக்குரியதாக இருத்தலாகும்.
(4) இரு கட்சி முறைமை நிலவுதலாகும்.
(5) சட்டத்துறை இருமன்ற முறையினதாக இருத்தலாகும். (............)

14. காலணித்துவ அரசு பற்றிய எண்ணக்கருவுக்குப் **பொருந்தாத** கூற்றை தெரிவு செய்க.
(1) காலணித்துவ அரசுக்கும் காலணித்துவத்துக்கும் இடையிலான தொடர்பை விளக்குவதற்குப் பயன் படுத்தும் அரசியல் விஞ்ஞான எண்ணக்கரு ஒன்றாகும்.
(2) காலணித்துவ அரசின் பிரதிநிதித்துவப் பணிகளை நிறைவேற்றுகின்றது.
(3) தாராளவாத ஜனநாயகப் பண்புகளைக் கொண்டதாகும்.
(4) காலணித்துவ ஆட்சிக்குத் குறைந்தபட்ச நெறிமுறைத்த ன்மையே மக்களிடமிருந்து கிடைக்கின்றது.
(5) காலணித்துவ அரசின் பொருளாதாரச் சுபீட்சத்துக்குப் பங்காற்றுகின்றது. (............)

15. கோல்புரூக் சீர்திருதத் யோசனையொன்று **அல்லாதது,**
(1) வர்த்தக ஏகபோக உரிமையை இல்லாதொழித்தமையாகும்.
(2) இராஜகாரிய முறையைத் தொடர்ச்சியாகப் பேணியமையாகும்.
(3) அரசாங்க சேவையில் நுழைவதற்கு இலங்கையர்களுக்கு வாய்ப்பளித்தமையாகும்.
(4) நிலவிய இரட்டையாட்சி முறைமையை இல்லாதொழித்தமையாகும்.
(5) தேசாதிபதியின் தன்னிகரற்ற அதிகாரத்தைக் குறைத்தமையாகும். (............)

A.C.M. Faleel (MA)

16. அமெரிக்க அரசியல் யாப்பு சுருக்கமானதாகும் அதன் மூலம் அரசாங்க முறைமையின் புறவமைப்பே காட்டப்படுகின்றது. அது போஷிக்கப்பட்டிருப்பது,

(1) உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்புக்களிலிருந்தாகும்.

(2) ஜனாதிபதியின் கட்டளைகளிலிருந்தாகும்.

(3) செனட் சபை நிறைவேற்றிய சட்டங்களிலிருந்தாகும்.

(4) சர்வதேச உடன்படிக்கைகளிலிருந்தாகும்.

(5) பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், பிரயோகங்கள் எனப்வற்றிலிருந்தாகும். (............)

17. பின்வரும் கூற்றுக்களில் தற்கால பிரித்தானிய அரசாங்க முறையை விவரிப்பதற்குப் பொருத்தமான கூற்று யாது?

(1) அது சமஷ்டி ஆட்சி அரசாங்க முறையினதாக மாறியுள்ளது.

(2) அது கூட்டாண்மை அரசாங்க முறையினதாக மாறிக்கொண்டிருக்கின்றது.

(3) அது ஒற்றையாட்சி, சமஷ்டி ஆட்சி என்ற எந்தவொரு மாதிரிக்கும் உட்படுவதில்லை.

(4) அது மத்தியமயமாகிய ஒற்றையாட்சி முறையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கின்றது.

(5) அது அரை - குறைச் சமஷ்டி முறையினதாக மாறிக்கொண்டிருக்கின்றது. (............)

18. சோல்பரி அரசாங்க முறையின் பண்பொன்று **அல்லாதது,**

(1) அரசியல் யாப்பு எழுதப்பட்டிருந்தமையாகும்.

(2) சார்பு ரீதியாக நெகிழும் அரசியல் யாப்பொன்றினை கொண்டிருந்தமையாகும்.

(3) சட்டத்துறை தனிமன்ற முறையினதாக இருந்தமையாகும்.

(4) இலங்கைச் சமூகத்தைப் பல இன, பல மத ரீதியானது என ஏற்றுக்கொண்டமையாகும்.

(5) சுயாதீனமான நீதிச்சேவையையும் அரசாங்க சேவையையும் தோற்றுவித்தமையாகும். (............)

19. 1978 ஆம் ஆண்டின் யாப்பின் மீதான 19ஆம் திருத்தத்தின் பிரதான நோக்கம்,

(1) பதினெட்டாம் யாப்புத் திருத்தத்தை முழுமையாக இல்லாதொழிப்பதாகும்.

(2) இலங்கை அரசாங்க முறையை அதிகளவு ஜனநாயக மயமாக்கத்துக்கு உட்படுத்துவதாகும்.

(3) அரசியலமைப்புப் பேரவையைத் தாபிப்பதாகும்.

(4) ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஐந்து வருடங்களுக்கு வரையறுப்பதாகும்.

(5) பிரதம மந்திரியின் அதிகாரத்தை அதிகரிப்பதாகும். (............)

20. இலங்கையில் அரசியல் கட்சி முறைமையை அறிமுகப்படுத்த முடியுமாவது,

(1) பல கட்சி முறைமை என்பதாகும்.

(2) இரு கட்சி முறைமை என்பதாகும்.

(3) கட்சிகள் இரண்டு ஆதிக்கம் பெறுவதைத் தடுக்கும் கட்சி முறையொன்றாகும்.

(4) மந்திரிசபை அரசாங்க முறையின் அறிமுகத்தோடு தோன்றிய கட்சி முறைமை என்பதாகும்.

(5) பிரதான கட்சிகள் இரண்டு ஆதிக்கம் பெறும் பல சிறிய கட்சிகள் இணைந்த ஆதிபத்திய இரு கட்சி முறையாகும். (............)

A.C.M. Faleel (MA)

✧ **21 தொடக்கம் 25 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரயிான கூற்றை அல்லது கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவுசெய்க.**

21. அரச கொள்கைகள்,

A- அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு வேலைத்திட்டங்களை தோல்வியுற்றமையின் காரணமாக ஒரு பாடமாகக் கற்கப்படுதல் ஆரம்பமாகியது.

B- வகுக்கப்படுதல் அரசியல்வாதிகளின் பணியாக இருப்பதோடு நடைமுறைப்படுத்தப்படுதல் நிர்வாகிகளின் பணியாகும்.

C- நடைமுறைப்படுத்தப்படும் போது அரசியல் வாதிகளினதும் பொதுமக்களினதும் பாதிப்புக்களிலிருந்து சுயாதீனமானதாக இருத்தல் வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

D- அரசாங்கங்கள் மாறும் போது மாற்றமுற முடியும்.

E- நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எல்லா அரசியல் கட்சிகளும் கடமைப்படுகின்றன.

(1) ABC (2) ABD (3) BCD (4) ABCD (5) BCDE

22. சர்வதேச அரசியலில் அரசச் சார்பு செயற்பாட்டாளர்கள் உள்ளடங்கும் அமைப்புக்களாவன,

A- ஐக்கிய நாடுகள் தாபனமாகும்.

B- நேட்டோ நிறுவனமாகும்.

C- சர்வதேச மன்னிப்புச் சபையாகும்.

D- ஐரோப்பிய ஒன்றியமாகும்.

E- சர்வதேச செஞ்சிலுவைக் குழுவாகும்.

(1) A மற்றும் B (2) A மற்றும் D (3) B மற்றும் C
(4) B மற்றும் E (5) A,B மற்றும் D

23. 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு அரசியல் யாப்பு,

A- சிறுபான்மைக் குழுக்களுக்கான பாதுகாப்பை போதியளவு வழங்கத் தவறியது.

B- அடிப்படை உரிமைகளை வலுப்படுத்தவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்கவில்லை.

C- சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளை அரசகரும மொழிகளாக ஆக்கியது.

D- அரசாங்க சேவையை அரசியல் தலைமைத்துவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்தது.

E- அரசியல் யாப்பு நீதிமன்றம் ஒன்றை அறிமுகம் செய்தது.

(1) A மற்றும் B (2) B மற்றும் C (3) C மற்றும் D
(4) A,B மற்றும் E (5) A,C,D மற்றும் E

24. வெளிநாட்டுக் கொள்கையை வகுக்கும் போது இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளாவன,

A- நிலப்பரப்பில் சிறிய அரசாக இருத்தலாகும்.

B- பொருளாதார மற்றும் தேசிய அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தலாகும்.

C- பிராந்திய வல்லரசொன்று முன்னிலையிலிருத்தலாகும்.

D- வல்லரசுகளுக்கிடையிலான ஆயுதப் போட்டியை முகாமைப்படுத்தலாகும்.

E- பொது நலனைக் கொண்ட தேசிய கருத்தியல் ஒன்று காணப்படாமையாகும்.

(1) A மற்றும் B (2) B மற்றும் C (3) C மற்றும் D
(4) A,B,C மற்றும் E (5) B,C,D மற்றும் E

A.C.M. Faleel (MA)

25. இலங்கையில் ஜனநாயக அரசாங்க முறையின் இருப்புக்கு,

A- இருபதாம் நூற்றாண்டின் முதலரைப் பகுதியிலிருந்து பலமான ஜனநாயக சம்பிரதாயம் ஒன்று நிலவியமை காரணமாகியுள்ளது.

B- 1931 இலிருந்து அனுபவிக்கும் சர்வஜன வாக்குரிமை தடையாக உள்ளது.

C- மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சி முறை பங்காற்றியுள்ளது.

D- யாப்புறு ஆட்சியில் பொதுமக்கள் நம்பிக்கை வைத்தமை காரணமாகியுள்ளது.

E- ஜனநாயகமல்லாத மாற்றும் முறைகளில் பொது மக்களின் விருப்பின்மை காரணமாகியது.

(1) A மட்டும் (2) A மற்றும் E (3) C மட்டும்

(4) A மற்றும் D (5) E மட்டும்

- **26 தொடக்கம் 30 வரையிலான ஒவ்வொரு வினாவும் இரண்டு கூற்றுக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாவுக்குரிய சோடிக் கூற்றுக்கு பின்வரும் அட்டவணை I இற்கான வழிகாட்டியிலுள்ள (1),(2),(3),(4),(5) என்பவற்றுள் எந்த விடை பொருந்துகிறது என்பதைக் குறிப்பிடுக.**

அட்டவணை I இற்கான வழிகாட்டி

இலக்கம்	கூற்று I	கூற்று II
(1)	உண்மை	உண்மை
(2)	உண்மை	பொய்
(3)	பொய்	உண்மை
(4)	பொய்	பொய்
(5)	உண்மை	உண்மையாக இருப்பதோடு முதலாவது கூற்றை மேலும் விபரிக்கின்றது.

அட்டவணை I

	கூற்று I	கூற்று II
26.	பத்தொன்பதாம் யாப்புத் திருத்தத்தின் கீழ் பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்றம் முதலாவதாகக் கூடி $4^1/_2$ வருடங்கள் பூர்த்தியாகும் வரை ஜனாதிபதி அதனைக் கலைக்க முடியாது.	பிரதமரின் வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதியால் பாராளுமன்றைக் கலைக்க முடியும். (............)
27.	சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கிருந்த நேரடி அதிகாரம் பத்தொன்பதாம் யாப்புத் திருத்தத்தின் மூலம் அகற்றப்பட்டது.	பதினெட்டாம் யாப்புத் திருத்தமானது விகிதசமப் பிரதிநிதித்துவ முறையில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியது. (............)
28.	மாகாண சபைகள் முறைமையானது 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் நேரடிப் பெறுபேறாகும்.	13ஆம் யாப்புத் திருத்தத்தின் மூலம் தாபிக்கப்பட்ட மாகாணசபைகள் தீவின் 9 மாகாணங்களையும் உள்ளடக்கியது, (............)

A.C.M. Faleel (MA)

	கூற்று I	கூற்று II
29.	இலங்கையிலுள்ள விகிதசமப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் எந்தவொரு தனி அரசியல் கட்சியாலும் பாராளுமன்றில் $^{2}/_{3}$ பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்வது கடினமாகும்.	வாக்காளர்களுக்கும் அவர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் தொடர்பு விகிதசமப் பிரதிநிதித்துவ முறையினால் பலப்படுத்தப்பட்டுள்ளது. (............)
30.	இலங்கையின் அரசியல் கட்சி முறைமையில் பிரதான இரு கட்சிகள் ஆதிக்கம் மிக்கனவாகும்.	இலங்கையின் அரசியல் கட்சி முறைமை பல சிறிய (............) கட்சிகள் இணைந்த ஆதிபத்திய இரு கட்சி முறையினதாகும். (............)

பகுதி - B

- **31 தொடக்கம் 50 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள இடைவெளியில் எழுதுக.**

31. அரசியலை ஒரு கல்விசார் முறையில் கற்றல் என்பது இரு பொருளைக் கொண்டதாகும். அப்பொருள் இரண்டினையும் குறிப்பிடுக.

(1) ....

(2) ....

32. ‘அரசியல் கோட்பாடு’ என்ற எண்ணக்கருவுக்கு இரண்டு பொருள் உண்டு. அவ்விரு பொருள்களையும் குறிப்பிடுக.

(1) ....

(2) ....

33. பின்வரும் பண்புகள் பொருந்துகின்ற அரசாங்க முறைகளை முறையே குறிப்பிடுக.

(1) பரம்பரை முறையில் அரசத்துவத்துக்கு உரிமை கோரும் தனிநபர் ஆட்சி

....

(2) பொதுமக்களின் பிரதிநிதிகளின் மூலம் கொண்டு நடத்தப்படும் ஆட்சி

....

34. பின்வரும் பண்புகள் பொருந்துகின்ற அரசியல் கருத்தியல்கள் **இரண்டையும்** முறையே குறிப்பிடுக.

(1) அரச வழிபாடு ....

(2) அரசு பற்றிய வர்க்க முறை விளக்கம் ....

35. அரசின் தோற்றம் பற்றிய சமூக ஒப்பந்த கோட்பாட்டினை முன்வைத்த ரூசோவின் முதற்கோளின் மூலம் முன்வைக்கப்படும் மூலக்கொள்கைகள் **இரண்டும்** யாது?

(1) ....

(2) ....

A.C.M. Faleel (MA)

36. அரைகுறை ஜனாதிபதி முறை சில பண்புகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ....

(2) ....

37. இலங்கையில் காலணித்துவ நிலைமாற்றங்களில் நிர்ணயமான முறையில் பாதிப்புச் செலுத்திய அரசியல் சீர்திருத்தங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ....

(2) ....

38. 'தேசிய வாதம்' என்ற அரசியல் கருத்தியலானது இரு பிரதான இயல்புகளின் மூலம் முன்வைக்கப் பட்டுள்ளது அவை யாவை?

(1) ....

(2) ....

39. இந்திய மதச்சார்பின்மை வாதத்தின் இரு பொருள்களையும் குறிப்பிடுக.

(1) ....

(2) ....

40. மோதல்களின் செயற்பாடுகளுக்கு அமைவாக, அவற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்க முடியும். அவ்விரு வகைகளும் யாவை?

(1) ....

(2) ....

41. சோல்பரி அரசாங்க முறையின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறையானது மேல் மற்றும் கீழ் என்ற இரு மன்றங்களைக் கொண்டிருந்தது. அவற்றுள்,

(1) மேல் மன்றம் என அழைக்கப்பட்டது யாது? ....

(2) கீழ் மன்றம் என அழைக்கப்பட்டது யாது? ....

42. (1) 1972 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறையின் உத்தியோகபூர்வப் பெயர் யாது?

....

(2) அதன் பதவிக்காலம் யாது? ....

43. நவீன ஜனநாயக அரசாங்க முறைகளில் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதில் இரண்டு தேர்தல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன **அவ்விரண்டையும்** குறிப்பிடுக.

(1) ....

(2) ....

A.C.M. Faleel (MA)

44. ஓர் அரசின் இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் விதத்தின் படி அரசாங்க முறைகள் இரண்டு வகைகளாகப் பாகுபடுத்தப்படுகின்றன. **அவ்விரு** வகைகளையும் குறிப்பிடுக.

(1) ....

(2) ....

45. பொதுக் கொள்கைகளின் உருவாக்கம் மற்றும் நடைமுறை பற்றிய கொள்கை வட்டமானது ஏழு கட்டங் களைக் கொண்டதாகும். அதன் முதல் **இரண்டு** கட்டங்களையும் முறையே குறிப்பிடுக.

(1) ....

(2) ....

46. பதினெட்டாம் அரசியல் யாப்புத் திருத்தத்தின் கீழ்

(1) அரசாங்கத்தின் உயர் பதவிக்கு ஆட்களை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு அவதானிப்புகளை வழங்குவதற்குத் தாபிக்கப்பட்டிருந்த பேரவையின் உத்தியோகபூர்வப் பெயர் யாது?

....

(2) அப்பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது? ....

47. பதின்மூன்றாம் அரசியல் யாப்புத் திருத்தத்தின் மூலம் அதிகாரங்கள் மூன்று அதிகார நிரல்களின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ....

(2) ....

48. இலங்கையின் அரசியல் கட்சி முறை தலைமைத்துவ ஆதிக்கக் கட்சிகள் இரண்டைக் கொண்ட இரு கூட்டுக் கட்சி முறை என்றழைக்கப்படுகின்றது. அந்த தலைமைத்துவ ஆதிக்கக் கட்சிகள் **இரண்டையும்** குறிப்பிடுக.

(1) ....

(2) ....

49. தற்கால அரசுகள் வெளிநாட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் பயன்படுத்தப்படும் **இரண்டு** உபாயங்களைக் குறிப்பிடுக.

(1) ....

(2) ....

50. சார்க் அமைப்பின் தலைமையின் கீழ் செயற்படும் இலங்கை தொடர்புபட்டுள்ள **இரண்டு** வர்த்தக உடன்படிக்கைகளையும் குறிப்பிடுக.

(1) ....

(2) ....

A.C.M. Faleel (MA)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை

அரசியல் விஞ்ஞானம் I — **விடைகள்** — **மாதிரி விடைகள்**

வினா இல	விடை	வினா இல	விடை	வினா இல	விடை
01.	4	11.	1	21.	1
02.	3	12.	1	22.	5
03.	5	13.	5	23.	4
04.	3	14.	3	24.	4
05.	1	15.	2	25.	2
06.	4	16.	1	26.	2
07.	5	17.	4	27.	2
08.	1	18.	3	28.	1
09.	2	19.	2	29.	2
10.	1	20.	5	30.	5

31. (i) அரசியலை ஒரு நடைமுறை அறிவு என்ற வகையில் கற்றல்.
    (ii) அரசியலை ஒரு கற்கைத் துறையாக கற்றல்.

32. (i) இலட்சியக் கோட்பாடு
    (ii) விஞ்ஞான ரீதியான கோட்பாடு

33. (i) மரபு மன்னராட்சி
    (ii) ஜனநாயக ஆட்சி

34. (i) பாசிச வாதம்
    (ii) சமவுடைமை வாதம்

35. (i) பொதுச் சித்தம்
    (ii) மக்கள் இறைமை

36. (i) ஜனாதிபதி மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்படல்.
    (ii) அதிகாரம் கொண்ட பிரதமர் மற்றும் அமைச்சரவை ஒன்று ஜனாதிபதிக்கு நிகராக காணப்படுதல்.

37. (i) கோல்புறுக் கமறன் சீர்திருத்தம்
    (ii) டொனமூர் யாப்பு

38. (i) தேசிய/அரச தேசிய வாதம்
    (ii) இனத்துவ தேசிய வாதம்

39. (i) அறநெறி சார்பின்மை
    (ii) சர்வ அறநெறிகளினதும சேர்க்கை

40. (i) முரண்பாட்டின் சாதகமான பக்கம்
    (ii) முரண்பாட்டின் பாதகமான பக்கம்

41. (i) செனட் சபை
    (ii) சனப் பிரதிநிதிகள் சபை

42. (i) தேசிய அரசுப் பேரவை
    (ii) 06 வருடங்கள்

43. (i) பிரதேச வாரிப் பிரதிநிதித்துவம்/தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம்
    (ii) விகிதாசார பிரதிநிதித்துவம்

44. (i) ஒற்றை ஆட்சி அரசாங்கம்
    (ii) சமஷ்டி ஆட்சி அரசாங்கம்

45. (i) நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல்
    (ii) கொள்கையை வகுத்தல்.

46. (i) பாராளுமன்ற பேரவை
    (ii) 05

47. (i) மத்திய அரசின் பட்டியல்
    (ii) மூடிய பட்டியல்
    (iii) மாகாண சபைகளின் பட்டியல்

48. (i) UNP
    (ii) SLFP

49. (i) இராஜதந்திர தொடர்புகள்
    (ii) வெளிநாட்டு உதவிகள்
    (iii) இராணுவப் பலம்

50. (i) தென்னாசிய சுதந்திர வர்த்தக வலயம் (SAFTA)
    (ii) தென்னாசிய முன்னுரிமைத் தேர்வு ஒப்பந்தம் (SAPTA)

A.C.M. Faleel (MA)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை

அரசியல் விஞ்ஞானம் II | **மாதிரி வினாத்தாள்**

23 T II

✧ இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.

✧ பகுதி - I இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் பகுதி II இலிருந்தும் குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையும் பகுதி III இலிருந்து ஒரு வினாவையும் எல்லாமாக ஐந்து (5) வினாக்களுக்கு விடை தருக.

பகுதி - I

01.''அரசியல் என்பது பிரசைகளது சமூக வாழ்வின் ஓர் அங்கமாகும்''. ஆராய்க.

சமூக விஞ்ஞான பாடங்களில் ஒன்றாகிய அரசியலை வரைவிலக்கணமொன்றில் உள்ளடக்குவது கடினமாகும். இதற்கு காரணம் இக்கற்கை நெறி பற்றிய கருத்துக்கள் காலத்துக்குக் காலம் மாற்றமுற்று வளர்ச்சியடைந்து வந்துள்ளதாகும். அத்துடன் ஒரு காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து பிறிதொரு காலத்தில் முக்கியத்துவம் இழப்பதும் புதிய விடயங்கள் ஆய்வுப் பொருளாவதுமான ஒரு இயங்கியல் தன்மைக் கொண்டதாக இக்கற்கை நெறி காணப்படுவதாகும்.

அரசியல் என்றால் என்ன என்பதற்கு பொதுவாகக் கிடைக்கும் இலகுவான பதில் ''தேசத்தை ஆட்சி புரிதல்'' என்பதாகும். இது அரசியல் என்ற எண்ணக்கரு தொடர்பில் காணப்படும் பயன்பாட்டில் உள்ள அர்த்தமாகும். இது அரசியல் தொடர்பில் காணப்படும் முழுமையான வரைவிலக்கணம் அல்ல. இது வாய்மொழி ரீதியான வரைவிலக்கணமாகும். அரசியலுக்கான வரைவிலக்கணத்தை கல்விசார் நோக்கில் ஆராயும் போதுதான் சரியான வரைவிலக்கணத்தினை கண்டு கொள்ளலாம். இவ்வகையில்,

01. அரசு, அரச நிருவாகம், ஆட்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதே அரசியலாகும். இந்த வரைவிலக்கணம் புராதனமாக இருந்தாலும் நல்ல அர்த்தத்தைக் கொண்டுள்ளது. புராதன கிரேக்க, இந்திய, சீன தத்துவஞானிகள் இப்பொருளிலேயே அரசியலைப் பற்றிப் பேசினர்.

    ஆங்கில மொழியில் Politics என்ற சொல் Politikos என்ற சொல்லிலிருந்தே தோன்றியுள்ளது. பொலீஸ் (Polis) என்பது நகர அரசாகும். அதாவது, சிறிய நகரத்தை மையப்படுத்திய அரசாகும். ''நகர அரசு'' என்ற பொருளைத்தரும் Polis என்ற அர்த்தம் Politikos என்ற சொல்லில் பொதிந்துள்ளது. இதன் மூலம் கிரேக்க காலத்தில் அரசியல் என்பது ''நகர அரசு'' தொடர்பான விடயத்தினை ஆராயும் விஞ்ஞானம் அல்லது கலையாகவே கருதப்பட்டது. இவ்வரசு நேரடி ஜனநாயகத்தின் தாயகமாக விளங்கியதோடு சுதந்திரத்தையும் மக்களாட்சியையும் விரும்பிய ஒன்றாகவும் காணப்பட்டது. இவ்வரசில் சுயதேவை பூர்த்திப் பொருளாதாரம் காணப்பட்டது. கிரேக்க காலத்தில்,

    1. அரசின் தோற்றம்.
    2. அரசின் நோக்கம்.
    3. அரசாட்சி முறைகள்.
    4. அரசுக்கும் பிரசைகளுக்கும் இடையிலான தொடர்பு.

A.C.M. Faleel (MA)

5. ஆட்சியாளர்களின் பண்புகளும் திறன்களும்.

6. ஆட்சி செயன்முறைகள்.

என்பன நகர அரசு பற்றிய கற்கையில் இடம் பெற்ற பரந்த விடயங்களாகும். புராதன இந்தியா மற்றும் சீனாவில் அரசியல் என்பது இவ்வர்த்தத்திலேயே பார்க்கப் பட்டதாக கௌடிலியர் மற்றும் கொன்புசியஸ் போன்ற சிந்தனையாளர்களின் நூல்களில் காணப்படுகின்றன. இவ்விரு சிந்தனையாளர்கள் மட்டுமன்றி அரிஸ்டோடிலும் கூட ஆட்சியாளர்களுக்கு அரசாட்சி தொடர்பாக ஆலோசனை வழங்குவதே அரசியல் வல்லுனர்களின் கருமமொன்றாக இருந்தது எனக் கூறப்படுகின்றது.

02. அரசுக்கு வெளியில் பிரசைகளின் அரசியல் பங்குபற்றும் சமூகப் பிரயோகமே அரசியலாகும் என்ற மற்றொரு வரைவிலக்கணமும் காணப்படுகின்றது. பிரசைகளின் அரசியல் பங்குபற்றல் என்பதற்கு அரசியல் என்ற எண்ணக்கருவில் விசேட இடம் வழங்கப்பட்டுள்ளது. பிரசைகளின் செயற்பாடுகள் மற்றும் பங்குபற்றல் இல்லாத அரசியல் ஒன்றை எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு வேரூன்றியுள்ளது. அரசியல் பங்குபற்றல் என்பது 1960ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலப்பகுதியிலே பிரபல்யம் பெற்ற ஒன்றாகயிருந்தது. ஆனாலும் ஆட்சி நடவடிக்கைகளில் மக்களின் பங்குபற்றல் என்பது கிரேக்க காலம் வரை பழமை வாய்ந்ததாகும். கிரேக்கத்தில் அப்போது காணப்பட்ட நேரடி ஜனநாயக ஆட்சிமுறையில் பிரசைகளின் நேரடி பங்குபற்றல் காணப்பட்டது. சட்டவாக்கம், நகர் நிருவாகம், நீதித் துறைகள் போன்ற செயற்பாடுகளில் பிரசைகள் சுயாதீனமாக ஈடுபட்டனர். ஆனாலும் பெண்கள், சிறுவர்கள், அடிமைகள் ஆட்சி நடவடிக்கைகளிலிருந்து தூரப்படுத்தப் பட்டிருந்தனர் என்பது முக்கியமானதாகும்.

பொதுவாக பிரசைகளின் அரசியல் பங்குபற்றுதல் என்பது தீர்மானம் மேற்கொள்ளல், கொள்கை உருவாக்கம், கொள்கை அமுலாக்கச் செயல்முறையில் பிரசைகள் நேரடியாக உள்வாங்கப்படுவதைக் குறித்து நிற்கின்றது.

(உ - ம்) :

தேர்தலில் வாக்களித்தல், ஆட்சியாளர்களுக்கு ஆள்வதற்கான அதிகாரத்தை வழங்குதல், அரசியல் கட்சிகளை அமைத்தல், தேர்தல் காலங்களில் பலதரப்பட்ட தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அறிவுரை வழங்குதல், துண்டுப் பிரசுரங்களை வழங்குதல், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களாக இருத்தல், சட்டமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளல், அரசியல் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புதல், இவைதவிர கூட்டங்கள், ஊர்வலங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள், வேலை நிறுத்தங்கள், போரராட்டங்கள், சுயாதீன சங்கங்கள் மூலம் பொதுத் தேவைகளை நிறைவேற்றல் போன்ற நடவடிக்களின் மூலம் அரசியல் செயற்பாடுகளில் மக்கள் ஈடுபடுகின்றனர்.

இதன்படி பிரசைகளின் அரசியல் பங்குபற்றல் என்பதற்கு அரசியல் என்ற எண்ணக்கருவில் விசேட இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பிரசைகளின் செயற்பாடுகள் மற்றும் பங்குபற்றல் இல்லாத அரசியல் ஒன்றை எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு இவ்விடயம் வேரூன்றியுள்ளது. எனவே அரசியல் என்பது பிரசைகளது சமூக வாழ்வில் ஓர் அங்கமாக கருதப்படுகின்றது எனக் கூறுவது பொருத்தமானதாகும்.

A.C.M. Faleel (MA)

02. அரசியல் விஞ்ஞானத்துக்கான பின்வரும் அணுகுமுறைகளில் எவையேனும் இரண்டினை விபரிக்குக.

(அ) தத்துவார்த்த அணுகுமுறை

(ஆ) ஒப்பீட்டு அணுகுமுறை

(இ) பெண்ணிலைவாத அணுகுமுறை

(அ) தத்துவார்த்த அணுகுமுறை

அரசியலின் உண்மை நிலையை அன்றி கற்பனையில் உதிக்கும் அரசியல் நிலையினை கற்பதற்கான ஆய்வு முறையே தத்துவார்த்த அணுகுமுறையாகும். அரசறிவியலில் இவ்வணுகுமுறை மிகப் பழமையானது. இதன் முன்னோடி பிளேட்டோ ஆவார்.

பிளேட்டோ தன்னுடைய குடியரசு (Republic) என்ற நூலிலும் சேர் தோமஸ் மூர் தன்னுடைய கற்பனை உலகு என்ற நூலிலும் இலட்சிய அரசு பற்றி கற்பனை செய்துள்ளார்கள்.

ஐரோப்பிய அரசியல் சிந்தனையில் பிரபல்யமானவர்களான சிசரோ, புனித ஒகஸ்டீன், தோமஸ்மூர், தோமஸ் ஹொப்ஸ், ஜோன் லொக், ரூசோ, இமானுவெல் கான்ட், ஹெகல், Bosanque, கார்ல் மார்க்ஸ் போன்றோர்கள் இம்முறையை பயன் படுத்தியுள்ளனர். 20ஆம் நூற்றாண்டில் மகாத்மா காந்தி, ஹனா ஏரன்ட், ஜோன் நோல்ஸ், சார்லஸ் டேலர், யர்க்கன் ஹபர்மாஸ் போன்றோர் முக்கியம் பெறுகின்றனர்.

தத்துவார்த்த அணுகுமுறையின் பண்புகள்

1. உலகைப் பற்றிய அடிப்படை வினாக்களை எழுப்பிப் பரிசீலனை செய்தல்.
   - இங்கு,
     உலகம் என்பது யாது?
     உலகம் எவ்வாறு இருப்புக் கொண்டுள்ளது?
     மனித வாழ்க்கை என்பது யாது?
     போன்ற வினாக்கள் எழுப்பி உலகைப் பற்றிய பரிசீலனை மேற்கொள்ளப்படுகின்றது.
   - இதேபோன்று அரசியல் பற்றியும் வினாக்களை எழுப்பி அரசியல் பரசீலிக்கப்படுகிறது. அதன்படி,
     அரசியல் என்பது யாது?
     அரசு என்பது யாது?
     அரசின் நோக்கங்கள் யாவை?
     அரசுக்கு மனிதன் ஏன் அடிபணிய வேண்டும்?
     அரசுக்கும் ஏனைய சமூக நிறுவனங்களுக்குமிடையிலுள்ள தொடர்பு யாது?
     ஆகிய வினாக்களை எழுப்பி அன்றும் இன்றும் அரசியல் பற்றி ஆராயப்படுகிறது.

2. தத்துவ ஞானிகள் உலகையும், அரசியலையும் விளங்கிக் கொள்வதற்கான எண்ணக் கருக்களின் பொருளை உறுதிப்படுத்த முயல்கின்றமை.
   எண்ணக்கருக்களுள் சில பின்வருமாறு :-
   நீதி, நியாயம், சமத்துவம், சுதந்திரம், உரிமைகள்

3. அரசியலின் இலட்சியார்த்த / நியமம்சார் நோக்கங்களில் ஈடுபாடுகாட்டல். இலட்சியம் சார் / நியமம் சார் என்பதன் பொருள் பெறுமானம் சார் தீர்ப்பினை (Value Judgment) கொண்டது என்பதாகும்.

A.C.M. Faleel (MA)

4. அரசியலின் உண்மை நிலையை பற்றி எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதை ஆராய்தல்.
5. தத்துவ கருத்துக்களின் அடிப்படையில் அரசியல் நிறுவனங்களின் தொழிற்பாட்டை மதிப்பிட முயல்தல்.
6. முன்வகுக்கப்பட்ட கோட்பாடுகளினதும் கருதுகோள்களிலும் தங்கியுள்ளது.

தத்துவார்த்த அணுகுமுறையின் நன்மைகள்

1. அகநிலை நோக்கின் அடிப்படையில் விடயத்தை ஆராயக் கூடியதாக இருத்தல்.
2. ஒரு நிச்சயமான தளத்தில் இருந்து கொண்டு பெறுமதிகளை அடையக் கூடியதாக இருத்தல்.
3. ஒரு விடயத்தை பெறுமானம் சார் தீர்ப்பின் அடிப்படையில் நோக்க முடிதல்.
4. நன்மையிலிருந்து தீமையை வேறுபடுத்திக் காட்ட உதவுதல்.
5. தத்துவ முறை அரசியலைக் கற்பதற்கு ஏற்றதாக கருதப்படுதல்.
6. பயன்படுத்தப்படும் எண்ணக்கருக்களின் பொருள்களை ஆழமாகக் கண்டறிதல்.
7. அரசியல் உலகின் மூலப் பிரச்சினை வெளிப்படுத்தி பரிசீலித்தல்.

தத்துவார்த்த அணுகுமுறையின் தீமைகள்

1. பெறப்படும் முடிவுகள் நடைமுறைக்கு பொருந்தாதிருத்தல்.
2. நிறுவனங்களையோ அவற்றின் நடைமுறைகளையோ உண்மையிலிருந்து விதிகள் வரை ஆராய்வதில்லை.
3. விஞ்ஞான யுகத்தில் தத்துவ முறை பொருத்தமற்றது.
4. தத்துவத்தை எளிதாக புரிந்து கொள்ள முடியாது.
5. தத்துவக் கருத்துக்களை எளிதாக நடைமுறைப்படுத்த முடியாது.

(ஆ) ஒப்பீட்டு அணுகுமுறை

ஒரு சமூக அரசியல் தோற்றப்பாட்டையோ, பிரச்சினையையோ கருப் பொருளையோ பிறிதொரு நிலையுடன் ஒப்பிட்டு பார்ப்பதன் மூலம் அது பற்றிய சிறந்த அறிவை பெற்றுக் கொள்வதே ஒப்பீட்டு அணுகு முறையாகும்.

உதாரணம் : 1

இந்திய அரசியல் அமைப்பு நிர்ணய சபை இந்திய அரசியல் அமைப்பை வரைவதற்கு இந்த முறையையே பயன்படுத்தியது. இந்திய அரசியல் அமைப்பு நிர்ணய சபையின் அங்கத்தினர்கள் ஆங்கிலேயே, அமெரிக்க, அயர்லாந்து, கனேடிய, ஆஸ்திரேலிய அரசியல் அமைப்புக்களை ஆராய்ந்து அவைகளுடைய நிறைகுறைகளை ஒப்பீட்டு பார்த்து இந்திய அரசியல் அமைப்பினை வரைந்தார்கள்.

உதாரணம் : 2

இலங்கையில் 1978 ஆம் ஆண்டு யாப்பை வரைந்தவர்கள் அமெரிக்க, பிரித்தானிய, பிரான்ஸிய அரசியல் அமைப்புக்களை ஆராய்ந்து அதனுடைய நிறைகுறைகளை ஒப்பிட்டு பார்த்து 2ஆம் குடியரசு யாப்பை வரைந்தார்கள்.

A.C.M. Faleel (MA)

உதாரணம் : 3

ஒரு நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டுக்கு மிகவும் பொருத்தமான அரசாங்க முறை யாது என்பதனைக் கண்டறிவதற்கு உலகிலுள்ள சில ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை அரசாங்க முறைகளை ஒப்பிட்டு பார்த்து தீர்மானிக்க முடியும்.

உதாரணம் : 4

முரண்பாட்டு உச்ச நிலையைப் பெற்ற நாட்டிலும் சமாதானம் உறுதிப்படுத்தப் பட்டுள்ள நாட்டிலும் அரசியல் இஸ்திரத்தன்மைக்கு மிகவும் பொருத்தமான அரசியலமைப்பு எதுவென ஆய்வு செய்வதற்கு இம்முறையினைப் பயன்படுத்தல். ஒப்பீட்டு அணுகு முறையை முதலாவதாக அறிமுகப்படுத்தியவர் அரிஸ்டோட்டில் ஆவார். இவர் 158 அரசியல் யாப்புக்களை நன்றாகக் கற்று அவைகளை ஒப்பிட்டு பார்த்து ஒரு முடிவுக்கு வந்தார். அதனால் அரசறிவியலின் ஒப்பீட்டு முறையின் தந்தை என்று அரிஸ்டோட்டில் அறிமுகம் செய்யப்படுகிறார். தற்காலத்தில் இம்முறையைப் பயன்படுத்தியவர்களுள் மொண்டஸ்கியு, Alex de Tocqueville, Bryce பிரபு போன்றோர் பிரதானமானவர்களாகக் கருதப்படுகின்றனர்.

ஒப்பீட்டு முறை சில காரணங்களால் பலனளிக்காது போய்விடுகிறது. வேறுபட்ட மக்களைக் கொண்டுள்ளதாலும் பல்வேறு ஆட்சி முறைகளைக் கொண்டிருந்தாலும் சமூக, பொருளாதார நிலை நாட்டுக்கு நாடு வேறுபட்டிருந்தாலும் இம்முறை பயனளிக்காது என்ற சந்தேகம் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக அமெரிக்காவில் உள்ள மக்களாட்சி முறையை இந்தியாவிற்கு ஒப்பிட்டுப் பார்ப்பது ஏற்புடையதன்று. ஏனெனில், அமெரிக்க முறைக்கும் இந்திய நாட்டிலுள்ள குடியாட்சி முறைக்கும் அடிப்படை வேறுபாடுகள் உள்ளன.

ஒப்பீட்டு அணுகுமுறையின் நன்மைகள்

1. ஒப்பீட்டு ஆய்வு முறை அதிகம் விஞ்ஞானத்தன்மை பொருந்தியதாகும் என்று Bryce கூறுகின்றார். இதன் மூலம் சாதாரண நிலைகளைக் கண்டறிதலும் ஒத்த காரணிகள் மூலம் சமமான பெறுபேறுகள் கிடைத்துள்ளதா என்று அறியவும் அவ்வாறின்றேல் அதனைப் பாதித்த காரணிகளை பரிசீலிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.
2. ஒப்பீட்டு ஆய்வு முறையை வரலாற்று முறையோடு இணைந்த ஒரு துணை முறையாகப் பயன்படுத்த வேண்டும் என்று Gilchrist கூறுகிறார். ஏனெனில் வரலாற்று ஆய்வின் மூலம் பெற்றுக் கொள்ளும் தகவல்களை ஒப்பீட்டு முறையைப் பயன் படுத்தி சிறப்பாகப் பகுப்பாய்வு செய்ய முடியும்.
3. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஒப்பீட்டு அரசியல் என்ற புதியதொரு பாடத்துறை அரசறிவியலில் வளர்ச்சி அடைந்துள்ளது.
4. இரண்டு அரசியல் நிறுவனங்களை ஒப்பீடு செய்கின்ற போது அவற்றின் வளர்ச்சி, வீழ்ச்சி என்பவை இருப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு.
5. பல்வேறு முறைமைகள் ஒப்பிடப்படுவதனால் பெறப்படும் முடிவு அதிகளவு உறுதித் தன்மை வாய்ந்ததாக இருப்பதற்கு வாய்புக்கள் உண்டு.
6. சிறப்புமிகு அரசியல் முறைமையை ஒழுங்கமைப்பதற்கான கொள்கைகளை கண்டு பிடிக்கலாம்.

ACM. Faleel (MA)

ஒப்பீட்டு அணுகுமுறையின் குறைபாடுகள்

1. அரசியல் நிறுவனங்களின் செயற்பாட்டை பாதிக்கும் சூழல் காரணிகளை இம்முறையின் கீழ் கவனத்தில் கொள்ளாதிருக்கும் நிலையோ / குறைவாக மதிப்பீடு செய்யும் நிலையோ காணப்படுதல் இம் முறையின் பிரதான குறைபாடாகும். நிறுவனங்களின் செயற்பாட்டை பாதிக்கும் மனித நடத்தை, சமூக, பொருளாதார நிலைமைகள், கலாசார விழுமியங்கள், அரசியல் கலாசாரத்தின் தன்மை என்பவற்றை ஆராய்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகும். இது ஒப்பீட்டு முறையின் பிரதான குறைபாடாகும் என்று Garner கூறுகின்றார்.

(இ) பெண்ணிலைவாத அணுகுமுறை

அரசியல் விடயங்களை பெண்ணியல்வாத நோக்கில் கற்கும் முறையே பெண்ணியல்வாத அணுகுமுறையாகும்.

1970 களில் அரசியல் மற்றும் சமூகக் கற்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய பெண்ணியல் வாதமானது அரசியலை அடிப்படையான கோள்விகளுக்குட்படுத்தியதோடு ''அரசியல்'' எண்ணக்கருவின் பொருளையும் அபிவிருத்தி செய்துள்ளது.

ஆண்களுக்கு சமனாக பெண்களுக்கும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக சம உரிமையினை வழங்குவதை நோக்காகக் கொண்ட கருத்தியல்களினதும் இயக்கங்களினதும் கூட்டு மொத்தமே பெண்ணியமாகும். இது கல்வி மற்றும் தொழில் வாய்ப்பில் பெண்களுக்கான சமவாய்ப்பினை வலியுறுத்துகின்றது. பெண்ணிய இயக்கத்தினை அல்லது அதன் கருத்துப் பள்ளினைச் சார்ந்தோர் பெண்ணியலாளர் அல்லது பெண்ணியல் வாதி என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பெண்கள் சமத்துவம் உரிமைகளுக்காக வாதிடுபவர்களாக உள்ளனர்.

மேலும் பெண்ணியல் வாதிகள் வீட்டு வன்முறைகள், பாலியல் துன்புறுத்தல், பாலியல் தாக்குதல் போன்றவற்றிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்காகவும் போராடியுள்ளதுடன் வேலைத்தள உரிமைகள், தாய்மை, விடுமுறைகள், பெண்களுக்கு எதிரான சகல விதமான பாரபட்சங்களையும் எதிர்த்தல் என்பவற்றுக்காகவும் வாதிடுகின்றனர். இவ்வழியில் பெண்ணியமானது பிரதானமாக பெண்கள் பிரச்சினை பற்றியே கருத்திற் கொள்கின்றது. எனினும் அது பால்நிலை சமத்துவம் குறித்துக் கருத்திற் கொள்ளாமல் விடவில்லை. சில பெண்ணியலாளர்கள் ஆண்களின் பால் மற்றும் பால்நிலை வகிபாகங்களால் ஆண்களும் பாதிக்கப்படுகின்றனர் என வாதிடுகின்றனர்.

பெண்ணிய வாதிகள் அரசியல் ஆய்வில் எழுப்பும் கேள்விகள் மிகவும் வித்தியாசமானது.

1. பெண்கள் ஏன் அரசியல் பரப்பிலிருந்து புறம் தள்ளப்படுகின்றனர்?
2. அரசியல் என்பது ஆண்களின் துறையாகும் என்று தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமா?
3. சமூக வரலாற்று ரீதியாக பெண்கள் ஏன் இரண்டாம் நிலைக்கு ஓரம் கட்டப்பட்டும், அழுத்தங்களுக்குட்படுத்தப்பட்டும், வேறுபடுத்தல்களுக்குட்படுத்தப்பட்டும் இருக்கின்றனர்? இவற்றைத் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டுமா?
4. பெண்கள் அழுத்தங்களுக்குட்படுத்தும் சமூக, அரசியல், கலாசாரக் கருத்தியல்கள் யாவை?
5. சமூக மற்றும் மானிட விடுதலை தொடர்பான தாராளவாத மற்றும் சமவுடமைவாதக் கருத்துக்கள் பெண்கள் தொடர்பாக பொதுமையானதாகவுள்ளனவா?

A.C.M. Faleel (MA)

மேற் குறிப்பிட்ட பிரச்சினைகளை ஆராய்ந்து, பெண்ணியவாதிகள் அரசியல், சமூக ஆய்வுகளுக்கு பின்வரும் எண்ணக்கருக்களைச் சேர்த்துள்ளனர்.

1. பால்நிலை (Gender)
2. ஆண் - பெண் தொழிற்பிரிப்பு (Male-Female division of labour)
3. தந்தை வழித் தலைமைத்துவம் (Patriarchy)
4. பெண் அடக்கு முறை (Woman's oppression)
5. ஆண் மையவாதம் (Androcentrism)
6. ஆணாதிக்கம் (Male domination)
7. பெண் விடுதலை (Women's liberation)

அரசறிவயில் ஆய்வுகளிலும் எண்ணக்கருக்களிலும் மற்றும் கோட்பாடுகளிலும் பெண்ணியல்வாத அணுகுமுறை பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக அரசு, அரசியல் அதிகாரம், ஜனநாயகம், சமவுடமை வாதம், தேசிய வாதம், உரிமைகள், சுதந்திரம், சமத்துவம், நீதி நியாயம், சட்டம், ஓரங்கட்டல்கள், சுரண்டல், அழுத்தம், எதிர்ப்பு, அரச கொள்கைகள், குடியுரிமை போன்ற அரசறிவியல் எண்ணக்கருக்கள் அனைத்திலும் பால்நிலை பற்றிய அணுகுமுறை சேர்ப்பது முக்கியமாகும்.

03. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினை ஆராய்க.

(அ) கோத்திர அரசு

(ஆ) நவ தாராளவாத அரசின் பண்புகள்

(இ) சமவுடமை அரசு

(ஈ) பூகோளமயமாக்கம் அரசுகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம்.

(அ) கோத்திர அரசு

ஆரம்பகால அரசியல் நிறுவனமே கோத்திர அரசாகும். கோத்திர அரசில் தற்போதைய பன்மைத்துவ சமூகங்களைப் போலவோ அல்லது அரசியல் நிறுவனங் களைப் போலவோ அல்லது நிறுவனக் கட்டமைப்பைப் போலவோ நிறுவனங்களை காண முடியாது. இங்கே அரசியல் அதிகாரங்கள் சமூகத்தினுள் பரந்து காணப் பட்டிருந்தது. கோத்திர அரசு பெரும்பாலான ஆபிரிக்க நாடுகளில் காணப்பட்டிருந்தது உதாரணமாக சிம்பாபே (சோனா கோத்திரம்) தென்னாபிரிக்கா (சூலு), உகண்டா (கவாக்கா), அல்ஜீரியா, முசாம்பிக் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மனிதர் முதலில் குடும்பங்களாயினர் குடும்பங்கள் பெருகிய போதே குலங்கள் தோற்றம் பெற்றன. இங்கு குலங்கள் என்பது இரத்த உறவாய் இணைக்கப் பெற்ற கடும்பங்களின் தொகுப்பாகும். இக் குலத்தில் குலத்தின் தலைவர் புராதன குடும்பத்தின் மூத்த ஆண் மகனாவார். இதன் அடிப்படையில் வந்ததே கோத்திர அரசாகும்.

கோத்திர அரசின் பண்புகள்

1. பலமிக்க நபர்களால் ஆட்சி தீர்மானம் எடுக்கும் குழு தோற்றம் பெறுதல்.
2. குழுக்கள் மூலம் குலத்தின் ஒற்றுமையினை பேணிக் கொள்ள முடிந்தது.
3. குலத்தின் ஆட்சியில் தலைமைத்துவ தலைவர் ஒருவர் இருப்பார்.
4. தலைமைத்துவ தலைவருக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரம் இருத்தல்.
5. சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் தலைவரின் அரசியல் அதிகாரம் கிடைக்கின்றது.
6. தலைவரின் குடும்பம் உட்பட ஏனையவர்களான குடும்பமும் ஒற்றுமையாக இருந்தது.
7. சமூகத்தில் உணவு மற்றும் ஏனைய தேவைகள் தன்னிறைவு பெற்றிருத்தது.
8. கோத்திர அரசுகளில் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், வணக்கங்கள் சம்பிரதாயங்களின் அடிப்படையில் அமைந்தது.

A.C.M. Faleel (MA)

(ஆ) நவ தாராளவாத அரசின் பண்புகள்

1991 களில் சோவியத் யூனியனின் சோசலிச முறையில் ஏற்பட்ட வீழ்ச்சியும், உலக மயமாக்கத்தின் தோற்றமும், நலன்புரி அரசின் தோல்வியும், முதலாளித்துவ பொருளாதாரத்தின் எழுச்சியுமே உருவாக்கிய புதிய தொரு எண்ணக்கருவே நவ தாராண்மைவாத அரசாகும்.

நவதாராள கருத்தை முன்வைத்தவர்கள் றொபேட் நோசிக், பெட்றிக்வோன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். அத்துடன் Friedrich Hayek, Milton,Friedman, James, M.C. Bunchanan ஆகியோரின் சிந்தனைகளும் இவ்வெண்ணக்கருவின் வளர்ச்சிக்கு உதவியிருந்தது.

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் நவதாராண்மைவாத அரசு முதலில் நடைமுறைக்கு வந்தது. பின்னர் பொலிவியா, சிலி, மெக்சிக்கோ, நியூசிலாந்து, தென்கொரியா, தாய்வான் போன்ற நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

நவ தாராண்மைவாத அரசின் பணிகள்

1. அரசு நிர்வாகத்தை மட்டும் செயற்படுத்தல்.
2. சுதந்திர சந்தைக்கான சூழலை ஏற்படுத்தல்.
3. நீதியை நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்.
4. முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தை தொடர்ந்தும் கொண்டு செல்வதற்கு தேவையான அனைத்து நிலைமைகளையும் உருவாக்குதல்.

நவ தாராண்மைவாத அரசின் பண்புகள்

1. அரசு பொருளாதார மற்றும் சமூகச் செயற்பாடுகளில் மட்டுப்படுத்தப்பட்ட தலையீட்டைச் செலுத்தல்.
2. அரசு தலையிடா வாதம் மற்றும் அரச நலன்புரி வாதம் ஆகிய இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையாக இருக்கலாம்.
3. நபர்களின் சொத்து தொடர்பான உரிமை முக்கியமானதால் அதனை இல்லாது செய்யக்கூடாது.
4. அரச அதிகாரம் பொலிஸ் அதிகாரத்திற்கு மேற்பட்டதாக இருக்கக் கூடாது.
5. நலன்புரி திட்டங்களை முற்றாக உதிர்த்தல்.
   (உ - ம்) : இலவசக் கல்வி, இலவச சுகாதாரம், வறுமை நிவாரணம்
6. அமுக்கத்திற்குட்பட்டவர்களின் வாழ்வுரிமைகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக பாதுகாத்தல்.
7. நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரச அதிகாரமானது மிகவும் குறைந்தளவில் பயன்படுத்தப்பட வேண்டும்.
8. சர்வதேச பொருளாதாரத்தை இயக்கும் முழுமையான பொறுப்பினை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், சர்வதேச வர்த்தகச் சங்கம் மற்றும் பல்தேசிய கம்பனிகள் போன்ற சர்வதேச அமைப்புக்களால் மேற்கொள்ளப்படும்.

(இ) சமவுடமை அரசு

19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற மாக்ஸிசவாத கருத்தியலே இதன் அடிப்படையாகும். மாக்ஸிச வாதம் என்பது கார்ள் மாக்ஸ், ஏங்கள்ஸ் என்பவர்களின் சிந்தனையால் கட்டியெழுப்பட்டதாகும்.

A.C.M. Faleel (MA)

19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்றிருந்த முதலாளித்துவ மற்றும் லிபரல் வாத அரச மாதிகளுக்கு மாற்றீடாகவே சமவுடைமை வாத அரசு கட்டியெழுப்பப்பட்டது.

முரண்பாடு இல்லாத, சுரண்டல் இல்லாத, வகுப்பு வாதம் இல்லாத, சமத்துவமான சமூகத்தை கட்யெழுப்புவதே சமவுடமை அரசின் நோக்கமாகும்.

சமவுடமை அரசொன்றில் பிரசைகளின் வாழ்க்கைத் தரத்தினை அபிவிருத்தி செய்வதிலேயே அதிக கரிசனை கொள்ளப்படுகின்றது. கல்வி, தொழில், வீடு, உணவு, சுகாதாரம் போன்ற அடிப்படை மனித தேவைகளை அனைவருக்கும் சமமான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் சமவுடமை அரசின் பொறுப்பாகும்.

சமவுடமை அரசு லிபரல் ஜனநாயக அரசில் இருந்து முற்றிலும் வேறுபட்ட சமவுடைமை அரசின் உரிமையாளர்கள் தொழிலாளர் வர்க்கமாகும். இங்கே தாழ்த்தப்பட்ட மக்களின் நலனே முக்கியமாக கருதப்படும்.

1917ம் ஆண்டு அக்டோபர் புரட்சியின் பின்னர் சோவியத் யூனியனும் , 1949ம் ஆண்டு சீனாவும் சமவுடைமை அரசுகளாக தோற்றுவிக்கப்பட்டது. இதேபோல் கியூபா, வடகொரியா, வியட்னாம், கம்போடியா போன்ற நாடுகளிலும் சோசலிச அரசுகள் உருவாக்கப்பட்டன. 2ம் உலக மகா யுத்தத்தை தொடர்ந்து போலாந்து, ஹங்கேரி, செக்கோஸ்லோவாக்கியா, யூகோஸ்லாவியா, அல்பேனியா, ரூமேனியா, பல்கேரியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சமவுடைமையாக அரசு நிறுவப்பட்டது. ஆனால் சில நாடுகளில் மட்டும் சமவுடமைவாத அரசு நடைமுறையில் இருக்கின்றது.

சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் சமவுடைமை வாதம் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் சமவுடைமை அரசு, லிபரல் ஜனநாயக அரசாக மாறவில்லை.

சோசலிச அரசு என்பது கம்யூனிச சமூக முறைமையை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டு முதலாளித்துவ அரசு முறைக்கும் கம்யூனிச சமூக முறைக்கும் இடையில் அரசின் செயற்பாட்டை காண முடிவதோடு அரசியல் மற்றும் பொருளாதார முறைகளை முகாமைப்படுத்துவதற்கு சோசலிச கொள்கைகள் பயன்படுத்தப்படுகின்றன. அக்கொள்கைகளாவன,

1. கம்யூனிச கட்சியின் தனித்த தலைமைத்துவம், தனிக்கட்சித் தலைமைத்துவம்.
2. கம்யூனிசக் கொள்கையின் படி ஒழுங்கமைந்த அரசியல் தாபன முறைமை கம்யூனிச கட்சியின் உறுப்பினர்கள் மட்டும் இத் தாபனங்களுக்கு தெரிவு செய்யப்படுவர்.
3. கம்யூனிசக் கட்சியின் விதிப்புகளின் படியே அரசியல் நிறுவனங்கள் செயற்படும்.
4. தனிப்பட்ட முறையிலன்றி கூட்டுறவு முறையின் அடிப்படையில் சமூக முறை ஒழுங்கமைதல்.
5. தனியார் சொத்துடைமைக்குப் பதிலாக பொதுச் சொத்துடைமை நிலவுதல்.
6. திறந்த சந்தையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி மற்றும் பங்கீட்டு முறைக்குப் பதிலாக மத்திய மயப்படுத்தப்பட்ட திட்டமிடல் முறையின் அடிப்படையிலான உற்பத்தியும் பங்கீடும் செயற்படுதல்.
7. அரசியல் உரிமைகளுக்கன்றி பொருளாதார உரிமைகளுக்கு முதலிடம் அளித்தல். இதன் பொருள் தனியார் சொத்துடைமையன்றி பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவதாகும்.

இச் சகல கொள்கைகளும் சோசலிச அரசியல் மனிதனுக்கும் அரசுக்குமுள்ள தொடர்பின் இயல்பை நிர்ணயிக்கும் காரணியாகும். இவற்றின் இறுதியிலக்கு தனிமனிதனன்றி சமூகமாகும். லிபரல்வாத நோக்கில் பார்க்கும் போது மனிதனுக்கும் அரசுக்குமுள்ள தொடர்போடு சம்பந்தப்பட்ட பெரும்பாலான

A.C.M. Faleel (MA)

சித்தாத்தங்களை சோசலிச அரசில் காணமுடியாது. உதாரணமாக தனிமனிதனுக்கும் அவனது செயற்பாட்டிற்கும் முதலிடமளித்தல், சொத்துச் சுதந்திரம். அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் சுதந்திரம், அரசியல் வெளியீட்டுச் சுதந்திரம் போன்றவற்றை மனிதன் தனது சுய விருப்பின்படி மேற்கொள் வதற்கு சுதந்திரம் பெற்றதில்லை. இதன்படி சோசலிச முறையில் மனிதன் அரசின் அடிமையாக மாறுகின்றான். கம்யூனிசக் கட்சியின் விருப்பின் படியே அரசு செயற்படும் அரசின் ஊடாக வெளியிடப்படும் கம்யூனிசக் கட்சியின் விருப்புக்கு எதிராக மனிதனோ சமூகமோ எதனையும் செய்ய முடியாது.

(ஈ) பூகோளமயமாக்கம் அரசுகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம்.

உலகமயமாதல் என்ற எண்ணக்கரு கடந்த ஒரு தசாப்த காலமாக மிகப் பிரபல்யம் பெற்றதும் உலகின் அனைத்து நடவடிக்கைகளிலும் ஊடுருவி வியாபித்துள்ளதுமான ஒரு விடயமாக காணப்படுகின்றது. உலகை ஒரு இடமாக அல்லது ஒரு சூழல் தொகுதியாகக் கொண்டு சகல செயற்பாடுகளையும் ஒருமித்த ஒரு அலகில் நகர்த்திச் செல்லக்கூடிய செயற்பாட்டின் ஒருங்கிணைப்பாக உலகமயமாதல் காணப்படுகின்றது.

பொதுவாக உலக மக்கள் வாழ்கின்ற புவியியல் நிலத்தோற்றங்கள், அவற்றில் வாழும் மக்கள் அனைவரினதும் பொருளாதார, சமூக, கலாசாரம், அரசியல், தொடர்பாடல் ஆகிய அம்சங்களின் இடைத்தொடர்பின் ஒருங்கிணைப்பின் வளர்ச்சியே உலகமயமாக்கல் என வரையறுக்கப்படுகின்றது.

மேலும் உலக மயமாக்கல் என்பதனை வரையறை செய்யும் போது தொலைத் தொடர்பு, போக்குவரத்து, தகவல் தொழிநுட்பம், அரசியல், பண்பாடு ஆகிய துறைகளின் முன்னேற்றங்களினால் உந்தப்பட்டு உலக சமூகங்களுக்கிடையே தொடர்புகள் அதிகரிக்கின்றன. உலகமய சூழலில் ஒரு சமூகத்தின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு நிலைமைகளும் நிகழ்வுகளும் கூடிய விகித தாக்கத்தை ஏதுவாக்குகின்றன. உலகமயமாதல் வரலாற்றில் ஒரு தொடர் நிகழ்வுதான். ஆனால் இன்றைய சூழல் உலகமயமாதலை கோடிட்டு காட்டுவதாக அமைகின்றது.

மேலும் இது உலகமயமாதல், கோளமயமாதல், புவிமயமாதல், பூகோளமயமாதல், அகிலமயமாதல், பூகோள கிராமம் ஆகிய பதங்களால் அழைக்கப் படுகின்றன. கோளமயமாதல் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தும் பிரதான காரணியாக அமைவது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மூலம் கிடைத்த பாரிய வளர்ச்சியாகும்.

ஆரம்பத்தில் பொருளாதார துறையில் பிரயோகிக்கப்பட்ட இப்பதமானது இன்று சமூக, கலாசார, அரசியல் துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் உலகமயமாக்கம் என்பதனை பொருளாதாரம், அரசியல், சமூக அடிப்படையில் முழு உலகிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அமைப்பு ரீதியான மாற்றங்கள் என இலகுவான விதத்தில் வரைவிலக்கணப்படுத்தலாம். உலகமயமாக்கலானது எல்லைகள் அற்ற விதத்தில் சகல நாடுகளும் ஒரு அலகாக்கப்பட்டு அங்கு நவீன தொழில்நுட்பம், தொலைத் தொடர்பு வலைப்பின்னலால் பின்னிப்பிணைந்து உலகை ஒரு கிராமமாக மாற்றியுள்ள தோடு இதனுடன் இணைந்த விதத்தில் நாடுகளின் எல்லைகளும் மங்கிச் செல்கின்றமை நோக்கத்தக்கது.

இந்த உலக மயமாக்கல் செயன்முறையானது சகல மனித செயற்பாடுகளையும் கண்டங்கள் மற்றும் பிராந்தியங்களுக்கு இடையில் வலைப்பின்னல் அமைப்பாகவும் காணப்படுகின்றது. இவ்வகையில் புவியியல் சார்ந்த வகையில் உலக மயமாக்கல் என்பது கண்டங்கள், நாடுகள், பிரதேசங்கள் என்றவாறாக புவியியல் எல்லைகளற்ற திறந்து விடப்பட்ட ஒரு பொது வெளியில் (உலகப் பிரதேசம் என்ற அலகில்) மேற்கொள்ளப்படுகின்றது மக்களது சகல நடவடிக்கைகளுமே குறிப்பிடப்படுகின்றது.

A.C.M. Faleel (MA)

உலக மயமாதல் மூலம் முன்னேற்றமடைந்த அரசுகள் ஏனைய அரசுகள் மீது அரசியல் ரீதியாகத் தமது செல்வாக்கினை செலுத்த முற்படுவதைக் காணலாம். சந்தைகளை முகாமை செய்தல், பொருளாதார தடைகளை விதித்தல், பல்வேறு பண்பாடுகள் ஒன்று சேர்தல், ஆட்சியினை தீர்மானித்தல் போன்றன உலகமயமாக் கலினால் இடம் பெறுகின்றன. அதே போன்று உலக வல்லரசுகள் உலகச் சந்தையில் தமது ஆதிக்கங்களை நிலை நிறுத்துவதற்காகவும் உலகமயமாதலைப் பயன்படுத்த முற்படுகின்றனர். அபிவிருத்தியடைந்துவரும் அரசுகள் மீது குறைந்த பட்ச அரசு பற்றிய புதிய சிந்தனையினை பரவச் செய்தல் என்ற பண்பும் உலக மயமாக்கல் மூலம் நடைபெறுகின்றது. உதாரணமாக பொலிவியா, சிலி, மெக்சிக்கோ, நியுசிலாந்து, இந்தியா, தென்கொரியா, தாய்வான் போன்ற நாடுகளில் குறைந்த பட்ச அரசுக் கொள்கை நடைமுறையில் உள்ளது.

உலகமயமாக்கலினால் நடைமுறையில் உள்ள தேசிய அரசுகள் சற்று பிரச்சினைக்குள்ளாகியுள்ளது என்ற கருத்தை பிரான்சிய நாட்டில் பேராசிரியர் Jean Marie Gehenno கூறியுள்ளார். இவர் தனது நூலான The End of The Nation State என்ற நூலில் கூறுகையில். ''உலக மயமாக்கலினால் ஆள்புலத்தின் அடிப்படையில் அமைந்த தேசிய அரசுகளுக்கு தற்போது இருப்பு இல்லை என்றும் தேச எல்லைகளில் அர்த்தமில்லை என்றும் மூலதனத்திற்கு, தகவல்களுக்கு, தொழில் நுட்பம் மற்றும் மனிதர்களின் நிறுவனங்களின் வலையமைப்புகளுக்கு தேசிய அரசுகளின் எல்லை அவசியப்படமாட்டாது என்று கூறுகின்றார். எனவே உலகமயமாதல் தேசிய அரசுகளின் எல்லைகளைக் கருத்திற் கொள்ளாமலே செயற்படுகின்றது என்பது விளங்குகின்றது.

உலகமயமாக்கலின் விளைவாக தேசிய அரசுகள் பலவீனமடைந்துள்ளது. தேசிய அரசுகள் பலவீனமடைதலின் பொருள் யாதெனில் உலக மூலதனம் அரசின் கட்டுப்பாட்டிலிருந்தும் அரச நிருவாகத்திலிருந்தும் விடுபட்டு சுயாதீனமடைந்துள்ளன என்பதாகும். உலக மயமாக்கலினால் மந்திரிசபை, ஜனாதிபதி, அரசன் என்பவர்களின் நிருவாகத்திற்கு உட்படாத புதிய உலகப் பொருளாதார முறைமை கட்டியெழுப்பப் பட்டுள்ளது என்பது நோக்கத்தக்கது.

பகுதி - II

04. இலங்கையில் காலனித்துவ நிலைமாற்றங்கள் தொடர்பான பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

(அ) காலனித்துவ இரட்டைப் பொருளாதாரம்.

(ஆ) சர்வஜன வாக்குரிமையின் அறிமுகத்தினால் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் விளைவுகள்

(இ) இனவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்படல்.

(அ) காலனித்துவ இரட்டைப் பொருளாதாரம்.

ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்ட போட்டி ரீதியான நில சந்தையில் கோப்பி, சிங்கோனா, தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை போன்ற வர்த்தகப் பயிர்களில் முதலீடு செய்தனர். இதற்கு தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்பட்ட போதும் எதிர்பார்த்தது போன்றே தேயிலை பெருந்தோட்டக் கைத்தொழிலின்பால் இன்நாட்டு பாரம்பரிய மக்கள் அந்தளவுக்கு விருப்பம் காட்டவில்லை. அவர்கள் தாங்கள் பழக்கப்பட்ட தங்குநிலை விவசாயத்திலேயே ஈடுபட்டனர். காலணித்துவ அரசு விஞ்ஞான ரீதியான பயன்பாடு, இயந்திர மயப்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதன் மூலம் பெருந்தோட்ட உற்பத்தியை ஊக்கப்படுத்தியது. இதன் விளைவாக இலங்கையின் பொருளாதாரம் இரட்டைப் பொருளாதாரமாக தோற்றம் பெற்றது. ஒன்று தங்கு நிலைப் பொருளாதாரம் மற்றையது சந்தைப் பொருளாதாரமாகும்.

A.C.M. Faleel (MA)

வர்த்தக கைத்தொழில்களினால் இந்நாட்டு சமூகத்தோடு சிறந்த முறையில் ஒத்திசைந்து செல்ல இந்தியத்தமிழர் என்ற பிரிவினர் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். ஆரம்பத்தில் கரைநாட்டுச் சிங்களவர் இதற்குத்தேவையான உழைப்பினை வழங்கினாலும் வளர்ச்சியடைந்த தொழிலாளர் படையின் கேள்வி காரணமாக வெளிநாட்டுத் தொழிலாளர்களை கொண்டுவருவதற்கான தேவை உருவானது என நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றார்.

பிரித்தானிய அரசாங்கம் பெருந்தோட்டச் செய்கையில் காண்பித்த ஆர்வத்தை விவசாயத்தில் காட்டுவதற்கு சந்தர்ப்பம் வழங்கவில்லை. அப்படி இருந்தாலும் ஆரம்பகால ஆளுநர்களான நேர்த், மெயின்லன்ட் போன்றவர்கள் நீர்ப்பாசனத்தை புணரமைத்து நெற்பயிர்ச்செய்கையை விருத்தியாக்குவதற்கு முயற்சித்தாலும் அது அவ்வளவு தூரம் வெற்றிகரமாக அமையவில்லை.

பெருந்தோட்ட செய்கையின் விருத்திக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தங்குநிலை பயிர்ச்செய்கையில் பல்வேறு விதங்களில் பாதிப்பு செலுத்தியதனால் விவசாயிகளை மோசமான தாக்கத்திற்கு உட்படுத்தியது. 1848ம் ஆண்டில் ஆங்கிலேயருக்கு எதிரான இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் பங்குபற்றியோர் விவசாயிகளேயாவர்.

(ஆ) சர்வஜன வாக்குரிமையின் அறிமுகத்தினால் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் விளைவுகள்

டொனமூர் ஆணைக்குழுவினர் இலங்கைக்கு வழங்கிய சீர்திருத்தங்களுள் புரட்சிகர மான ஓர் சீர்திருத்தம் சர்வஜன வாக்குரிமையாகும். இதன் மூலம் ஆசியாவிலே முதன் முதல் சர்வஜன வாக்குரிமையைப் பெற்றுக் கொண்ட ஒரு நாடு என்ற வகையிலே இலங்கை பிரதான இடத்தை பெறுகின்றது. தற்கால ஜனநாயக கோட்பாடுகளின்படி வாக்குரிமை என்பது ஒரு ஜனநாயக உரிமையாக கருதப்படுகிறது. இதன் மூலம் மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்து பிரதிநிதித்துவ ஆட்சி முறையினைக் கொண்டு நடத்த ஏதுவாகின்றது. பிரதிநிதியைத் தெரிவு செய்யும் உரிமையை மொத்த சனத்தொகையினரும் பெற்றுக் கொண்டால் அது சர்வஜன வாக்குரிமை என அழைக்கப்படுகின்றது. வாக்குரிமை என்பது கட்டுப்பாடற்ற வகையில் ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானதாக இடம் பெறின் அதுவே சர்வஜன வாக்குரிமை என அழைக்கப்படுகின்றது.

டொனமூர் ஆணைக்குழுவினர் சொத்து, கல்வி, நிதி என எந்த ஒரு தகுதியினையும் விதிக்காது வாக்குரிமையினை அனைவருக்கும் பொதுவானதாக திறந்து விட்டனர். 1924ம் ஆண்டு மெனிங் அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் வாக்குரிமை பல வரையறைகளுக்குட்பட்டிருந்தது.

அதன்படி ஆங்கிலத்துடன் தமிழ் அல்லது சிங்களத்தில் எழுத வாசிக்கத் தெரிந்தோரும் குறிப்பிட்ட சொத்து தகைமை பெற்றோருமே வாக்குரிமையை அனுபவிக்கலாம் என்று விதிக்கப்பட்டிருந்தது. சொத்து தகைமையின்படி ஒரு வருடத்திற்கு ரூபா 600.்.ஞீ குறையாத வருமானத்தைப் பெறுபவர்கள் அல்லது 1500.்.ஞீ பெறுமதியான அசையாச் சொத்துக்களை உடையவரும் வாக்குரிமையை அனுபவிக்கலாம் எனக் கூறப்பட்டது. ஆனால் டொனமூர் ஆணைக்குழுவினர் இந்த தகுதிகளை நீக்கிவிட்டு 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவான வகையிலேயே வாக்குரிமையை வழங்கினர். இதன் மூலம் முதன் முதலாக இலங்கையில் சாதாரண குடிமகனும் அரசியல் உரிமையை பெறமுடிந்தது.

சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட பின் வாக்காளராக பதியப்பட்ட தொகை பன்மடங்கு அதிகரித்து காணப்பட்டது. 1924ம் ஆண்டில் 209,997 ஆக இருந்த வாக்காளர் தொகை 1936ம் ஆண்டில் 2096254 ஆக காணப்பட்டது. 1947ம் ஆண்டில் வாக்காளர் தொகை 3,048,145 ஆக காணப்பட்டது. அதேவேளையில் 1960ம் ஆண்டில் 3,724,507 ஆகவும் 1970ம் ஆண்டில் 5,505,028 ஆகவும் 1982ஆம் ஆண்டு 8144995ஆகவும்,

A.C.M. Faleel (MA)

1994ஆம் ஆண்டில் 10,937,279 ஆகவும், 1999ஆம் ஆண்டில் 11,779,180 ஆகவும் ,2011 ஆண்டில் 14,268,064 ஆகவும் வாக்காளர் தொகை அதிகரிக்கபட்டிருந்தது.

டொனமூர் ஆணைக்குழுவினர் இலங்கையில் சர்வஜன வாக்குரிமையை வழங்கிய தனால் அரசியல், பொருளாதார, சமூக விளைவுகள் தொடர்ச்சியாக ஏற்பட்டது.

(1) பொறுப்புக் கூறும் அரசாங்கத்திற்குக் பழக்கப்படுதல் :-

அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிப்பவர்கள் சர்வஜன வாக்குரிமையின் மூலம் மக்களுக்குப் பொறுப்புக் கூறுவதில் பழக்கப்பட்டனர். தாம் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளை பொறுப்புடன் நிறைவேற்றாது விட்டால் மக்கள் ஆதரவு தமக்கு கிட்ட மாட்டாது என அரசியல் வாதிகள் விளங்கிக் கொண்டமையால் மக்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்குத் தலைப்பட்டனர்.

(2) பிரதிநிதித்துவ ஜனநாயத்திற்கு மக்கள் பழக்கப்படுதல் :-

தேர்தல் செயன்முறையின் மூலம் தமது ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கும் நீக்குவதற்கும் மக்கள் பழக்கப்படுவதில் சர்வசன வாக்குரிமை பாதிப்புச் செலுத்தியது.

(3) சமூக மாற்றம் துரிதம் அடைதல் :-

இதன் பொருள் அமுக்கத்திற்கும் உட்பட்ட சனக்குழுவினர் சர்வஜன வாக்குரிமையின் மூலம் பெற்றுக் கொண்ட சக்தியினால் தலைதூக்க ஆரம்பித்தனர். குறிப்பாக நாட்டில் பலமாக நிலவிய சாதி முறை உடைவுக்கு உட்படுவதில் சர்வஜன வாக்கு ரிமை அதிகம் பாதிப்புச் செலுத்தியது.

(4) சமூகப் பொதுநலன் வேகமாக விருத்தி பெற்றமை :-

சர்வஜன வாக்குரிமையின் விளைவாக அரசியல் வாதிகளின் இருப்பு பொது மக்களில் தங்கியிருக்கும் ஒன்றாக மாறியமையால் மக்கள் ஆதரவை அதிகமாகப் பெற்றுக் கொள்வதற்கு அரசியல் வாதிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு பொதுநலச் செயற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்தமையை டொனமூர் முறையின் கீழ் காணலாம். இலவசக் கல்வியின் ஆரம்பம், பாடசாலை மாணவர்க ளுக்கு மதிய உணவு வழங்கல், சுகாதார சேவைளும் சமூக சுகாதார சேவைகளும் பரவலடைதல், உட்கட்டமைப்பு விருத்தியடைதல், தொழிலாளர் நலச் சட்டங்கள் பிறப்பிக்கப்படல், விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமை போன்ற பொதுநலச் சேவைகள் பல சர்வசன வாக்குரிமை காரணமாக ஆரம்பமாகியது.

(5) அரசியல் பங்குபற்றலில் ஏற்பட்ட அபிவிருத்தி :-

சர்வஜன வாக்குரிமையின் விளைவாக படிப்படியாக இலங்கை மக்களின் அரசியல் பங்குபற்றுதல் அதிகரித்தது. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டிருந்த போது மொத்த சனத் தொகையில் 4% மானோர் மட்டுமே அவ்வுரிமையை அனுபவித்தனர். புதிய மாற்றத்தின் விளைவாக 21 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அவ்வுரிமையினை பெற்றுக்கொண்டு அரசியலில் பங்குபற்றலாயினர். இவ்வகையில் 1931ம் ஆண்டு 57.96% வீதமானோரும் 1936யில் 54.69% வீதமானவர்களும் தேர்தலில் வாக்களித்தனர். இதேபோல 1982ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 81.06% வீதமானவர்களும் 1988ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 55.32% வீதமானவர்களும் 1994ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 70.52% வீதமானவர்களும் 1999ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 73.31% வீதமானவர்களும் 2010ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 74.5% வீதமானவர்களும் வாக்களித்துள்ளனர்.

A.C.M. Faleel (MA)

(6) அரசியல் கட்சிகளின் தோற்றத்துக்கான தளம் இடப்பட்டமை :-

டொனமூர் அரசாங்க முறையின் செயற்பாட்டிற்கு அரசியல் கட்சி தேவைப்பட வில்லை. மேலும் டொனமூர் அரசாங்க முறை அரசியல் கட்சிகள் தோன்றுவதை அதைரியப்படுத்தியது. ஆனால் சர்வஜன வாக்குரிமையின் விளைவாக வாக்காளர் களை ஒழுங்குபடுத்துவதற்கு அரசியல் கட்சிகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவ்வகையில் டொனமூர் யாப்புக்கு முன்னர் தோன்றிய கட்சிகளை குறிப்பிடுவோமாகவிருந்தால்.

1. லங்கா சமசமாஜக் கட்சி *(LSSP)* - 1935
2. இலங்கை கம்யூனிசக் கட்சி *(CP)* - 1943
3. பொல்சோவிக் லெனிசியக் கட்சி *(BLP)* - 1945
4. இலங்கை இந்திய காங்கிரஸ் *(CIC)* - 1939
5. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் *(ACTC)* - 1944
6. ஐக்கிய தேசியக் கட்சி *(UNP)* - 1946

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் இன்னும் பல கட்சிகள் தோன்றலாயிற்று.

1. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி *(SLFP)* - 1951
2. ஜனதா விமுக்தி பெரமுன *(JVP)* - 1964
3. இலங்கை தமிழரசுக் கட்சி
4. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் *(CWC)*

(7) சர்வஜன வாக்குரிமையால் ஏற்பட்ட பிறிதொரு விளைவு தேர்தல் ஊழல் குறைந்து செல்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டமை. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை இடம் பெற்ற காலத்தில் மக்கள் தமது வாக்குரிமையை துஷ்பிரயோகம் செய்யும் நிலை காணப்பட்டது. மக்களிடம் அரசியல் அறிவு காணப்படாமையால் தமது வாக்குகளை பணத்திற்கும் மதுபானத்திற்கும் விற்கும் நிலை காணப்பட்டது. அவ்வாறான ஊழல்களைத் தடுக்கும் நோக்கிலும் சர்வஜன வாக்குரிமை புகுத்தப்பட்டது. இதன் மூலம் ஊழல்கள் ஓரளவு குறைந்தன. முன்பு வாக்களரின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையால் பணத்தை வீசி வாக்காளரின் வாக்குகளைப் பெறமுடிந்தது. ஆனால் பெரும்பாலானவர்கள் வாக்குரிமையைப் பெற்றமையினால் பணத்தின் மூலம் விலைக்கு வாங்க முடியாமல் போனது. இந்த ஊழல்கள் டொனமூர் காலத்தில் படிப்படியாக குறைந்து சென்றது.

(இ) இனவாரிப் பிரதிநிதித்துவ் ஒழிக்கப்படல்.

1931 ஆண்டின் டொனமூர் அரசியல் சீர்திருத்தங்களின் மூலம் ஏற்படுத்தப்பட்ட அம்சங்களுள் இனரீதியான பிரதிநிதித்துவ முறை ஒழிக்கப்பட்டமை முக்கியமான ஒரு

அம்சமாகும். 1833 கோல்புறூக் கமரன் சீர்திருத்தங்களின் மூலம் இலங்கைக்கு இன ரீதியான பிரதிநிதித்துவம் அறிமுகஞ் செய்யப்பட்டது. சட்டவாக்க கழகத்தின் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் இன அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். பின்னர் 1910ல் சீர்திருத்தங்களின் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் முறை அறிமுகஞ் செய்யப்பட்டாலும் 1910, 1921 மற்றும் 1924 அரசியல் யாப்பு சீர்திருத்தங்களில் இனவாரி பிரதிநிதித்துவம் எனும் அம்சம் காணப்பட்டு வந்தது.

மேற்படி இனரீதியான பிரதிநிதித்துவ அம்சமானது இலங்கையில் பல்லின சமூகத்தவர் மத்தியில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தி இருந்ததோடு அதன் பாதிப் புக்களை டொனமூர் விசாரணைக் குழுவினர் தமது விசாரணைகளின் போது தெளிவாக அறிந்திருந்தனர். எனவே இவ்வினரீதியான பிரதிநிதித்துவ முறை,

1. இலங்கைச் சமூகத்தில் சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக சமூகப் பிளவை தோற்றுவித்தமை.
2. தேசிய ஒற்றுமைக்கும் ஐக்கியத்துக்கும் தடையாக காணப்பட்டமை.
3. அரசியலில் மக்கள் தொடர்பும் விருப்பங்களும் வெளிப்படுத்தப்படாத நிலை போன்ற விளைவுகளை தோற்றுவித்திருந்தது.
4. நாட்டு மக்களின் திறமையான ஆற்றலை சிதைக்கின்றது.

இதன் காரணமாக இனரீதியான பிரதிநிதித்துவ முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்திற்கு டொனமூர் குழுவினர் வந்தனர். அதற்கமைய இனரீதியான பிரதிநிதித்துவ முறையை நீக்கிவிட்டு பிரதேச வாரிப் பிரதிநிதித்துவ முறை டொனமூர் யாப்பின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டது.

இப்பிரதிநிதித்துவ முறையின் மூலம் மத்தியதர வர்க்கத்தினரின் கட்டுண்டிருந்த சில்லோராட்சி அரசியல் அதிகாரம் கட்டவிழ்க்கப்பட்டு பரவலடைந்தது. மேலும் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு நெருக்கமடைந்ததுடன் ஆட்சி நிர்வாகத்தில் மக்களின் பங்குபற்றலும் வளர்ச்சி அடைந்தது. மேலும் இதனூடாக இனவாத பிரதிநிதித்துவ அரசியல் பண்பு நீக்கப்பட்டு ஜனநாயகப் பிரதிநிதித்துவப் பண்புகளையுடைய அரசியல் முறையாக இலங்கை மாற்றமுற லாயிற்று.

05. சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றத்தினதும் 1972ம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியல் யாப்பின் கீழமைந்த தேசிய அரசுப் பேரவையினதும் சட்டவாக்க அதிகாரங்களை ஒப்பிடுக.

சோல்பரி யாப்பின்படி சட்டத்துறை பாராளுமன்றம் என அழைக்கப்பட்டது. பிரித்தானிய பாராளுமன்ற மாதிரியை ஒத்ததாகவே சோல்பரி பாராளுமன்றம் காணப்பட்டது. இதன்படி மக்கள் பிரதிநிதிகள் சபை, செனட் சபை ஆகிய இரண்டு நிறுவனங் களையும் உள்ளடக்கியதாகவே சோல்பரி பாராளுமன்றம் காணப்பட்டது.

மக்கள் பிரதிநிதிகள் சபை

சோல்பரி பாராளுமன்றத்தின் பிரதான நிறுவனம் மக்கள் பிரதிநிதிகள் சபையாகும். இதனை கீழ்சபை எனவும் முதலாம் மன்றம் எனவும் அழைக்கப்படும். இதன் உறுப்பினர் களின் எண்ணிக்கை பற்றி சோல்பரி அரசியலமைப்பில் திட்டவட்டமாக குறிப்பிடப் படவில்லை. ஒவ்வொரு குடிசன மதிப்பீட்டின் பின்னரும் தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவினால் தேர்தல் தொகுதிகளைப் பிரிப்பதன் மூலம் உறுப்பினர் களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட வேண்டும் என அரசியலமைப்பில் குறிப்பிடப் பட்டிருந்தது. சோல்பரி அரசியலமைப்பு நடைமுறையில் இருந்த காலத்தில் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒரே வகையில் காணப்படவில்லை. தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும் போது 75,000 மக்களுக்கு ஒரு பிரதிநிதி மற்றும் 1000 சதுர மைல்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற வகையில் உறுப்பினர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டது.

1947 - 1959 காலம் வரை உறுப்பினர்களின் எண்ணிக்கை 101 ஆகும். இவர்களுள் 95 உறுப்பினர்கள் தேர்தல் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். எஞ்சிய 06 உறுப்பினர்களும் போதிய

A.C.M. Faleel (MA)

பிரதிநிதித்துவத்தைப் பெறாத சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் பிரதமரின் சிபாரிசின் பெயரில் மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். மேற்படி 101 உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் 1947, 1950, 1956 தேர்தல்கள் மூலம் உறுப்பினர்கள் பிரதிநிதிகள் சபைக்கு தெரிவு செய்யப் பட்டனர். 1960களின் பின்னர் அரசியலமைப்பு நடைமுறையில் இருந்த காலப் பகுதியில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 157 ஆக அதிகரிக்கப்பட்டது. அவர்களுள் 151 உறுப்பினர்கள் நேரடியாக மக்களின் வாக்குகள் மூலமாகவும் ஏனைய 06 உறுப்பினர் களும் பிரதமரின் சிபாரிசின் பெயரில் மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். இக் காலப்பகுதியில் நான்கு பொதுத் தேர்தல்கள் முறையே 1960 மார்ச், 1965 ஜுலை, 1970 ஆகிய வருடங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 157 ஆக காணப்பட்டது.

குறிப்பிட்ட பிரதேசத்தில் கணிசமான அளவு சிறுபான்மை இன மக்கள் செறிந்து வாழுகின்ற போது அம் மக்களின் பிரதிநிதித்துவத்தை பெறுவதற்காக அப்பிரதேசங்கள் பல அங்கத்தவர் தொகுதிகளாக மாற்றப்பட்டன. அதன்படி ஆரம்ப காலகட்டத்தில் கொழும்பு மத்திய 3 அங்கத்தவர் தொகுதியாகவும், கொழும்பு தெற்கு, பதுளை, பலாங்கொடை என்பன இரட்டை அங்கத்தவர் தொகுதிகளாகவும் உருவாக்கப்பட்டன. பின்னர் 1959களில் தேர்தல் தொகுதிகள் அதிகரிக்கப்பட்ட போது பதுளை, பலாங்கொடை என்பன ஒற்றை அங்கத்தவர் தொகுதிகளாக மாற்றமுற்றன. மேலும் மட்டக்களப்பு, மூதூர், அக்குறணை ஆகிய தேர்தல் தொகுதிகள் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளாக மாற்றப்பட்டன.

தொழிற்பாடு

பிரதிநிதிகள் சபையின் பதவிக்காலம் பாராளுமன்ற பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் நடைபெறும் முதலாவது கூட்டத்தொடரிலிருந்து 05 வருடங்கள் என அரசியல மைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் 05 வருடங்களுக்கு முன்பாகவே பிரதமரின் ஆலோசனை சிபாரிசின் அடிப்படையில் பிரதிநிதிகள் சபையை மகாதேசாதிபதியினால் கலைக்கலாம் என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. சோல்பரி அரசியலமைப்பில் சட்டத்துறையான பாராளுமன்றம் மக்கள் பிரதிநிதிகள் சபை, செனட் சபை என இரு சபைகளைக் கொண்டுள்ள போதிலும் அதிகாரம் பொருந்திய சபையாக, பாராளு மன்றமாக தொழிற்பட்டது மக்கள் பிரதிநிதிகள் சபையாகும்.

மக்கள் பிரதிநிதிகள் சபைக்கான தேர்தல் முடிவடைந்து இடம் பெறுகின்ற முதலாவது கூட்டத்தில் அதிக ஆசனங்களைப் பெற்ற ஆளும் கட்சியின் சிம்மாசன பிரசங்க உரை மகாதேசாதிபதியால் வாசிக்கப்படும். இச் சிம்மாசன பிரசங்க உரை உறுப்பினர்களால் வாக்கெடுப்பின் மூலம் ஏற்றுக் கொள்ளப்படும் போது தொடர்ந்து சபையைக் கொண்டு செல்வதற்காக சபாநாயகர் தெரிவு செய்யப்படுவார். சபாநாயகர் தெரிவு இடம் பெற்றதன் பின்னர் உப சபாநாயகர், குழுக்களின் தலைவர்கள், குழுக்களின் உப தலைவர்கள் தெரிவு செய்யப்படுவர். சபையின் கூட்டங்களுக்கும், குழுக்களின் கூட்டங்களுக்கும் அவை தொடர்பான ஒழுங்கு விதிகளுக்கும், சபாநாயகர் மற்றும் குழுக்களின் தலைவர்களும் பொறுப்பாக காணப்படுவர். மாறாக பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்து வருகின்ற முதலாவது கூட்டத் தொடரில் வெற்றி பெற்ற ஆளுங் கட்சியின் சிம்மாசன பிரசங்க உரை தோல்வியடைகின்ற பட்சத்தில் அடுத்த பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற கட்சித் தலைவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். சிம்மாசன பிரசங்க உரை விவாதத்தில் வெற்றி பெறுகின்ற போது பாராளுமன்றத்துக்கான சபாநாயகர், உப சபாநாயகர், குழுக்களின் தலைவர்கள், குழுக்களின் இரண்டாவது பெரும்பான்மை பெற்ற கட்சியின் சிம்மாசன பிரசங்க உரை தோல்வியடைகின்ற பட்சத்தில் மகாதேசாதிபதி பாராளுமன்றத்தை கலைத்து அடுத்த தேர்தல் நடைபெறு வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வார்.

அதிகாரம்

01. அரசியலமைப்பின் 29ஆம் (2) உறுப்புரை பாதிக்காத வகையில் எந்த சட்டத்தையும் உருவாக்குகின்ற அதிகாரம் பிரதிநிதிகள் சபைக்கு வழங்கப்பட்டது.
02. நிதி மசோதாவை ஆரம்பித்து வைத்தல். இவ்வதிகாரம் செனட் சபைக்கு வழங்கப் படவில்லை. எனவே பிரதிநிதிகள் சபைக்கு வழங்கப்பட்டுள்ள முதன்மையானதும் தனித்துவமானதுமான அதிகாரமாகும்.
03. செனட் சபையால் நிராகரிக்கப்படுகின்ற சட்ட மூலங்களை மீண்டும் நிறைவேற்றிக் கொள்ளலாம்.
04. அரசியலமைப்பில் திருத்தங்களை கொண்டு வருதல் அதிகாரம்.
05. நாட்டின் பிரஜா உரிமை பிரச்சினை பற்றி இறுதி முடிவெடுத்தல்.
06. செனட் சபையில் உள்ள 15 உறுப்பினர்களை தனிமாற்று வாக்குமுறை மூலம் தெரிவு செய்தல்.
07. வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரித்தல் அல்லது மறுத்தல்.
08. மந்திர சபைக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரல்.
09. அமைச்சர்களிடம் கேள்வி கேட்டல்.
10. திணைக்களங்கள் பற்றி கேள்வி கேட்டல்.
11. நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் மந்திரி சபையை நீக்குதல்.
12. அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்து பதவி நீக்குதல்.
13. சிம்மாசன பிரசங்க உரையை அங்கீகரித்தல்.
14. உயர் நீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கும் தீர்மானம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்படல்.
15. சோல்பரி யாப்பின் உறுப்புரை 29(1) இன் பிரகாரம் இலங்கைத் தீவின் அமைதி, பாதுகாப்பு மற்றும் நல்லாட்சிக்காக சட்டவாக்கம் செய்வதற்கு பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டு.

மேலே குறிப்பிட்ட அதிகாரங்கள் இருந்தாலும் சட்டவாக்க அதிகாரத்தின் மீது சில வரையறைகளும் விதிக்கப்பட்டிருந்தன. அவை,

01. உறுப்புரை 29(2) இன் அ - ஈ வரையிலான உப பிரிவுகள் சட்டவாக்க அதிகாரத்தை கட்டுப்படுத்துகின்றது.
    (அ) எந்தவொரு சமயத்தையும் சுதந்திரமாக வழிபடுவதை தடுக்கும் சட்டங்களை உருவாக்க முடியாது.
    (ஆ) எந்தவொரு இனக்குழுவையோ, சமயத்தையோ சேர்ந்தவர்களும் ஏனைய இனக் குழுக்களையும் சமயத்தையும் சேர்ந்தவர்களுக்குமிடையே மோதலை உருவாக்கும் சட்டங்களை உருவாக்க முடியாது.
    (இ) எந்தவொரு இனக்குழுவுக்கோ, சமயத்தைச் சேர்ந்த ஆட்களுக்கோ வழங்கப்படாத சலுகைகள் மற்றும் வசதிகளை பிறிதொரு இனக் குழுவுக்கு, சமயத்தைச் சேர்ந்த ஆட்களுக்கு வழங்க முடியாது.
    (ஈ) எந்தவொரு சமய நிறுவனத்தினதும் யாப்பினை அதன் ஆளுநர் சபையின் அனுமதியின்றி மாற்றக்கூடாது.

    மேலே குறிப்பிட்ட சோல்பரி யாப்பின் 29(2)வது உறுப்புரையை மீறும் வகையில் பாராளுமன்றம் சட்டங்களை இயற்ற முடியாது. அப்படி இயற்றினாலும் அது செல்லுபடி அற்றதாகவே கணிப்பிடப்படும். இந்த உறுப்புரையை மீறும் வகையில் சட்டம் கொண்டு வரப்பட்டால் மகாதேசாதிபதி அச்சட்டங்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது. இது மாத்திரமன்றி இவ்வுறுப்புரையை மீறும் எந்தவொரு சட்டத்தையும் இலங்கையின் எந்தவொரு நீதிமன்றத்தின் மூலமும் செல்லுபடியற்றதாக்க முடியும்.

02. பிரதிநிதிகள் சபையின் சட்டவாக்க அதிகாரத்தை கேள்விக்குட்படுத்தும் பிறிதொரு ஏற்பாடு அரசியலமைப்பின் 39ம் உறுப்புரையாகும். இவ்வுறுப்புரை அரசியலமைப்பின் மீது கொண்டுவரப்படும் மாற்றத்தின் மூலம் இலங்கையின் கடன் தொடர்பாக ஏற்படக்கூடிய விவைுகளிலிருந்து பாதுகாப்பதாகும். எனினும் இவ் 39 உறுப்புரை பிரதிநிதிகள் சபையின் சட்டவாக்க அதிகாரத்தில் பாரியளவிலான தாக்கத்தை செலுத்தவில்லை. தேவை ஏற்படுகின்ற போது $^{2}/_{3}$ பெரும்பான்மை மூலம் அதனைப் பாராளுமன்றத்தினால் இரத்துச்செய்து கொள்ள முடிந்தது.

03. பாராளுமன்றின் சட்டவாக்க அதிகாரத்தின் மீதான பிரதான தடை நீதித்துறையின் நீதிப் புனராய்வு அதிகாரமாகும். பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தை அரசியலமைப்புக்கு முரணானது என்ற விளக்கம் கூறி, அச்சட்டத்தை தள்ளுபடி செய்யும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கும் இறுதியாக பிரித்தானிய கோமறைக் கழகத்திற்கும் வழங்கப்பட்டிருந்தது. இவ்வதிகாரம் தொடர்பான சிறந்த எடுத்துக் காட்டு 1962ம் ஆண்டு அரசிற்கு எதிரான புரட்சி சதி வழக்குத் தீர்ப்பாகும்.

04. சோல்பரி யாப்பின் இரண்டாம் உறுப்புரை.
இலங்கைப் பாராளுமன்றம் வேண்டுகோள் விடுப்பின் இலங்கை தொடர்பாக சட்டவாக்க செய்வதற்கு பிரித்தானியப் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என இவ்வுறுப்புரை குறிப்பிட்டது.

05. இலங்கைப் பாராளுமன்றம் நிறைவேற்றும் சில மசோதாக்கள் சட்டமாவதற்கு பிரித்தானிய முடியின் அங்கீகாரத்தை நேரடியாகப் பெற வேண்டும் என்றும் சில சட்டங்களுக்கு தேவைப்பட்டால் முடியின் பிரதிநிதியான மகாதேசாபதி அனுமதி வழங்க மறுக்கலாம் என்றும் கூறப்பட்டமை. (1946 அரச கட்டளைச் சட்டம் 39 ஆம் சரத்து) 06 மக்கள் பிரதிநிதிகள் சபையினதும் செனட் சபையினதும் உறுப்பினர்கள் பிரித்தானிய முடிக்கு நம்பிக்கை தெரிவிப்பவர்களாக சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்க வேண்டும். (மேலே 25வது சரத்து)

மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளின்படி சோல்பரி யாப்பின் கீழ் பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டமையால் இப் பாராளுமன்றம் இறைமை பொருந்தியதாக காணப்படவில்லை.

முதலாம் குடியரசு யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட அம்சங்களுள் முதன்மையானதும் பலம் வாய்ந்ததுமாக இருப்பது அதன் சட்டத்துறையாகும். இதனை தேசிய அரசுப் பேரவை என அழைக்கப்பட்டது. முதலாம் குடியரசு யாப்பில் அறிமுகம் செய்யப்பட்ட தேசிய அரசுப் பேரவை ஒரு மன்றமாக காணப்பட்டது. பாராளுமன்றத்தின் உயர் தன்மையை நிலைநிறுத்திய ஓர் யாப்பாக இது காணப்படுவது சிறப்பம்சமாகும்.

தேசிய அரசுப் பேரவையிடம் சட்ட, நிருவாக, நீதி அதிகாரங்கள் குவித்து காணப்பட்டமையால் மிக உயர்ஸ்தாபனமாக காணப்பட்டது. சட்டத்துறையில் இயற்றப்படும் சட்டங்களை மறுபரிசீலனை செய்யும் அதிகாரம் சோல்பரி யாப்பில் சாதாரண நீதி மன்றங்களுக்குகூட காணப்பட்டது. ஆனால் இவ் அரசியல் யாப்பில் அவை நீக்கப்பட்டு தேசிய அரசுப் பேரவை பூரண இறைமை கொண்ட சபையாக மாற்றப்பட்டது.

தேசிய அரசுப் பேரவையின் பதவிக்காலம் 06 வருடங்களாகும். உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றி தெளிவான வரையறை குறிப்பிடப்படவில்லை. மக்கள் தொகை, நிலப்பரப்பு அடிப்படையாகக் கொண்டு எளிய பெரும்பான்மை மூலம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். 1970களில் இடம்பெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் உறுப்பினர்கள் தொகை 157 ஆக காணப்பட்டது. பின்னர் இத்தொகை 168 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசுப் பேரவையின் சட்டவாக்கம் தொடர்பான அதிகாரம்

1972ம் ஆண்டய குடியரசு யாப்பு தேசிய அரசுப் பேரவைக்கு சட்டவாக்கம் தொடர்பான பூரண அதிகாரத்தை வழங்கியுள்ளது. தேசிய அரசுப் பேரவை எந்தச் சட்டத்தையும் இயற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உறுப்புரை 03 பிரகாரம் இறைமை அதிகாரம் மக்களுக்குரியது என குறிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் இறைமையை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் தேசிய அரசுப் பேரவைக்கு வழங்கப்பட்டிருந்தது.

மக்களின் சட்டவாக்க அதிகாரத்தைப் பெற்ற தேசிய அரசுப் பேரவைக்கு குறிப்பாக நீதி அதிகாரம் உரித்தாகையால் நீதித்துறை தேசிய அரசுப் பேரவைக்கு கீழ்ப்பட்டது. எனவே தேசிய அரசுப் பேரவையின் சட்டவாக்க அதிகாரத்தை வரையறுக்கக் கூடிய எவ் அதிகாரத்தையும் நீதித்துறை கொண்டிருக்கவில்லை. அதாவது, நீதிப் புனராய்வு அதிகாரம் 1ம் குடியரசு யாப்பில் நீதித்துறைக்கு வழங்கப்படவில்லை. இதன் காரணமாக தேசிய அரசுப் பேரவையின் ஒரு சட்ட மசோதா அல்லது ஒரு சட்டம் அரசியல் யாப்புக்கு முரணாக காணப்பட்ட போதிலும் அதனை செல்லுபடி யற்றதாக்கும் அதிகாரம் நீதித்துறைக்கு வழங்கப்படவில்லை. அதன் மூலம் அரசியல் யாப்பை மீறி சட்டவாக்கம் செய்யும் அதிகாரம் தேசிய அரசுப் பேரவைக்கு வழங்கப் பட்டுள்ளது.

1972ம் ஆண்டய அரசியமைப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவை சட்டவாக்க அதிகாரம் மிக்க ஒரு நிறுவனமாக தொழிற்பட்டமையை யாப்பு ரீதியாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளதை பின்வரும் அம்சங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

01. யாப்பின் உறுப்புரை 03 இன்படி குடியரசின் இறைமை மக்களிடத்திலுள்ளதுடன் உறுப்புரை 04 இன்படி மக்களின் இறைமை மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய அரசுப் பேரவையினால் பிரயோகிக்கப்படும்.
02. உறுப்புரை 05 இன்படி தேசிய அரசுப் பேரவை குடியரசின் மீயுயர் கருவியாகும். அது முத்துறை அதிகாரங்களையும் கொண்டிருந்தது. அது மக்களின் சட்டவாக்க அதிகாரத்தை நேரடியாகவும் நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை மூலமும் நீதித்துறை அதிகாரத்தை சட்டத்தால் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்களினாலும் பிரயோகித்தது.
03. தேசிய அரசுப் பேரவை இறைமை மிக்க நிறுவனம் என்ற வகையில் சட்டவாக்க அதிகாரத்தை எவ்வாறு நிறைவேற்றும் என்றும் யாப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. உறுப்புரை 44 இன்படி தேசிய அரசுப் பேரவையின் சட்டவாக்க அதிகாரம் உயர்ந்ததாகும். அது அரசியல் யாப்பை முற்றாக அல்லது பகுதியளவில் நீக்குவதற்கும் மாற்றீடு செய்யும் வகையில் புதிய யாப்பொன்றினை உருவாக்குவதற்குமான அதிகாரத்தையும் உள்ளடக்கியிருந்தது.
04. உறுப்புரை 45 இன்படி தேசிய அரசுப் பேரவை இவ்வதிகாரத்தை கையளிக்கவோ துறக்கவோ ஆகாது.
05. உறுப்புரை 48(2) இன்படி தேசிய அரசுப் பேரவை நிறைவேற்றும் சட்டங்களின் செல்லுபடியாகும் தன்மையை எந்தவொரு நீதிமன்றமோ? ஆளோ? அதிகாரியோ? விசாரிப்பதற்கும் கருத்துரை மற்றும் தீர்ப்புக் கூறுவதற்கும் கேள்விக்கிடமாக்குவதற்கும் அதிகாரம் பெறவில்லை.

எனவே, தேசிய அரசுப் பேரவை சோல்பரி பாராளுமன்றத்தைவிட அதிகாரங்கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

A.C.M. Faleel (MA)

06. 1978ம் ஆண்டு யாப்பின் 18ம், 19ம் திருத்தத்தோடு தொடர்புபடுத்தி பின்வரும் இரண்டினைப் பரிசீலிக்குக.

(அ) ஜனாதிபதியும் பாராளுமன்றமும்.

(ஆ) ஜனாதிபதியும் அமைச்சரவையும்.

(இ) ஜனாதிபதியும் நீதித்துறையும்

(அ) ஜனாதிபதியும் பாராளுமன்றமும்.

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதி பாராளுமன்றத்தின் அங்கத்த வரொருவர் அல்லர். எவ்வாறாயினும் அரசிலயமைப்பின் விதிகளின் படி சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சட்டத்துறையுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. அமைச்சரவையின் தலைவரும், அதன் அங்கத்தவர் என்ற வகையில் சனாதிபதி சட்ட மூலங்கள் தயாரிப்பதில் தொடர்புடையவராக இருப்பார். அதனாலேயே சட்டமூலங்கள் உருவாக்குவதில் சனாதிபதியே அடிப்படையானவராகின்றார். அதே போன்று பாராளு மன்றுக்கு சமர்ப்பிக்க உத்தேசித்துள்ள சட்ட மூலங்களின் சட்டவாக்கத் தன்மையினை ஆய்வு செய்வதற்காக உயர் நீதிமன்றுக்கு ஆற்றப்படுத்தும் அதிகாரம் சனாதிபதிக்கே உண்டு. சட்டமூலமொன்று பாராளுமன்றில் விவாதத்திற்கு உட்படுத்தும் போது அச்சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் பங்குபற்றவும் முடியும்.

சட்ட மூலம் ஒன்றை மக்கள் கருத்துக்கணிப்பிற்கு முன்வைப்பதற்குள்ள அதிகாரம் உள்ள ஒரே நபர் சனாதிபதியாவார். இதற்கமைய பின்வரும் சட்ட மூலங்களை கருத்துக் கணிப்பிற்கு உட்படுத்துவதற்கான அதிகாரம் சனாதிபதியிடம் காணப்படுகின்றது.

01. பாராளுமன்றத்தில் $^{2}/_{3}$ பெரும்பான்மையால் மட்டுமன்றி மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பொன்றிலும் நிறைவேற்றப்பட வேண்டிய சட்டமூலங்களையும்.

02. ஜனாதிபதியின் கருத்துக்கமைவாக நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த எவ்விடயமான சட்ட மூலங்களையும்.

மக்கள் கருத்துக் கணிப்பு முறை மூலம் பாராளுமன்றத்தின் உபாய முறைகளையும் தாண்டி சனாதிபதி மக்களின் அனுமதியினை பெற்றுக்கொள்ள முடியும். இது சட்ட உருவாக்கத்தின் போது சனாதிபதியின் அதிகாரத்தை அதிகரிப்பதற்கு துணையாக அமைவதோடு பாராளுமன்றத்தின் இறைமைக்கு சவாலாக அமைகின்றது.

03. சனாதிபதி பாராளுமன்றின் ஓர் உறுப்பினர் அல்லாதவராக இருப்பதாலும் பொறுப்பினை மீறும் பொழுது அது தொடர்பான கேள்விகளை எழுப்பி அப்பொறுப் பினை நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றுக்கே அதிகாரம் வரையறுக்கப் பட்டதாக இருந்தது. ஆனால் 19ம் திருத்தத்தின்படி ஜனாதிபதி பாராளுமன்றத் திற்கு பொறுப்புக் கூறக்கூடியவராக காணப்படுகிறார்.

04. உறுப்புரை 65(1) இன்படி பாராளுமன்றின் செயலாளர் நாயகம் ஜனாதிபதியினாலேயே நியமிக்கப்பட வேண்டும். 19வது திருத்தத்தின்படி அரசியல் அமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தை பெற்றதன் பின்னர் செயலாளர் நாயகத்தை நியமிப்பார்.

05. உறுப்புரை 65(5) இன்படி பாராளுமன்றின் செயலாளர் நாயகத்தின் பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் அவரை பதவியிலிருந்து நீக்குமதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு. ஆனால் அவ்வதிகாரத்தை,

(அ) உறுப்புரை 65(5, ஈ) இன்படி செயலாளர் நாயகம் நோய்வாய்ப்படுதல், உடல் உள ரீதியாக பலவீனமுற்றிருத்தல்.

(ஆ) உறுப்புரை 65(5, உ) இன்படி செயலாளர் நாயகத்திற்கு எதிராக பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் ஒரு பிரேரணை ஒன்றின் மீது ஜனாதிபதியினால் பதவி நீக்கம் செய்யலாம்.

06. உறுப்புரை 65(6) இன்படி செயலாளர் நாயகம் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும் போது அவருக்குப் பதிலாக பணிபுரிவ தற்கென பிறிதொருவரை நியமிக்கும் அதிகாரத்தையும் ஜனாதிபதி பெற்றுள்ளார். 19வது திருத்தத்தின் கீழ் உறுப்புரை 32(03) இன்படி ஜனாதிபதி தமது பதவிக்குரிய அதிகாரத்தின் பேரில் 03 மாதங்களுக்கு ஒரு முறை பாராளுமன்றுக்கு சமூகமளிக்க வேண்டும். இப்பணியை நிறைவேற்றும் போது ஜனாதிபதி பாராளுமன்றத்தில் வாக்களிக்கும் உரிமையைத் தவிர பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குள்ள எல்லா சிறப்பு உரிமைகளும், தத்துவங்களும் இவருக்கு உண்டு.

07. 33(4) இன்படி ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கும், செய்திகளை அனுப்புவதற்கும் அதிகாரம் உள்ளவராகக் காணப்படுகிறார்.

08. மூல யாப்பின் உறுப்புரை 70(1) இன்படி பாராளுமன்றத்தைக் கூட்டுதல், ஒத்தி வைத்தல், கலைத்தல் போன்ற அதிகாரங்களையும் பெற்றுள்ளார். ஆனால் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தல் விடயத்தில் சில கட்டுப்பாடுகள் யாப்பின் 19வது திருத்தத்தில் விதிக்கப்பட்டுள்ளது.

(உ - ம்):

மூல யாப்பின் 70(1) உறுப்புரையின் படி ஒரு பொதுத் தேர்தல் நடைபெற்று ஒரு வருடகாலம் பூர்த்தியானதன் பின்னர் பாராளுமன்றினை கலைக்கும் தற்துணிவு அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றிருந்தார். 19ஆம் திருத்தச் சட்டத்தின் படி 70(1) உறுப்புரையின் பிரகாரம் மூல யாப்பின் மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகள் அகற்றப்பட்டி ருப்பதுடன் பாராளுமன்றம் முதலாவதாக கூடிய தினத்திலிருந்து 04 வருடங்களும் 06 மாதங்களும் பூர்த்தியானதன் பின்னரே ஜனாதிபதி தமது தற்துணிவின் படி பாராளுமன்றினை கலைக்க முடியும்.

இருந்தாலும் பாராளுமன்றத்தின் மொத்த எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) உறுப்பினர்களின் $^{2}/_{3}$ பெரும்பான்மையோர் பாராளுமன்றத்தை கலைக்கும்படி தீர்மானத்தை வேண்டினால் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கலாம்.

யாப்பின் 70(3) யின்படி பாராளுமன்றத்தின் அமர்வை இரண்டு மாத காலத்திற்கு மேற்படாத வகையில் ஒத்திவைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதோடு அடுத்த அமர்வுக்கான ஒரு திகதியையும் நிர்ணயித்தல் வேண்டும். மேற்படாத வகையில் ஒத்திவைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதோடு அடுத்த அமர்வுக்கான ஒரு திகதியையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(உ - ம்) :

ஜே.ஆர். ஜெயவர்த்தனா 07 தடவையும், ஆர். பிரேமதாச 04 தடவையும், சந்திரிக்கா குமாரதூங்க 05 தடவையும், மஹிந்த ராஜபக்ஷ 03 தடவையும், மைத்திரிபால சிறிசேன 02 தடவையும் பாராளுமன்றத்தின் அமர்வை ஒத்திவைத்துள்ளனர்.

யாப்பின் 70(3) 1 இன் படி பாராளுமன்றத்தின் அமர்வு ஒத்திவைக்கப்பட்டதிலிருந்து (மூன்று நாட்களின் பின்னர்) எந்த நேரத்திலேனும் ஒரு பிரகடனத்தின் மூலம் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு அதிகாரம் உண்டு.

உறுப்புரை 70(7) யின்படி கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை எந்த நேரத்திலேனும் நெருக்கடி நிலை ஒன்று எழுந்துள்ளது என ஜனாதிபதி திருப்திப் பட்டால் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு அழைப்பதற்கு அதிகாரம் உண்டு.

A.C.M. Faleel (MA)

09. ஜனாதிபதி அரச கொள்கைத் தத்துவத்தை பாராளுமன்றத்தில் வாசித்தல் பாராளுமன்ற சடங்கு முறையான கூட்டத் தொடருக்கு தலைமை தாங்குதல், எந்நேரமும் பாராளுமன்றிற்குச் சென்று உரைநிகழ்த்தல் போன்ற அதிகாரத்தையும் பெற்றுள்ளார்.

இவ்வாறு 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் சனாதிபதிக்கும் பாராளு மன்றத்தை கட்டுப்படுத்துவதற்கான இயலுமை காணப்பட்டாலும் கூடப் பாராளு மன்றுக்குச் சனாதிபதியைக் கட்டுப்படுத்தும் இயலுமை காணப்படவில்லை. ஆனால் ஜனாதிபதியை ஒரு குற்றப் பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம் மட்டுமே பாராளுமன்றத்தினால் பதவி நீக்கம் செய்ய முடியும். இது மிக சிக்கலானதும், கடினமானதுமான செயல்முறை ஆகும். இருந்தாலும் அரசியல் யாப்பின் 19வது திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதியின் தன்னிச்சையான அதிகாரம் வரையறை செய்யப்பட்டுள்ளது.

01. பாராளுமன்றத்தை $4^1/_2$ஆண்டுகளுக்கு முன்னர் தற்துணிவாக கலைக்க முடியாது.
02. பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறக்கூடியவராகக் காணப்படுகிறார்.
03. பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்படும் அரசியல் யாப்பு சட்டமல்லாத வேறு சட்டமொன்றை மக்கள் தீர்ப்புக்கு விட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரம் ஒழிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஜனாதிபதியும் அமைச்சரவையும்.

- 1978 யாப்பின்30(1) சரத்தின் படி இலங்கைக் குடியரசின் ஜனாதிபதி அரசினதும், அரசாங்கத்தினதும் நிறைவேற்றுத் துறையினதும் தலைவரும் ஆயுதம் தரித்த படைகளின் படைத்தளபதியுமாவார்.
- 42(1) சரத்துப்படி குடியரசின் அரசாங்கத்தை நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்து வதற்கும் பொறுப்பாக்கப்பட்ட ஓர் அமைச்சரவை இருத்தல் வேண்டும். 42(2) அமைச்சரவை பாராளுமன்றுக்கு கூட்டாகப் பொறுப்புக் கூறுவதற்கும் மறுமொழி கூறுவதற்கும் கடமைப்பட்டதாகும்.
- 42(3) சரத்தின்படி ஜனாதிபதி அமைச்சரவையின் ஓர் உறுப்பினராக இருப்பதோடு அதன் தலைவராகவும் இருப்பார். இந்த ஏற்பாட்டிற்கு அமைவாகவே ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்கும் இடையிலான தொடர்பு ஏற்படுகிறது.
- அமைச்சரவை தொடர்பாக ஜனாதிபதியின் பங்கு பிரதமர் பதவிக்கு ஒருவரை நியமிப்பதோடு ஆரம்பமாகிறது. 42(4) பாராளுமன்றில் அதிக நம்பிக்கையில் எந்த உறுப்பினர் பெற்றிருக்கின்றாரோ அந்த உறுப்பினரை ஜனாதிபதி பிரதமராக நியமிக்க வேண்டும்.
- மூல யாப்பின் ஏற்பாட்டின்படி அமைச்சரவையினை நியமிக்கும் போது அமைச்சர்கள், அமைச்சரவையல்லாத அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் என்போர் தொடர்பான எண்ணிக்கையில் வரையறைகள் விதிக்கப்படவில்லை. ஆனால் 19ஆம் திருத்தச் சட்டத்தின்படி 46(1) உறுப்புரை அது தொடர்பான வரையறைகளை விதித்துள்ளது. அதன்படி,
- 46((1)அ) அமைச்சரவை அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை முப்பதாக இருத்தல் வேண்டும்.
- 46((1)ஆ) அமைச்சரவை உறுப்பினரல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர் களினதும் கூட்டுமொத்த எண்ணிக்கை நாற்பதாக இருத்தல் வேண்டும்.
- எனினும் தேசிய அரசாங்கமொன்றினை தாபிக்கும் பொழுது மேற்குறிப்பிட்ட அமைச்சர்களின் எண்ணிக்கையானது பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் என்று 19ஆம் திருத்தச்சட்டத்தின் 46(4) உறுப்புரை குறிப்பிடுகிறது.

(உ - ம்) :

- 2015ம் ஆண்டு 08ம் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசிய முன்னணியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் சேர்ந்து தேசிய அரசாங்கத்தை அமைத்த போது அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், பாராளுமன்றத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு 30 கபினட் அமைச்சர்களைவிட அதிகமானோரும் 40 பிரதி அமைச்சர் களைவிட அதிகமானோரும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டனர். இந்த தேசிய அரசாங்கத்தில் இருந்து UPFA விலகிக் கொண்டதால் 26.10.2018ம் திகதி தேசிய அரசாங்கம் கலைக்கப்பட்டது. இதன் பின்னர் தேசிய அரசாங்கத்தில் உள்ள அமைச்சரவையும் கலைந்து பிரதமரின் பதவியும் ஒழிந்தது.
- 43(1)வது சரத்தின்படி ஜனாதிபதி காலத்துக்கு காலம் பிரதம அமைச்சரின் கலந்தா லோசனையுடன் அமைச்சரவையில் அமைச்சுக்களினதும் அமைச்சர்களதும் எண்ணிக்கையையும் அத்தகைய அமைச்சர்களுக்கு குறித்து ஒதுக்கப்படவுள்ள பணிகளையும், விடயங்களையும் தீர்மானித்தல் வேண்டும். 43(3)ஆவது சரத்துப்படி ஜனாதிபதி எந்த நேரத்திலும் அமைச்சரவையின் விடயங்க ளினதும், பணிகளினதும் குறித்தொதுக்கல்களையும், அமைப்பையும் மாற்றலாம்.
- ஜனாதிபதி பிரதம அமைச்சரின் மதியுரையின் பேரில் பாராளுமன்ற உறுப்பினர் களிலிருந்து அமைச்சரவையின் உறுப்பினர்கள் அமைச்சரவை அல்லாத அமைச்சர் களையும், பிரதி அமைச்சர்களையும் நியமிப்பார். மூல யாப்பின் 47ஆம் உறுப்புரையின் படி அமைச்சர்களையும், பிரதியமைச்சர் களையும் பதவி நீக்கம் செய்யும் தற்துணிவு அதிகாரம் ஜனாதிபதிக்கு உரிதாக்கப் பட்டிருந்தாலும் 19ஆம் திருத்தச் சட்டத்தின் 46(3) உறுப்புரை அவ்வதிகாரத்தினை இல்லாதொழித்துள்ளது. இங்கு அமைச்சரவையின் அமைச்சர்கள் அமைச்சரவை அல்லாத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என்போரை பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தினை ஜனாதிபதி பிரதமரின் ஆலோசனையின் பேரிலேயே செய்தல் வேண்டும்.
- மூல யாப்பின் 44 உறுப்புரையின் படி ஜனாதிபதி தமது தற்துணிவின் பெயரில் பிரதமரை பதவி நீக்கம் செய்ய முடியும். ஆனால் 19 வது திருத்தச்சட்டத்தின் 46(2) உறுப்புரையின் படி தமது கையொப்பத்தையிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கும் கடிதத்தின் மூலம் தமது பதவியை துறந்தால் ஒழிய, பாராளுமன்ற உறுப்பினராக இல்லாதொழிந்தால் ஒழிய, அமைச்சரவை கலைந்தால் ஒழிய, பிரதமர் தொடர்ந்தும் தமது பதவியினை வகித்தல் வேண்டும். இதன்படி ஜனாதிபதி தனது தற்துணிவின் பேரில் பிரதமரை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் இல்லா தொழிக்கப்படுகின்றது.

  மேற்குறிப்பிட்ட ஏற்பாட்டின்படி, பிரதமர் மற்றும் அமைச்சரவை தொடர்பாக அதுவரை காலம் நிலவிய ஜனாதிபதிக்குரிய அதிகாரம் நீக்கப்பட்டு, பிரதமரின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன.

  அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதி ஆவார். அதன்படி அமைச்சரவை கூட்டங்களை ஜனாதிபதியே அழைப்பார். ஜனாதிபதியே அமைச்சரவைக் கூட்டங் களுக்கு தலைமை தாங்குவார். அமைச்சரவைக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலையும் அவரே தயாரிப்பார். முக்கியமான ஒரு கொள்கைத் தீர்மானத்தை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்ககாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்று எவரேனும் ஓர் அமைச்சர் கருதுவாராயின் அவ்விடயத்தை முதலாவதாக ஜனாதிபதியிடம் சமர்ப்பித்து அவரின் கருத்துக்களை அறிய வேண்டும்.
- மூல யாப்பில் ஜனாதிபதி அமைச்சரவையின் தலைவராயினும் அமைச்சரவை பாராளுமன்றுக்குக் கூட்டாகப் பொறுப்புக்கூற வேண்டும். ஆதலால் 19ம் திருத்தத் தின்படி ஜனாதிபதியும், பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்று திருத்தம் கூறுகின்றது.
- அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்கப்படும் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்படுவதன் மூலமும் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனமோ அல்லது வரவு, செலவுத் திட்டமோ பாராளுமன்றில் தோல்வியுறுவதன் காரணமாகவும் அமைச்சரவை கலைந்து செல்லுமாயினும் அந்நிலை ஜனாதிபதியின் பதவியிலும் இருப்பிலும் பாதிப்பு செலுத்த மாட்டாது.

A.C.M. Faleel (MA)

♦ மேற்குறிப்பிட்ட விடயங்களைத் தொகுத்துப் பார்க்கும் போது அமைச்சரவையின் அமைவுச் சேர்க்கையைத் தீர்மானித்தல், அமைச்சர்களை நியமித்தல், அவர்களுக்கு பொறுப்புக்களையும் பணிகளையும் ஒப்படைத்தல், அரசாங்கத்தின் கொள்கைகளைத் தீர்மானித்தல் போன்ற விடயங்களில் ஜனாதிபதியின் அதிகாரம் வரையறுக்கப் பட்டுள்ளதாக தெரிகிறது.

(இ) ஜனாதிபதியும் நீதித்துறையும்

1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்படி ஜனாதிபதி நிறைவேற்றுத் துறைக்கு பொறுப்பாக இருப்பினும் அவர் நீதித்துறையுடனும் தொடர்புக் கொண்டவராகவே காணப்படுகின்றார். இலங்கை நீதித்துறை கட்டமைப்பில் முதல் இரண்டு நீதி மன்றங்களும், உயர்நிலை நீதிமன்றங்கள் எனவும் ஏனையவை கீழ்நிலை நீதி மன்றங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

1972 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புடன் ஒப்பிடும் போது 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்படி ஜனாதிபதி நீதித்துறை மீது அதிக அதிகாரம் உடையவராக காணப்படுகின்றார். ஆனால் அரசியல் அமைப்பின் 19ஆம் திருத்தத்தின் மூலம் அமைக்கப்பட்ட அரசியல் அமைப்புப் பேரவையின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் ஓரளவு தளர்வடைந்தாலும், நீதித்துறை மீது பல்வேறு வகையில் செல்வாக்கு செலுத்து பவராக காணப்படுகின்றார்.

பிரதம நீதியரசர் உட்பட ஏனைய உயர் நீதிமன்ற நீதியரசர்களும், மேன் முறையீட்டு நீதிமன்ற தலைவர் உட்பட ஏனைய மேன்முறையீட்டு நீதியரசர்களும், நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள் போன்றோர்களை அரசியல் அமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கு அமைவாக ஜனாதிபதி நியமனம் செய்வார். உதாரணமாக அரசியல் அமைப்பு போரவையின் அங்கீகாரத்துக்கு அமைவாக 02.03.2017 இல் பிரதம நீதியரசராக பிரியாசாத் டைப் என்பவரை ஜனாதிபதி நியமித்தார்.

♦ 107(4) சரத்து பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்றின் ஏனைய நீதியரசர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் மற்றும் ஏனைய நீதியரசர்கள் ஜனாதிபதியின் முன்னால் சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னரே பதவி ஏற்பார்.

♦ 107(2) ஆம் சரத்து - உயர் நீதிமன்றில் அல்லது மேன்முறையீட்டு நீதி மன்றில் நீதியரசர் ஒருவர் பாராளுமன்றில் சமூகமளிக்காத உறுப்பினர் உட்பட பெரும்பான்மை பகுதியினரின் அனுமதியுடன் நிறைவேற்றப்படும் ஒரு பிரேரணை மூலம் பதவி விலக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

உதாரணம் 01 : பிரதம நீதியரசராக இருந்த ஸ்ரீரியாணி பண்டார நாயக்கா பாராளுமன்றத்தின் $^{2}/_{3}$ பெரும்பான்மை உறுப்பினர்களின் சம்மதத்துடன் ஜனாதிபதியினால் 2012ம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

உதாரணம் 02 : பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்ட மொஹான் பீரிஸ் சட்டத்துக்கு முரணாக முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஸவால் நியமிக்கப்படடார். பின்னர் இந்நியமனம் பிழையானது எனக் கருதி 2015ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவினால் நீக்கப்பட்டார்.

♦ 109(1) ஆம் சரத்து - உயர் நீதிமன்றில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றில் தற்காலிகமாக ஏற்படும் வெற்றிடங்களுக்கு 42(இ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதில் பணிபுரிதலின்படி நீதியரசர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

- 110(1) ஆம் சரத்து உயர் நீதிமன்றில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதியரசர் ஒருவருக்கு வேறு எழுதப்பட்ட ஒரு சட்டத்தின் கீழ் வேறு ஒரு பணியை நிறைவேற்றுமாறு பணிப்பதற்கு சனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.
- 110(3) ஆம் சரத்து உயர் நீதிமன்றில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றில் நிரந்தர சேவையில் பதவி வகித்த ஒரு நீதியரசர் இளைப்பாறியதன் பின்னர் ஜனாதிபதியின் எழுத்து மூலமான சம்மதமின்றி சட்டத்தொழிலில் ஈடுபடுதலாகாது.
- 111(2) ஆம் சரத்து - ஜனாதிபதி மேல் நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்கின்றார். அத்துடன் ஜனாதிபதி நீதிச்சேவை ஆணைக்குழுவின் சிபாரிசுடன் அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுவார். மேலும் அவர்கள் ஜனாதிபதியின் விடயக் கட்டுப்பாட்டி ற்கும் உட்படுவார்.
- 34(1) ஆம் சரத்து - குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு அதன்படி,
    1. பூரண மன்னிப்பை அல்லது சட்ட ரீதியான நிபந்தனையின் பேரிலான மன்னிப்பை வழங்குதல்.
    2. வழங்கப்பட்ட தண்டனையை நடைமுறைப்படுத்தும் தினத்தை திகதி குறிப்பிடாது அல்லது குறிப்பிட்டு பிற்போடுதல்.
    3. வழங்கப்பட்ட தண்டனைக்குப் பதிலாக தளர்த்தப்பட்ட தண்டனையை வழங்குதல்.
    4. வழங்கப்பட்ட தண்டனையை முழுமையாக அல்லது பகுதியளவில் தளர்த்தலும், அத்துடன் விதிக்கப்பட்ட தன்டப் பணத்தை முழுமையாக அல்லது பகுதியளவில் தளர்த்தலாம், பறிமுதல் செய்யப்பட்டவற்றை முழுமையாக அல்லது பகுதியளவில் தளர்த்தலாம்.
- 19வது திருத்தச் சட்டத்தின்படி ஜனாதிபதி வழங்கறிஞர்களை ஜனாதிபதி நியமிப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ளார்.
- 129(1) ஆம் சரத்து - உயர் நீதிமன்றின் ஆலோசனையைப் பெறுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

19ம் திருத்தச் சட்டத்தின் உறுப்புரை 33(2) சேர்க்கப்பட்ட (உ) என்ற பந்தியில் ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

07. 1978ம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் பின்வரும் தலைப்புகளில் கீழ் எவையேனும் இரண்டினை ஆராய்க.

(அ) மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்குமிடையிலான தொடர்பு.
(ஆ) விகிதசமப் பிரதிநிதித்துவ முறைமைக்கு எதிரான விமர்சனங்கள்.
(இ) பிரதம மந்திரிப் பதவி.
(ஈ) நீதித்துறையின் சுதந்திரம்.

(அ) மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்குமிடையிலான தொடர்பு.

- மாகாண சபைகளை ஸ்தாபித்தல், அவற்றுக்குரிய அதிகாரங்கள் யாவை என்று தீர்மானித்தல், அவற்றின் ஒழுங்கமைப்புக் கட்டமைவினைத் தீர்மானித்தல் என்பன மத்திய அரசினாலேயே மேற்கொள்ளப்பட்டது. அதனால் மத்திய அரசிலிருந்து விடுபட்ட சுயாதீனமான செயற்பாடோ இருப்போ மாகாண சபைகளுக்கில்லை.
- மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் உள்ள தொடர்புகளை ஏற்படுத்தும் மாகான சபைச் சட்ட ஏற்பாடுகள் பின்வருமாறு,

(அ) கொள்கை உருவாக்கம் :

i) மாகாண சபைகள் மத்திய அரசின் தேசியக் கொள்கைகளுக்கு இயைபாகவே தனது கொள்கைகளைத் திட்டமிட வேண்டும்.

ii) இதன்படி பாராளுமன்றம் :

- தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று வெளியிட்டிருக்கும் ஒரு விடயம் பற்றியோ,
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தில் மாகாண சபைகள் செயற்பட வேண்டிய விதம் பற்றியோ,
- பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்களின் மூலம் மாகாண சபைகள் தேசிய விடயங்களில் செயற்பட வேண்டிய விதம் பற்றியோ,

குறிப்பிட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் மாகாண சபை அந்த வரையறைக்குட்பட்டே செயற்பட வேண்டும்.

(ஆ) மாகாண சபைகளின் நியதிச் சட்டங்களை திருத்தலும், மாற்றுதலும்.

i) இது தொடர்பான அதிகாரம் மத்திய அரசுக்கே உரித்தாகிறது. எனினும் அது தொடர்பான மாகாண சபைகளின் அபிப்பிராயத்தை வினவ வேண்டும். அதன்படி,

A) சகல மாகாண சபைகளும் இணக்கம் தெரிவித்தால் அத் தீர்மானம் தொடர்பான வாக்கெடுப்பின் போது சமூகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட முடியும்.

B) மாகாண சபை ஒன்றோ, பலவோ இணங்காவிட்டால் அத்தீர்மானம் யாப்பின் 82 ஆம் சரத்துப்படி $^2/_3$ பெரும்பான்மையால் நிறை வேற்றப்பட வேண்டும்.

(இ) மாகாண சபைகளின் நிரலில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பாக பாராளுமன்ற சட்டவாக்கம் செய்தல்.

i) மாகாண சபைகள் இணங்கினால் மேல் A பகுதியில் குறிப்பிட்டவாறும் இணங்காவிட்டால் B பகுதியில் குறிப்பிட்டவாறும் சட்டங்களை நிறைவேற்ற முடியும்.

ii) ஏதேனும் ஒரு மாகாண சபை தனக்குரிய ஒரு விடயம் தொடர்பாக சட்டவாக்கம் செய்யுமாறு பாராளுமன்றை வேண்டி நின்றால், அம்மாகாண சபைக்கு மட்டும் செல்லுபடியாகும் வகையில் சட்டவாக்கம் செய்வதற்கு மேற்குறிப்பிட்ட A பகுதியின்படி பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டு.

(ஈ) ஒதுங்கிய நிரலில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பாகச் சட்டவாக்கம் செய்தல்.

i) இவ்வதிகாரத்தை இரு பகுதியினரும் பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் சட்டங்களும் நியதிச் சட்டங்களும் நிறைவேற்றப்டுவதற்கு முன்னர் பாராளுமன்றம் மாகாண சபைகளையும் மாகாண சபைகள் பாராளுமன் றையும் கலந்தாலோசிக்க வேண்டும்.

(உ) ஒதுங்கிய நிரலில் உள்ள விடயங்கள் சம்பந்தமான சட்டவாக்கம்.

i) இவ்விடயங்கள் தொடர்பாக சட்டவாக்கம் செய்வதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரமில்லை. அவ் அதிகாரம் பாராளுமன்றுக்கு மட்டுமே உண்டு.

A.C.M. Faleel (MA)

(ஊ) மாகாண சபைகள் நியதிச் சட்டங்களை உருவாக்குதல்.

i) நியதிச் சட்டங்களை சபைகளில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் மாகாண சபைகள் சட்டமா அதிபரைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

ii) நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் இறுதி அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பின்னரே அவை நடைமுறைக்கு வரும்.

iii) ஒரு குறிப்பிட்ட நியதிச்சட்ட மூலம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அதன் யாப்புறு தன்மையைத் தீர்மானிப்பதற்கு உயர் நீதிமன்றுக்கு ஆற்றுப் படுத்துமாறு கோரி அதனை ஜனாதிபதிக்கு அனுப்பும் அதிகாரம் ஆளுநருக்கு உண்டு.

iv) அந்த தியதிச் சட்டம் யாப்புக்கு இயைபானதாகும் என்று உயர் நீதிமன்றம் முடிவு செய்தால் மட்டுமே ஆளுநர் அதற்கு இறுதி அங்கீகாரம் வழங்க முடியும்.

(எ) பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கும் சந்தர்ப் பத்தில் கட்டளைகளை பிறப்பிப்பதற்கு ஜனாதிபதிக்குள்ள அதிகாரம்.

i) பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் மாகாண ஆளுநர்கள் நிறைவேற்று அதிகாரத்தை நிறைவேற்றும் விதம் பற்றி ஜனாதிபதி கட்டளைகளை பிறப்பிக்கலாம். அவற்றின் படியே ஆளுநர்கள் செயற்பட வேண்டும்.

(ஏ) மாகாணத்தின் நிருவாகம் வீழ்ச்சியடைந்த சந்தர்ப்பத்தில்.

i) மாகாண சபைகளின் செயற்பாடு பற்றி ஜனாதிபதி பிறப்பிக்கும் கட்டளைகளை ஆளுநரோ, மாகாண சபையோ அசட்டையுடன் நிறை வேற்றுமாயின் அம்மாகாணத்தின் நிருவாகத்தைத் தொடர்ந்தும் கொண்டு நடாத்த முடியாது என்று ஜனாதிபதி தீர்மானிக்கலாம்.

ii) மாகாணத்தின் நிருவாகம் வீழ்ச்சியடைந்துள்ளதென்று அம் மாகாணத்தின் ஆளுநர் ஜனாதிபதிக்கு அறிவிக்கலாம்.

iii) அவ்வாறான சந்தர்ப்பங்களில்,

A) மாகாண நிருவாகத்தை ஆளுநரிடம் அல்லது வேறு ஓர் அதிகாரியிடம் வழங்குவதற்கு அல்லது தன்கீழ் கொண்டு வருவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

B) மாகாண சபையின் அதிகாரங்கள் பாராளுமன்றத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்றோ பாராளுமன்றினால் நேரடியாக பிரயோகிக்கப்பட வேண்டும் என்றோ கட்டளை பிறப்பிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. அச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்றம் அவ்வதிகாரத்தினை ஜனாதிபதிக்கு ஒப்படைக்க முடியும். ஜனாதிபதி அவ்வதிகாரத்தினை வேறு ஓர் அதிகாரிக்கு ஒப்படைக்க முடியும்.

(ஒ) நிதித் தொடர்புகள்.

i) மாகாண சபை சட்டத்தின்படி மத்திய அரசு வருடாவருடம் மாகாண சபைகளுக்கான நிதியை ஒதுக்க வேண்டும்.

A.C.M. Faleel (MA)

(ஆ)விகிதசமப் பிரதிநிதித்துவ முறைமைக்கு எதிரான விமர்சனங்கள்.

01. வாக்களிப்பில் வாக்காளர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள்.

வாக்காளர்கள் தாம் விரும்பும் கட்சிக்கும், அக்கட்சியின் வேட்பாளருக்கும் விருப்பு வாக்குகளை வழங்குமாறு வேண்டப்படுவதனால் வாக்காளர்கள் பல கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். எழுத வாசிக்கத் தெரியாத வாக்காளர்கள் மத்தியில் இக்கஷ்டம் மேலும் அதிகரிக்கும். அதனால் அறிவும் அனுபவமும் குறைந்த வாக்காளர்கள் மத்தியில் PR முறையினை வெற்றிகரமாகப் பிரயோகிக்க முடியாது.

02. பல கட்சி முறை ஊக்குவிக்கப்படுதல்.

PR முறை போட்டியிடும் அரசியல் கட்சிகளுக்கு குறைந்த பட்ச அளவிலாவது ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக் காணப்படுவதனால் இன நலன்கள், பிரதேச நலன்கள் வேறும் நலன்கள் என்பவற்றின் அடிப்படையில் எண்ணிறைந்த கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளன. இலங்கையில் தற்பொழுது பதிவு செய்யப்பட்ட கட்சிகள் காணப்படுகின்றன.

03. கணித வழிமுறை பின்பற்றப்படுதல்.

வாக்காளர்கள் பெருமளவு விளங்கிக் கொள்ள முடியாத தேர்தல் முறையாக இருப்பதால் நிராகரிக்கப்படும் வாக்குகள் ஒவ்வொரு தேர்தல்களிலும் அதிகரித்துச் செல்கின்றது. தேர்தல்களைக் கண்காணிக்கும் FEBERAL அமைப்பின் ஆய்வுப்படி 6% - 10% நிராகரிக்கப்பட்ட வாக்குகளாக அமைந்துள்ளது.

(உ - ம்)

தேர்தல் நடைபெற்ற ஆண்டு	தேசிய ரீதியாக நிராகரிக்கப்பட்ட வாக்குகள்	வீதம்
1994	400,389	4.79
2015	517,123	6.87
2001	493,944	6.52
2010	596,972	7.05

04. அரசியல் கட்சிகளினதும் அவற்றின் தலைமைத்துவத்தினதும் ஆதிக்கம் வளர்ச்சியுறுதல்.

தேர்தல் மாவட்டங்களில் யார் யாரை வேட்பாளர்களாக உள்ளடக்கி கட்சிப் பட்டியலை தயாரித்தல், தேசியப் பட்டியலுக்கான வேட்பாளர்களின் பெயர்களைத் தீர்மானித்தல், தேசியப் பட்டியலிலிருந்து யாரை நியமிக்க வேண்டும் என்று தீர்மானித்தல், பாராளுமன்ற உறுப்பினர்களில் கட்சியிலிருந்து நீக்குவதன் மூலம் அவர்களின் பதவிகளை வறிதாக்குதல் போன்ற வழிமுறைகளின் மூலம் அரசியல் கட்சிகளின் ஆதிக்கம் வளர்ச்சியடைந்துள்ளது.

A.C.M. Faleel (MA)
A.C.M. Faleel (MA)

05. உறுதியற்ற கூட்டரசாங்கங்கள் உருவாகுதல்.

இலங்கையில் நிலவும் பல கட்சி முறை காரணமாக ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் கூட்டரசாங்கங்களும், கூட்டு எதிர் கட்சியுமே தோன்றியுள்ளன. 1989, 2010 ஆகிய பொதுத் தேர்தல்களைத் தவிர்ந்த ஏனைய சகல தேர்தல்களின் பின்னரும் இந்நிலை உருவாகியிருந்தது.

தேர்தல் நடைபெற்ற ஆண்டு	**அரசாங்கம்**	**கூட்டுச் சேர்ந்த கட்சிகள்**
1994	கூட்டரசாங்கம்	SLFP (PA) தலைமையில் SLMC, மலையக மக்கள் முன்னணி
2000	கூட்டரசாங்கம்	SLFP (PA) தலைமையில் SLMC, NUA கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்தாலும் ஒரு வருடத்திற்குப் பின்னர் SLMC கூட்டு முன்னணியிலிருந்து வெளியானதால் பெரும்பான்மை இல்லாமல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.
2001	கூட்டரசாங்கம்	UNP (UNF) தலைமையில் SLMC, CWC, EPDP கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டாலும் அது நீடிக்காமல் பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டினால் பாராளுமன்றத்தினை ஜனாதிபதி 2004 கலைத்தார்.
2004	கூட்டரசாங்கம்	SLFP (UPFA) தலைமையில் JVP, NMC, NUA, Communist Party, SLMP என்பன சேர்ந்து கூட்டரசாங்கம் அமைக்கப்பட்ட போது சிறு காலத்தின் பின்னர் SLMP இல் இருந்த 4 பேர் பிரிந்து இந்த கூட்டரசாங்கத்தில் சேர்ந்து கொண்டனர். இதன் பின்னர் UNP இல் இருந்து 18 பாராளுமன்ற உறுப்பினர்களும் CWC யும் சேர்ந்து கொண்டன 2007ம் ஆண்டு ஜாதிக ஹெல உருமய கட்சியின் 09 பேரும் சேர்ந்தனர். இந்த கூட்டரசாங்கம் 2010 ஆண்டு வரை நீடித்தது.

A.C.M. Faleel (MA)

2015	தேசிய அரசாங்கம்	UNF for Good Governace (UNP, SLMC, ACMC, JHU, TPA)+ UPFA (SLFP) ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான 43 UPFA பாராளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைக்கப் பட்டது. (யாப்பின் 19வது திருத்தத்தின்படி) இந்த தேசிய அரசாங்கம் 26.10.2018 வரை நீடித்திருந்தது. 26.10.2018 UPFA தேசிய அரசாங்கத்தில் இருந்து விலகியதால் தேசிய அரசாங்கம் கலைக்கப்பட்டது.
26.10.2018 - 16.12.2018	அரசியல் நெருக்கடி சட்டரீதியற்ற அரசாங்கம்	பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டமை. ஜனாதிபதி அரசியல் அமைப்பை மீறி செயற்பட்டமை. ♦ யாப்பை மீறி பிரதமரை நீக்கியமை. ♦ யாப்பை மீறி பிரதமரை நியமித்தமை. ♦ யாப்பை மீறி பாராளுமன்றத்தை கலைத்தமை. ♦ 2018 நவம்பர் - 12 பாராளுமன்றத்தை கலைத்ததற்கு எதிராக 10 மனுக்கள் உச்ச நீதிமன்றில் தாக்கல். ♦ 2018 நவம்பர் - 13 தொடக்கம் டிசம்பர் 07 வரை பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்ததற்கான இடைக்கால தடை உச்ச நீதிமன்றத்தால் விதிப்பு. ♦ 2018 டிசம்பர் - 13 ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்தது சட்ட விரோதமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பு. ♦ 2018 டிசம்பர் - 15 மஹிந்த பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்தல். ♦ 2018 டிசம்பர் - 16 ரணில் பிரதமர் பதவியை ஏற்றல்.
16.12.2018 - இன்றுவரை	கூட்டரசாங்கம்	UNP (UNF) தலைமையில் SLMC, ACMC, THU, TPA ஆகிய கட்சி சேர்ந்த கூட்டரசாங்கம் நடைபெறுகின்றது.

A.C.M. Faleel (MA)

06. வாக்காளர்களுக்கும் பிரதிநிதிகளுக்குமிடையில் இடைவெளி அதிகரித்தல்.

PR முறையில் வாக்காளர்களுக்கும் பிரதிநிதிகளுக்குமிடையில் இயல்பாகவே இடைவெளி அதிகரித்துக் காணப்படும். தேர்தல் தொகுதிகள் பாரியனவாக அமைவதாலும் கட்சிக்கு வாக்களித்தல் பிரதானமாக இடம்பெறுவதாலும் இந்நிலை தவிர்க்க முடியாதவாறு இடம்பெறுகிறது.

07. PR முறை விளங்கிக் கொள்வதற்கும் கணிப்பிடுவதற்கும் எளிதான முறையாகக் காணப்படாமை.

செல்லுபடியான வாக்குகளைக் கணித்தல், வெட்டுப் புள்ளியின் பெறுமதியைக் காணல், இயைபான வாக்குத் தொகையையும், விளை தொகையையும் கணித்தல், கட்சிகளுக்கு விகித சம முறையில் ஆசனங்களைப் பகிர்ந்தளித்தல், ஆசனங்கள் முழுமையாக பிரிபடாத போது அதனைப் பூரணப்படுத்தல் ஆகிய கட்டங்கள் அனைத்தும் கணித முறையிலேயே மேற்கொள்ளப்படுவதனால் சாதாரண மக்களால் எளிதில் விளங்கிக் கொள்ள முடிவதில்லை.

08. Bonus ஆசன முறை PR முறையில் ஏற்படுத்தும் தாக்கம்.

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் கட்சிக்கு விகிதாசாரக் கணிப்பீடு இன்ற ஓர் ஆசனத்தைப் பெற்றுக் கொடுப்பதனால் விகிதாசார முறை பாதிக்கப்படுகிறது. 22 தேர்தல் மாவட்டங்களிலும் இந்நிலை காணப்படுவதனால் பாராளுமன்ற உறுப்புரிமையிலும் தாக்கம் ஏற்படுகிறது.

09. வெட்டுப்புள்ளி முறையின் குறைபாடு.

5% தை விடக் குறைவான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் கட்சிகளும், குழுக்களும் போட்டியிலிருந்து அகற்றப்படுவதனால் சகல அபிப்பிராயங்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும் வாய்ப்பு இல்லாமல் செல்கின்றது. இதன் மூலம் பிரதான கட்சிகளே நன்மை பெறுகின்றன.

10. மாவட்ட ஆசன ஒதுக்கீடு.

மாவட்டங்களுக்கிடையில் கட்சிகள் பெறும் வாக்குகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுவதனால் பாராளுமன்றத்தில் அவை பெறும் ஆசனங்களுக்கிடையிலும் வேறுபாடுகள் காணப்படும் (2010 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் முடிவு)

(உ - ம்) 1.

DNA	- 5.49%	- 07 ஆசனங்கள்
TNA	- 2.90%	- 14 ஆசனங்கள்

(உ - ம்) 2. 2001ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள்.

JVP	- 9.10%	- 16 ஆசனங்கள்
TNA	- 3.89%	- 15 ஆசனங்கள்

(உ - ம்) 3. 2004ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள்.

TNA	- 6.84%	- 22 ஆசனங்கள்
JHU	- 5.97%	- 09 ஆசனங்கள்
SLMC	- 2.02%	- 05 ஆசனங்கள்

A.C.M. Faleel (MA)

11. விருப்பு வாக்கு முறையின் குறைபாடு.

விருப்பு வாக்கு முறை வாக்காளர்களுக்கு ஒரு பரந்த தெரிவினை வழங்கினாலும் நடைமுறையில் அது கட்சிகளுக்குள்ளும் கட்சிகளுக்கிடையிலும் பலத்த போட்டியை ஏற்படுத்துவதோடு அப்போட்டிகள் வன்முறையினைத் தூண்டி விடுவதோடு சில பிரதேசங்களுக்கு பிரதிநிதி எவரும் தெரிவு செய்யப்படாத நிலையினையும் தோற்றுவிக்கின்றது.

(உ - ம்) 1994ம் ஆண்டு பொதுத் தேர்தலின் முன்னரும் பின்னரும் நாடுபூராவும் 3601 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. இவற்றில் 25 கொலைச் சம்பவங்களும் 23 கொலை முயற்சிகளும் அடங்குகின்றன

(உ - ம்) 2000ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் அதிகமான தேர்தல் வன்முறைகள் ஏற்பட்டன. கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக SLMCயைச் சேர்ந்த 10 முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

(உ - ம்) 2010ம் பொதுத் தேர்தலில் கட்சிகளுக்கிடையில் (UPFA, UNF) ஒரே கட்சி வேட்பாளர்களுக்கிடையிலும் தேர்தல் வன்முறை ஏற்பட்டதனால் கண்டி மாவட்டத்தில் 32 வாக்குப் பெட்டிகள் தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடைபெற்றது.

12. காலமும் பணமும் விரயமாதல்.

ஒவ்வொரு வேட்பாளரும் தாம் வெற்றி பெறுவதற்குக் கணிசமான அளவு விருப்பு வாக்குகளைப் பெற வேண்டிருப்பதால் அதற்காக அதிக காலத்தையும், பணத்தையும் செலவளிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

13. இடைத் தேர்தல் நடைபெறாமை.

பாராளுமன்ற உறுப்புரிமை காலியானால் அவ்விடத்துக்கு ஒருவரை தெரிவு செய்வதற்கு இடைத் தேர்தல் முறை அன்றி பட்டியல் முறையே பயன்படுத்தப் படுகிறது. அதனால் இரு பொதுத் தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலத்தில் மக்களின் அபிப்பிராயங்களையும் விருப்பு வெறுப்புகளையும் அறிய முடியாதுள்ளது.

14. தேசியப் பட்டியல் முறையின் குறைபாடு.

தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாக்காளர்களின் தெரிவுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் காணப்படுவதில்லை. தேசிய பட்டியல் உறுப்பினர்களைக் கட்சித் தலைமைத்துவமே தீர்மானிப்பதால் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் மற்றும் பணப் பலம் படைத்தவர்களும் பாராளுமன்றத்தில் நுழைய வாய்ப்பினை ஏற்படுத்திவிடுகிறது.

(உ - ம்) 2015ம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்கள் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினரானவர்கள் பின்வருமாறு,

1. சுனில் ஹந்துன்னெத்ரி (JVP)
2. எஸ்.பி. திசாநாயக்க (UPFA)
3. லக்மன் யாப்பா அபேவர்த்தன (UPFA)
4. விஜிதமுனி சொய்ஸா (UPFA)
5. மஹிந்த சமரசிங்க (UPFA)

6. எம்.எல்.ஏ. ஹிஸ்புல்லா (UPFA)
7. எம்.எஸ். தௌபீக் (SLMC)
8. இஸ்மாயில் (ACMC)

2004 - வசீர் சேவூதாவூத் (SLMC)
2004 - நிஜாமுத்தீன் (SLMC)

15. மாகாண ஆசன ஒதுக்கீட்டுமுறை.

தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் பிரதிநிதித்துவத்தை ஒதுக்கும் போது மாகாணத்திற்கு 4 உறுப்பினர்கள் நியமிக்கப்படுவது விகிதாசாரமானதல்ல.

(உ - ம்) மேல் மாகாணம் - 4 பேர் (சனத்தொகை அதிகம்)
கிழக்கு மாகாணம் - 4 பேர் (சனத்தொகை குறைவு)

16. தேர்தல்களை ஒழுங்குபடுத்துவதில் ஏற்படும் சிரமம்.

தேர்தல் தொகுதி விசாலாமானதாக அமைவதனால் தேர்தல்களை ஒழுங்கு படுத்துவதில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இது திணைக்கள மட்டத்திலும், வேட்பாளர் மத்தியிலும் எதிர்நோக்கும் பிரச்சினைகள்.

(இ) பிரதம மந்திரிப் பதவி.

1978ம் ஆண்டு மூல யாப்பில் பிரதமர் ஒரு சாதாரண அமைச்சருக்குரிய கடமைகளையே அமைச்சரவையில் புரிந்தார். இவர் அமைச்சரவையின் தலைவரும் அல்ல இதனால் இவரது நிர்வாக அதிகாரம் குறைவானதாகும். இருந்தாலும், யாப்பின் 19வது திருத்தத்தின் பிரகாரம் பிரதமர் மந்திரி அமைச்சரவை தொடர்பாக இதுவரை காலமும் ஜனாதிபதி அனுபவித்த அதிகாரங்கள் நீக்கப்பட்டு இருப்பதோடு அதன் மூலம் பிரதமரின் அதிகாரம் விரிவாக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் எந்த உறுப்பினர் பாராளுமன்றத்தில் நம்பிக்கையை பெறுவதற்கு அதிக வாய்ப்புள்ளவராக இருக்கின்றாரோ அந்த உறுப்பினரை பிரதமராக ஜனாதிபதி நியமிப்பார். ஆனால் 19வது திருத்தத்தில் உறுப்புரை 46(2) இன்படி தமது கையெழுத்தை இட்டு ஜனாதிபதிக்கு அனுப்பும் ஒரு கடிதத்தின் மூலம் பதவி விலகினால் அல்லது பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாதொழிந்தால் அல்லது அமைச்சரவை பதவியிலிருந்து நீக்கினால் அன்றி அரசியல் அமைப்பின் ஏற்படுகளின் கீழ் எந்தளவு காலம் பதவி வகிக்க முடியுமோ அக்காலம் வரை பிரதமர் தமது பதவியை வகிப்பார். இதன்படி ஜனாதிபதியால் சுயமாக பிரதமரை பதவி நீக்கம் செய்ய முடியாது.

பிரதமரின் அதிகாரங்களும் கடமைகளும்

01. அமைச்சரவையின் அமைச்சர்கள், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சர்கள், பிரத அமைச்சர்கள் என்போரை ஜனாதிபதி நியமிக்கும் போது பிரதமரின் மதியுரையைப் பெறவேண்டும் (யாப்பின் 19வது திருத்தப்படி)
02. தனது பணிகள் மற்றும் விடயங்கள் பற்றி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறுதல் வேண்டும்.
03. அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்களில் ஒருவராக இருத்தல்.

A.C.M. Faleel (MA)
A.C.M. Faleel (MA)

04. பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்குமிடையே ஒரு பாலமாக இவர் விளங்குவார்.
05. அமைச்சரவையில் சில அமைச்சுப் பொறுப்புக்களையும் தனது கையில் வைத்தி ருப்பார்.
06. ஜனாதிபதி பதவி விகிக்க முடியாத சந்தர்ப்பங்களில் பதில் ஜனாதிபதியாக இவரே பதவி வகிப்பார் அப்போது ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் அனைத்தையும் பெற்றவராக விளங்குகின்றார்.
07. அமைச்சரவையின் அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யவேண்டும்.
08. ஜனாதிபதி பதவி வறிதாகிவிட்டால் பிரதமரே பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்பார்.
   (உ - ம்) : 1993.05.01ம் திகதி ஜனாதிபதியாக இருந்த ஆர். பிரேமதாச அவர்கள் திடீர் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி பதவி வறிதாகிய போது பிரதமராக இருந்த D.P. விஜயதுங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.
09. அதிகாரங்கள் குறைவாக இருந்த போதும் மறைமுகமாக செல்வாக்கடைய ஒருவராகவே விழங்குகின்றார்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா, டி.பி. விஜயதுங்க, சந்திரிக்கா பண்டாரநாயக்கா விஜய குமாரணதுங்க, மஹிந்த ராபக்ஸ ஆகிய அனைவரும் முன்பு பிரதமராக பதவி வகித்தவர்களே ஆவர். ஆனால் தற்போது ஜனாதிபதியாக இருக்கின்ற மைத்திரிபால சிறிசேன பிரதமராக இருந்தவர் அல்லர் என்பது நோக்கத்தக்கது.

பிரதமரின் பதவி இழக்கும் சந்தர்ப்பங்கள். (யாப்பின் 19வது திருத்தத்தின்படி)

01. பிரதமர் தானாக இராஜினாமா செய்தல்.
   (உ - ம்) 2018.12.15ம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து தானாக இராஜினாமா செய்தார்.
02. பாராளுமன்ற உறுப்புரிமையை இழத்தல்.
03. அமைச்சரவைக்கு எதிராக பாராளுமன்றம் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றி அமைச்சரவை கலைந்தால்.
04. அமைச்சரவை இயங்கும் காலமெல்லாம் பிரமர் பதவிதொடரும் (சரத்து 46(2)

எனவே பிரதமர் பதவியானது யாப்பின் 19வது திருத்தத்தின் பிரகாரம் சற்று அதிகாரம் கூடியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இருந்தாலும் ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவரும் பிரதமர் இன்னொரு கட்சியைச் சேர்ந்தவருமாக இருக்கும் பட்சத்தில் இருவருக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்படலாம். இந்த நிலையை தற்போது காணக்கூடியதாக உள்ளது.

(ஈ) நீதித்துறையின் சுதந்திரம்.

நீதித்துறையின் சுதந்திரம் என்பது நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை ஆகிய அரசாங்க நிறுவனங்களின் பாதிப்பின்றியும், வெளிச்சமூகத்தின் எவரது பாதிப்பின்றியும், சட்டத்தின் படியும், இயற்கை நீதியின் படியும் நீதியை நிர்வகிப்பதற்கு நீதித்துறைக்குள்ள சுதந்திரமாகும். இது ஜனநாயக அரசாங்கங்களில் இடம்பெறும் ஒரு முக்கிய சித்தாந்த மாகும்.

A.C.M. Faleel (MA)

தற்கால அரசியல் யாப்பில் நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பான ஏற்பாடுகள்

- அரசியல் யாப்பின் 107 - 115 வரையுள்ள சரத்துக்கள் நீதித்துறையின் சுதந்திரம் சம்பந்தமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் ஏற்பாடுகளின்படி,

01. நீதிபதிகளை நியமனம் செய்தல்.

பிரதம நீதியரசர் உட்பட ஏனைய உயர் நீதிமன்ற நீதியரசர்களையும், மேன் முறையீட்டு நீதிமன்ற தலைவர் உட்பட ஏனைய நீதியசர்களையும் அரசியல் அமைப்பு பேரவையின் அங்கீகாரத்துடன் ஜனாதிபதி நியமிப்பார்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் நீதிச்சேவை ஆணைக்குழுவின் விதப்புரையின் பேரில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவார்.

02. நீதிபதிகளை பதவி நீக்கம் செய்தல்.

பிரதம நீதியரசர் உட்பட ஏனைய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் என்போர்களில் துர்நடத்தை அல்லது தகைமையின்மை, அவர்கள் பால் உள்ளது என்று உறுதிசெய்யப்படுகின்ற போது அந்நீதிபதியை அகற்றும் படி பாராளுமன்றிடம் இருந்து பிறப்பிக்கப்படும் பிரேரணை ஒன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் பெரும்பான்மையினால் (சமூகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட) ஆதரவளிக்கப்பட்டு ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியால் பதவி நீக்கப்படுவர்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் நீதிச்சேவை ஆணைக்குழுவின் விதப்புரையின் பேரில் ஜனாதிபதியினால் அகற்றப்படுவர்.

நீதியரசர்களின் இளைப்பாறும் வயது யாப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதோடு உயர் நீதிமன்ற நீதியரசர்களின் வயதெல்லை 65 ஆகவும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் வயதெல்லை 63 அகவும், மேல் நீதிமன்ற நீதியரசர் களின் வயதெல்லை 61 ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- நீதியரசர்களின் சம்பளம் பாராளுமன்றினால் தீர்மானிக்கப்பட்டு திரட்டு நிதியின் மீது பொறுப்பாக்கப்பட்டுள்ளது.
- நீதியரசர்களின் சம்பளத்தையோ, ஓய்வூதியத்தையோ அவர்களது பதவி காலத்தில் குறைக்கப்படுதல் ஆகாது.
- 109 (1) பிரதம நீதியசர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத் திற்காக தமது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், மற்றும் புரிவதற்கும், தற்காலிகமாக இயலாதவராயிருப்பின் அத்தகைய காலப்பகுதியின் போது விடயத்திற்கேற்ப பிரதம நீதியரசரின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் பதவியில் பதிற்கடமை யாற்றுவதற்காக அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்துக்கமைய உயர் நீதி மன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வேறொரு நீதிபதியை ஜனாதிபதி நியமித்தல் வேண்டும்.
- 107 (4) உறுப்புரையின் படி மேல்நிலை நீதிமன்றங்களின் நீதியரசர் பதவிக்கு நியமிக்கப்படும் சகல நீதியரசர்களும் ஜனாதிபதியின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னரே தமது பதவிக்குரிய கடமைகளைப் புரியத் தொடங்குதல் வேண்டும்.

A.C.M. Faleel (MA)

- 110 (3) ஆம் உறுப்புரையின் படி மேல்நிலை நீதிமன்றங்கள் இரண்டிலும் நிரந்தர முறையில் பணியாற்றிய நீதியரசர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் ஜனாதிபதியின் எழுத்து மூலமான அனுமதியின்றி நீதித் தொழிலிலோ, வேறு வருமானம் தரும் தொழிலிலோ ஈடுபடக் கூடாது.
- 105 (3) ஆம் உறுப்புரையின் படி உயர் நீதிமன்றையோ அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றையோ அவமதித்தமைக்காக தண்டனை விதிக்கும் அதிகாரம் அந் நீதிமன்றங்களுக்குண்டு. அக் குற்றம் தொடர்பாக பொருத்தமான தண்டப் பணத்தை யையோ, மறியற் தண்டனையோ அல்லது அவ்விரு தண்டனைகளையோ விதிக்க முடியும்.

இந்த ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக கீழ்நிலை நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு, சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய பொறுப்பினை நிறைவேற்ற நீதிச்சேவை ஆணைக்குழு ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது. நீதிச்சேவை ஆணைக்குழு பிரதம நீதியரசர் உட்பட உயர் நீதிமன்றத்தின் வேறு இரண்டு அதி சிரேஷ்ட நீதிபதிகளையும் கொண்ட ஒரு தாபனமாக இது இயங்கும். நீதிச் சேவை ஆணைக்குழுவின் நீதியசர்கள் 03 பேரும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவர்.

இந்த ஆணைக்குழுவின் மீது பாதிப்புச் செலுத்தபவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனை அல்லது 100 ரூபாவிற்குக் குறையாத தண்டப் பணமும் அல்லது அவை இரண்டும் விதிக்கப்படக் கூடிய குற்றமாகக் கருதப்படும். மேல்நிலை நீதி மன்றில் பாதிப்புச் செலுத்த முற்படுதல், அவற்றை அவமானப்படுத்தல், என்பவற்றுக்காக அந்நீதிமன்றுகள் மூலம் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்படக் கூடிய ஒரு குற்றமாகும்.

பகுதி - III

08. பெரிய பிரித்தானியாவின் அல்லது இலங்கையின் அரசாங்க முறை ஒற்றையாட்சி அரசாங்க மாதிரியிலிருந்து மாற்றமுற்றுள்ள விதத்தை விபரிக்குக.

பெரிய பிரித்தானியா

வேல்ஸ், ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து மற்றும் இங்கிலாந்து என்பன அதிகார பரவலாக்கத்திற்கான பிரதான காரணியாக அமைவது சுய இராச்சிய கோரிக்கை களாகும். கோட்பாட்டளவில் அதிகாரப் பகிர்வு எனப்படுவது மத்தியில் இருந்து அதிகாரத்தை பிராந்தியங்களுக்கு பகிர்ந்தளிப்பதைக் குறிக்கும்.

1974 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சியில் 06 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது தொழில் கட்சிக்கு ஒரு சவாலாக அமைந்தது. இதன் மூலம் ஸ்கொட்லாந்து அதிகார பகிர்வுக்கான பிரச்சாரங்களை தீவிரப்படுத்தியதினால் 1990களில் அதிகார பகிர்வு வழங்கப்பட்டது. இதற்கு மூல காரணமாக ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்து என்பன பிரிட்டிஷ் கொள்கைகளில் காணப்பட்ட அதிருப்தியே ஆகும்.

ஸ்கொட்லாந்து சட்டத்தின் 1999ம் ஆண்டு ஒப்படைப்பு சட்டமன்றம் உருவாக்கப் பட்டதுடன் இயற்றப்பட்டது. மேலும் 1998 இல் அதிகாரப் பகிர்வு வேல்சுக்கும் வழங்கப் பட்டது. ஸ்கொட்லாந்தை ஒப்பிடுகையில் வேல்ஸ்க்கு அதிக அதிகார பகிர்வைக் காணலாம். மேலும் பிரித்தானிய அதிகார பகிர்வானது 03 பிராந்தியங்களுக்கும் சமச்சீரற்ற அதிகார பரவலாக்கலாகவே அமைந்துள்ளது.

ஸ்கொட்லாந்துக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டுள்ள முறை

01. குற்றவியல், சட்டம், கல்வி, சூழல், சுகாதாரம் நீதிமன்றங்களை உருவாக்குதல், உள்ளூராட்சி, பொலிஸ், போக்குவரத்து தொடர்பான பரந்த அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன.
02. தேசிய வருமான வரிகள் 03 பௌண்ஸ்கள் வரை மாறத்தக்க வரி அறவீடுக்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
03. சில கொள்கைத் துறைகள் வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்றத்திடம் காணப்படுகின்றது.
    (உ - ம்) : பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான அதிகாரங்கள்.

வேல்ஸ்க்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்

01. வேல்ஸ் தேசிய சபைக்கு (National Assembly) ஆரம்பத்தில் துணை நிலைச் சட்டவாக்க அதிகாரமே வழங்கப்பட்டிருந்தது. இதில் தேசிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முழுமையான விளக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.
    (உ - ம்) வேல்ஸின் தேசிய விடயப் பரப்புகளை உறுதிப்படுத்துவதற்கான அதிகாரம்.
02. சுயாதீன நிறுவனங்களின் உத்தியோகத்தவர்களை நியமிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
03. 2010ஆம் ஆண்டின் மக்கள் கருத்துக் கணிப்பின் பின்னர் வேல்ஸின் சட்டவாக்க அதிகாரம் அதிகரிக்கப்பட்டுள்ளன. 2011ம் ஆண்டில் ஏற்பட்ட இந்த மறுசீரமைப்புக்கு ஏற்ப பரவலாக்கப்பட்ட 20 விடயங்களில் சட்டங்களை ஆக்கும் அதிகாரம் காணப்படு கின்றது. இதற்காக வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன்றத்தின் அனுமதி தேவையில்லை. உதாரணமாக விவசாயம், மீன்பிடித்தல், கல்வி, சுற்றாடல், சுகாதாரம், போக்குவரத்து, நெடுங்சாலைகள், உள்ளூராட்சி, சமூக நலன் என்பன இதற்குள் அடங்கும்.
04. வேல்ஸ்க்கான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடு தொடர்பான அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளது.
05. இதற்கு நிலையான வரி அறவிடும் அதிகாரம் இல்லை.

வட அயர்லாந்துக்கான அதிகாரப் பரவலாக்கம்

01. வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்து அதிகாரப் பரவலாக்கத்தைப் பார்க்கும் போது இவ்விரண்டுக்கும் இடைப்பட்டதொரு நிலையில் வட அயர்லாந்தின் அதிகாரப் பரவலாக்கம் உள்ளது.
02. சுகாதாரம், பொருளாதார அபிவிருத்தி, சூழல், கல்வி, விவசாயம், சமூக சேவை, வீடு, உள்ளூராட்சி, போக்குவரத்து, கலாச்சாரம், விளையாட்டு, நீதிமன்றம், பொலிஸ் போன்றன தொடர்பில் பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
03. நிலையான வரி அறவீட்டுக்கான அதிகாரம் வழங்கப்படவில்லை.

இலங்கை

இலங்கையில் ஒற்றை மற்றும் மையப்படுத்தப்பட்ட அரச முறைமைக்கான அடிப்படைக் கட்டமைப்பு பிரித்தானிய ஆட்சியின் கீழ் உருவாகியது. 1815ம் ஆண்டு பிரகடனத்தின் மூலம் மலைநாட்டு பிரதேசத்தை பிரித்தானியரின் ஏனைய நிர்வாக வலங்களுடன் இணைத்தல் முழு நாட்டினையும் அரசியல் ரீதியாக ஒன்றிணைத்தல் ஆகியன இதன் ஆரம்ப படிநிலையானதோடு 1833 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட கோல்புரூக் கமரன் சீர்திருத்தம் இலங்கையை நிர்வாக ரீதியாகவும், நீதித்துறை ரீதியாகவும் ஒருங்கிணைத்தது. (இலங்கை ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது).

1931 டொனமூர் சீர்திருத்தம் மற்றும் 1947 சோல்பரி அரசியலமைப்பு மேலும் நவீனத்துவமான இலங்கையின் ஒற்றுமை அடித்தளங்களை ஒன்று திரட்டியது. இதனை தவிர இலங்கை அரசின் ஓர் அரசியலமைப்பின் முதன் குடியரசு யாப்பாக 1972ம் ஆண்டு அரசியலமைப்பை கூறலாம். இதில் இலங்கை குடியரசு என்பது ஒரு ஒற்றையாட்சி அரசு என வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனாலேயே 1978ம் ஆண்டு 2ம் குடியரசு யாப்பும் உள்வாங்கியிருந்தது. 1987 இல் அங்கீகரிக்கப்பட்ட 13வது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை மூலம் ஒற்றை மற்றும் மையப்படுத்தப்பட்ட அரசக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டது. இம்மாற்றம் ''அதிகார பரவலாக்கம் செய்தல்'' எனும் கட்டமைப்பினுள் ஏற்பட்டது. அதிகாரப் பரவலாக்கல் என்பது சமஷ்டி அரச கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவதல்ல. அது ஒற்றை சமஷ்டி அரச கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவதல்ல. அது ஒற்றை மற்றும் மையப்படுத்தப்பட்ட முறையிலிருந்து மாற்றம் அடைகின்ற சமஷ்டி முறையிலும் குறைந்தளவில் பிராந்திய சுயாட்சியை ஏற்படுத்தும் அரசியலமைப்புக் கட்டமைப்பு ஒன்றினை தோற்றிவிப்பதாகும். அதிகாரப் பரவலாக்கல் என்பது ஒற்றை, சமஷ்டி எனும் இரு மாதிரிகளுக்கும் இடைப்பட்ட அரசொன்றினை உருவாக்கும் அரச மாதிரி ஒன்றாகும். இது கலப்பு முறையாகும்.

இலங்கையின் ஒற்றையாட்சி அரச கட்டமைப்பை மறுசீரமைப்பதற்கான பிரதான காரணம் தமிழ் மக்களின் இன முரண்பாடே ஆகும். இம்முரண்பாடு விருத்தியடைந்த மைக்கான காரணங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

01. கொழும்பு மாவட்டத்தில் தமிழர்களுக்கென தனித்தொகுதி அமைக்கப்பட வேண்டும் என்ற தமிழ்த் தலைவர்களின் கோரிக்கையை சிங்களத் தலைவர்களால் மறுக்கப்பட்டதால் 1919ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை தேசிய காங்கிரஸில் இருந்து 1921ம் ஆண்டு தமிழ் தலைவர்களான சேர்.பொன்னம்பலம் இராமனாதன், சேர். பொன்னம்பலம் அருநாச்சலம் போன்ற தலைவர்கள் விலகி தமிழ் மகா சபையை அமைத்தமை.

02. 1931ம் ஆண்டில் டொனமூர் சீர்திருத்தங்களின் பின்னர் சிங்கள வாக்காளர்களின் வாக்குகளினால் பெரும்பான்மையான தனி சிங்கள மந்திரிசபையும் 1936ம் ஆண்டில் அனைத்து சிங்கள அமைச்சரவையும் தாபிக்கப்பட்டது.

03. சர்வஜன வாக்குரிமையின் கீழ் சட்டசபையில் சிங்களவர்களின் மேலதிக்கத்தை தவிர்ப்பதற்காக சட்ட சபையில் சிங்களவர்கள் 50% உம், அனைத்து சிறுபான்மை யினர் சார்பில் எஞ்சிய 50% பிரதிநிதித்துவமும் இருக்கத்தக்கதாக அமைய வேண்டும் என்ற தமிழ்த் தலைவர்களின் கோரிக்கையாக அமைந்தது. இதுவும் நிறைவேற்றப்பட வில்லை.

04. 1948/1949 ஆம் ஆண்டுகளில் பிரஜா உரிமை, வாக்குரிமைச் சட்டம் என்ற பெயரில் சட்ட மூலம் ஒன்றை முன்வைத்து அதன் பிரதிபலனாக தோட்டப்புற தமிழ் மக்களின் வாக்குரிமையும் பிரஜா உரிமையும் இரத்து செய்யப்பட்டன.

05. 1956ம் ஆண்டு தனிச்சிங்கள மசோதா சட்டம் கொண்டுவரப்பட்டமை.

06. 1952ம் தண்டாகும் போது 7 தமிழ்த் தலைவர்கள் சமஷ்டி அரசியல் அமைப்பு ஒன்றினை வேண்டி நின்றமை. இது வடக்கு, கிழக்கு தனியலகாக ஏற்றுக் கொண்டு அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள வேண்டும் என்பது இக்கோரிக்கை ஆகும்.

07. 1957ம் ஆண்டில் பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டமை.

08. 1965ம் ஆண்டில் டட்லி - செல்வா ஒப்பந்தம் கைவிடப்பட்டமை.

09. 1972 இல் கூட்டு முன்னணி அரசாங்கத்தின் புதிய யாப்பமைப்பு சபையின் முன்னிலை யில் தமிழ் மக்கள் சார்பில் சமஷ்டிக் கட்சியின் மூலம் பல யோசனைகள் முன்வைக் கப்பட்டன. ஆனாலும் அவை நிராகரிக்கப்பட்டன.

10. அருமையான வளங்களை சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டாமை.

11. வேலையின்மை, கீழ் உழைப்பு என்பவற்றுடன் 1970 ஆம் ஆண்டு ''தரப்படுத்தல்'' கொள்கை மூலம் கல்வி ரீதியாக பாரிய பறக்கணிப்பு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உருப் பெற்றது. அவர்கள் முரண்பாடடைய வழிவகுத்தது.

(உ - ம்) சிங்கள மாணவனுக்கும் தமிழ் மாணவனுக்கும் பல்கலைக்கழக அனுமதியில் காட்டப்பட்ட பாரபட்சம் பின்வரும் அட்டவணை மூலம் காட்டலாம்.

துறை	சிங்களவர்	தமிழர்
1. மருத்துவம்	229	250
2. பொறியியல்	227	250
3. பௌதிக விஞ்ஞானம்	183	204
4. உயிரியல் விஞ்ஞானம்	175	184

12. யாழ்ப்பாணத்தின் இதயமான பொது நூலகம் எரித்து நாசமாக்கப்பட்டமை.

13. 1979ம் ஆண்டில் பயங்கரவாத தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை.

14. 1979 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அவசரகாலச்சட்டத்திற்கு ஏற்ப பயங்கரவாதத் தடுப்புச் சடடத்தின் கீழ் வடக்கு கிழக்குப் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டும் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டமை.

15. திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு அரச ஆதரவு பூரணமாக கிடைத்தமை. (பொருளாதார உதவி, பாதுகாப்பு) முதலான பல நடவடிக்கைகள் மூலம் தென் பகுதியில் உள்ள வறிய சிங்கள் மக்களை தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பூமியில் குடியமர்த்தி இரு இனங்களையும் பிளவுக்குட்படுத்தப்பட்டது. அதேபோன்று இந்திய உபகண்டத்தில் சிங்களவர்கள் சிறுபான்மையினர் என்ற பிழையான முற்கற்பிதமும் இலங்கையின் இன முரண்பாடு கூர்மையடைவதற்கு காரணங் களாகும்.

16. 1983 ஆம் ஆண்டு நாடு தழுவிய ரீதியில் தமிழர்களுக்கிடையிலான இனக் கலவரம்.

17. 1983 ஆம் ஆண்டின் பின்னர் இன ரீதியான சிவில் யுத்தம் விருத்தியடைந்தது 2009ம் ஆண்டு வரை நீடித்திருந்தது. இவ் யுத்தம் சீனா, பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளின் உதவியுடன் இன ரீதியான சிவில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

காலத்திற்கு காலம் ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் இம் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக ஒவ்வொரு கால கட்டத்திலும் பல முயற்சிகளை மேற்கொண்டனர். இம்முயற்சிகள் பொருத்தப்பாடு இல்லாமல் தோல்விலேயே முடிந்தது. அம்முயற்சிகள் பின்வருமாறு,

1. பண்டா செல்வா ஒப்பந்தம் - 1957
2. டட்லி செல்வா ஒப்பந்தம் - 1965
3. UNP - TULF மாவட்ட அபிவிருத்தி சபை - 1981
4. திம்பு பேச்சுவார்த்தை - 1985
5. இலங்கை - இந்திய ஒப்பந்தம் - 1987

6. அரசியல் தீர்வுப் பொதி - 1997 பிராந்திய சபைகள் திட்டம்
7. இடைக்கால நிர்வாக சபை யோசனை - 2000
8. அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை - 2002
9. ஒஸ்லோ பிரகடனம் - 2002

1987 ஜூலை மாதம் இலங்கையின் ஜனாதிபதியும் இந்தியாவின் பிரதமரும் கைச்சாத்திட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கையின் மூலம் ஒற்றையாட்சியிலிருந்து இப்பரிமாற்றத்திற்கான அடிப்படை இடப்பட்டது. இலங்கையின் ஒற்றையாட்சியில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவது தொடர்பில் இவ் உடன்படிக்கையில் வெளிப்படுத்தப் பட்ட பிரதான மூலக் கொள்கைகள் பின்வருமாறு,

1. இலங்கை சமூகத்தை பல்லின சமூகமாக ஏற்றுக் கொள்ளல்.
2. தமிழ் மொழியை பெரும்பான்மையாக பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடமாக ஏற்றுக் கொள்ளல்.
3. வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களை தற்காலிகமாக ஒன்றிணைத்து மாகாண சபை ஒன்றினை தாபித்தல்.
4. வடக்கு, கிழக்குத் தீவிரவாதிகள் தமது ஆயுதங்களை சமாதான குழுக்களிடம் ஒப்படைத்தல்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இலங்கை அரசுக்கும் தமிழ் தரப்பினருடன் இந்திய அரசாங்கத்திலும் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் நடாத்திய பேச்சுவார்த்தையின் பயனாக இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே 1987 ஜூலை 24ம் திகதி செய்து கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்கச் செய்ய உடன்பட்டது. இவ் உடன்படிக்கையின் கீழ் மாகாணங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்கும் நோக்கில் அப்போதய அரசாங்கம் அரசியல் யாப்பில் 13ம் திருத்தத்தையும் 42ம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தையும் கொண்டு வந்தது. இதன் கீழ் மாகாண சபைகள் அறிமுகம் செய்யப்பட்டது.

13ம் திருத்தத்தில் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் சமஷ்டி முறையிலும் பார்க்க குறைந்த அதிகார பரவலாக்கம் ஒன்றாக இருப்பினும், இதன் மூலம் இலங்கையின் ஒற்றையாட்சி அரச கட்டமைப்பிற்கான மறுசீரமைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டமையால் இத்திருத்தம் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகியது.

09. மோதல் தீர்வு என்பது நீண்டதொரு செயன்முறையாகும் விபரிக்குக.

முரண்பாடு என்பது சமூக மாற்றத்தின் உள்ளார்ந்த தவிர்க்க முடியாத ஓர் விடயமாகும். இது மரபு ரீதியான கட்டுப்பாடு விதிகளைக் கடந்த சமூக மாற்றங்களால் உருவாக்கப்பட்டு, புதிய நிலைகளாக அல்லது வடிவங்களாக உருவெடுக்கும் பல்வேறு நலன்களை அடிப்படையாகக் கொண்டதாகும். முரண்பாடு சமூகத்திற்கு நன்மை பயக்கக்கூடியதாக இருப்பினும் அழிவினை ஏற்படுத்தக்கூடிய முரண்பாடுகளால் பாதகமான விளைவுகள் தோன்றச் செய்கின்றன. இப்பின்னணியில் முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பல கோட்பாட்டு ரீதியான வழிமுறைகள் முன்வைக்கப் பட்டுள்ளன. இதனை முரண்பாட்டுத் தீர்வு செயன்முறை என அழைக்கப்படும். முரண்பாட்டு தீர்வு செயன்முறை பொதுவாக நீண்டதொரு செயன்முறையாகும். அதாவது, தனிப்பட்ட ரீதியிலும் சமூக, அரசியல் முரண்பாடுகளிலும்

அவதானிக்கத்தக்க விடயம் யாதெனில் முரண்பாட்டை முழுமையாக தீர்த்துக் கொள்ளல் கடினமாயினும், முரண்பாட்டினை சாதகமான முறையில் அணுகும் பல வழிமுறைகள் காணப்படுகின்றன. அவையாவன,

01. முன்கூட்டிய முன் எச்சரிக்கை செய்தல் (Early Warning)
02. முரண்பாடு தவிர்த்தல் (Conflict Prevention)
03. முரண்பாடு முகாமைத்துவம் (Conflict Management)
04. முரண்பாடு நிலைமாற்றம் (Conflict Transformation)
05. முரண்பாட்டுக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் (Post Conflict Peace Bulding)
06. முரண்பாடுத் தீர்வு (Conflict Resolution)

முரண்பாடு தீர்வு செயன்முறையில் 1980, 1990களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் முன்வைக்கப்பட்ட முரண்பாட்டைக் கையாளுகின்ற வழிமுறையாக முன்கூட்டிய எச்சரிக்கை காணப்படுகின்றது. அதாவது, சமூகத்தில் ஏற்பட வாய்ப்புள்ள முரண்பாடுகள் தொடர்பாக முன்னரே இனங்கண்டு அவை ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்தலாகும். அவ்வாறு செய்யும் போது முரண்பாடு ஏற்படக் கூடிய இடம், சமூக குழுக்கள் போன்றவற்றை இனங்கண்டு அதன் மூலம் முரண்பாடுகளுக்கு காரணமாய் அமையக்கூடிய காரணிகள் மீது கவனம் செலுத்தி தீர்ப்பதற்கான யோசனைகளை முன்வைக்க முடியும்.

கெனத் போல்டிங் என்பவரால் முன்மொழியப்பட்ட ''சமூகத் தரவு மையம்'' என்பது இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனமாகும். இந் நிறுவனத்தின் செயற்பாடுகள் முரண்பாட்டின் குறிப்பிட்ட பிரதேசங்களைக் கண்காணித்தல், அம் முரண்பாட்டை ஆரம்பத்திலேயே தடுத்து விடுவதற்கான வழிகளை தேடுதலாகும். முரண்பாட்டுத் தீர்வு செயன்முறையில் முன்கூட்டிய எச்சரிக்கைக்கு உதாரணமாக பொருளாதார தடையைக் குறிப்பிடலாம். ஒரு நாடு ஏனைய இரு நாட்டுடன் அல்லது உள்ளக இனத்துக்கு எதிரான ஆயுத ரீதியில் முரண்பாடு ஈடுபட முயற்சிகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் முன்னெச்சரிக்கையாக அந்நாட்டுடன் உறவுகளை பேணாமல் விடுவதன் மூலம் முரண்பாட்டினை தடுப்பதற்கான ஓர் உத்தியாகும்.

முரண்பாடு தீர்வு கற்கையினுள் 1950களின் பின்னர் செல்வாக்குப் பெற்றது முரண்பாடு தவிர்த்தலாகும். முரண்பாடு தவிர்த்தலானது பல்வேறு நாடுகளில் தோன்றிய அழிவு ரீதியான முரண்பாடுகள் காரணமாக முரண்பாடுகளை தடுப்பதற்காக உருவாக்கப் பட்ட செயன்முறையாகும். மேலும் ஆயுத ரீதியான அழிவு ஏற்படாமல் அதனைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். முரண்பாடு தவிர்த்தல் என்பது மோதலை முடிவுக்குக் கொண்டுவந்து அதனை ஒரு சமாதான நிலைக்கு கொண்டு செல்ல மேற்கொள்ளப்படும் உபாயங்கள் பிரதான பங்கு வகிக்கின்றது. அதாவது, ஒரு மோதல் பரவி, அது ஒரு பாரிய விளைவை ஏற்படுத்துவதிலிருந்து தடுத்து முரண்பாடு தரப்புக்களை அதன் ஆரம்ப நிலைக்கு கொண்டு செல்லுவதாகும். முரண்பாடு தவிர்ப்பின் பிரதான அம்சம் முரண்பாட்டின் உடனடிக்காரணிகளை பரவ விடாது தடுத்தலாகும்.

A.C.M. Faleel (MA)

முரண்பாட்டை கையாளுவதற்கான உத்திகளில் ஒன்றாக 1980களின் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட ஓர் செயன்முறை முரண்பாடு முகாமைத்துவமாகும். முரண்பாடு முகாமைத்துவம் என்பது கட்டுப்படுத்த முடியாத மோதல்களின் நீண்டகால முகாமையை குறிப்பிடுகின்றது. அதாவது, மோதல் முகாமைத்துவம் பிரச்சினைக்கான தீர்வினை முன்வைக்காது மோதல் மேலும் பரவாது மோதல் தரப்பினரிடையே மோதலை ஓர் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதைக் குறிப்பிடுவதாகும்.

மோதல் முகாமைத்துவம் பற்றி டொனால்ட் பிளக் எனும் அறிஞர் ''மோதலில் தொடர்புடைய இரு குழுக்களுக்கிடையே மேலும் மோதல் அதிகரிக்காது அல்லது பரவ விடாது ஒரு குறித்த நிலையில் முகாமை செய்வதைக் குறிப்பிடுகின்றார். அதாவது, சமாதான உடன்படிக்கை, யுத்த நிறுத்த ஒப்பந்தம் என்பவற்றினால் மோதலை உடனடியாக முடிவுக்கு கொண்டு வராது முகாமை செய்வதை குறிப்பிடுகின்றது. மோதல் முகாமைத்துவம் செயன்முறை பிரதானமாக இன மோதலை தீர்க்கும் முயற்சியில் ஏற்படும் சிக்கலை கருத்திற் கொண்டு இவ்வெண்ணக்கரு பயன்படுத்தப் படுகின்றது.

முரண்பாடுகளை கையாளுவதில் மற்றுமொரு அணுகுமுறை முரண்பாட்டு நிலை மாற்றம் ஆகும். இதனை மோதல் உருமாற்றம் எனவும் அழைக்கப்படும். மோதல் தீர்வு அணுகுமுறைக்ககு பதிலாக தோற்றம் பெற்ற அணுகுமுறையாகும். மோதல் நிலைமாற்றம் என்பது மோதலின் தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். அதாவது, மோதல் தரப்பினர், பிரச்சினைகள், எதிர்பார்ப்புக்கள், மோதலை ஏற்படுத்தும் அடிப்படைக் காரணிகளை மாற்றியமைப்பதனால் மோதலின் அனைத்துவிதமான போக்கு நிலைமாறுவதை நோக்கமாகக் கொண்ட அணுகுமுறையாகும். மோதல் நிலை மாற்றம் நேரடியாக மோதலை முடிவுக்கு கொண்டுவர முடியாத ஒன்றாக காணப்படினும் மோதலை வேறொரு திசைக்கு அல்லது பரினாமத்திற்கு கொண்டு செல்லக்கூடியதாகும்.

மோதல் நிலை மாற்றம் ஒட்டுமொத்த மோதல் சூழல் காரணிகளை மாற்றியமைத்தல், மோதல் தரப்பினரின் தொடர்புகளை மாற்றியமைத்தல், மோதலுடன் தொடர்புடைய தரப்பினரின் மனப்பாங்குகள், நடத்தைகள், எண்ணங்கள் என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகும்.

மனித வரலாறு நெடுகிலும் மோதல், வன்முறை என்பவற்றினாலேயே வழி நடாத்தப்பட்டு வந்துள்ளன. மோதல், வன்முறை பாரிய அழிவுகளை ஏற்படுத்தியமையால் மோதல் தீர்வு செயன்முறையில் அண்மைக்காலமாக இணைத்துக் கொள்ளப்பட்டது முரண்பாட்டுக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதலாகும். ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பன மோதலுக்குப் பின்னரே அதிகமாக இடம் பெறுவதைக் காணலாம்.

மோதலுக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதலில் முதன்மை யானதாக ஆயுதங்களையும், போராளிகளின் விடுதலை, போராளிகளை சமூகத்துடன் இணைத்தல், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை செய்வதன் மூலம் சாத்தியப்படலாம் என டிக் சொலமன் எனும் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

முரண்பாட்டுத் தீர்வு எனும் பதம் மோதல் கற்கையில் மட்டுமன்றி மோதலுடன் தொடர்புடைய சகல துறைகளிலும் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மோதல் தீர்வு என்பது குறுகிய மட்டத்தில் மோதலுக்கு வழிவகுத்த காரணிகளை அகற்றுதல் அல்லது நீக்குதல் என்பதைக் குறிக்கும். மோதலுக்கான உடனடியாக அறிந்து கொள்ள முடியாத, ஆழமாக வேரூன்றிய காரணிகளே மோதல்கள் ஏற்பட காரணமாகின்றன. இவ் ஆழவேரூன்றிய காரணிகளாக சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரம் என்பன காணப்படலாம். எனவே,

A.C.M. Faleel (MA)

அக்காரணிகளே நீண்டகாலமாகப் பரிணாமம் அடைந்து பல மோதல்கள் ஏற்பட்டுள்ளதை காணலாம். எனவே, இக்காரணிகளை மிகத் தீவிரமாக ஆராய்ந்து அவற்றினை தீர்த்தலாகும்.

பொதுவாக மோதல் தீர்வு என்பது மோதலில் ஈடுபட்ட இரு தரப்பினரில் ஒரு தரப்பினரின் வெற்றியினூடாக மாத்திரம் முடிவுக்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டதல்ல. மாறாக இரு தரப்பினரினதும் மோதலுக்கான காரணிகளை பரஸ்பரம் தீவிர ஆராய்ந்து முடிவுக்கு கொண்டு வருதலாகும்.

பொதுவாக முரண்பாட்டுத் தீர்வு என்பது மோதலுக்கான அடிப்படைக் காரணிகளை ஆழமாக ஆராய்ந்து அவற்றை தீர்ப்பதற்காக செயற்படுவது எனலாம். மேலும் மோதல் தரப்பினரிடையே துண்டிக்கப்பட்ட தொடர்புகளை மீண்டும் மலரச் செய்தல், மோதல் மீண்டும் ஏற்படுவதற்கான காரணிகளை நீக்கி நிலையான சமாதானத்தை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை கட்டியெழுப்பக்கூடிய நீண்டகால செயற்பாடாகும்.

10. பின்வரும் தலைப்புகளுள் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.

(அ) இலங்கையின் கட்சி முறையின் அண்மைக்கால போக்குகள்.

(ஆ) அரசியல் கட்சிக்கும் அமுக்கக் குழுவிற்கும் இடையிலான வேறுபாடுகள்.

(இ) சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரம்.

(ஈ) உலக அரசியலில் அரசு சார்பற்ற செயற்பாட்டாளர்கள்.

(அ) இலங்கையின் கட்சி முறையின் அண்மைக்கால போக்குகள்.

♦ **பல கட்சி முறை :**

இலங்கையில் உயர்மட்டத்திலான ஒரு பல கட்சிமுறை நடைமுறையில் உள்ளது. இன்று பதிவு செய்யப்பட்டுள்ள கட்சிகளின் எண்ணிக்கையை விட எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கக்கூடிய போக்கு தென்படுகின்றது. இலங்கையில் பல கட்சிமுறை தோன்றி வளர்ச்சியடைவதில் நாட்டின் பல தன்மை சமூக முறை, பல்வேறு அரசியல் கருத்தியல்களின் செயற்பாடு இலங்கை நவீனத்துமடையாத ஒரு நாடாக இருத்தல், 1978 இன் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட விகிதசம பிரதிநிதித்துவ முறை மற்றும் மாகாண சபை முறை ஆகியன அதிகளவு தாக்கத்தினை ஏற்படுத்தி யுள்ளன. இதன் விளைவாக இலங்கை அரசியல் முறையில் முதலாளித்துவம் சார்பான கட்சிகள், இடதுசாரி தன்மை பொருந்திய கட்சிகள், இனவாத கட்சிகள், சமய சார்பு கட்சிகள், பிராந்திய கட்சிகள், பிரதேச கட்சிகள் என்ற வகையில் பலவாறான அரசியல் கட்சிகள் உருவாகி செயற்பாட்டில் உள்ளன.

♦ **ஆதிபத்திய இரு கட்சி முறை :**

இலங்கையின் பல கட்சிகள் UNP, SLFP ஆகிய இரு பிரதான கட்சிகளை மையமாகக் கொண்டு அமைந்திருப்பதனாலும் ஏனைய கட்சிகள் இவ்விரு பிரதான கட்சிகளினால் ஈர்க்கப்பட்டிருப்பதனாலும் இலங்கையில் ஒரு ஆதிபத்திய இரு கட்சி முறை உருவாகி நடைமுறையில் உள்ளது. இதன் பொருள் சிறிய அளவில் கட்சிகள் பிரதான இரு அரசியல் கட்சிகளின் தலைமைத்துவத்தின் கூட்டமைவுக்குள்

A.C.M. Faleel (MA)

ஒழுங்கமைவது என்பதாகும். இதன் விளைவாக தற்காலத்தில் இலங்கையின் தேர்தல் போட்டிகள் பிரதான இரு கட்சிகளினையும் சுற்றி அமைந்திருத்தல் இலங்கை கட்சி முறையின் ஒரு பிரதான பண்பாகும்.

♦ **தேசிய மட்டத்திலான கட்சிகள் காணப்படாமை :**

இலங்கையில் பல கட்சிகள் செயற்பட்டாலும் தேசிய மட்டத்தில் அமைந்த கட்சிகளின் செயற்பாடு காணப்படுவதில்லை. பிரதான கட்சிகள் கூட வடக்கிலும், கிழக்கிலும் போட்டியிட்டு வெற்றபெறாத நிலையிலும் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சிறுபான்மை கட்சிகள் தென்னிலங்கையில் போட்யிட்டு வெற்றிபெறமுடியாத நிலையாகும். இது எமது நாட்டின் பன்முக சமூகத்தில் வேரூன்றி இருக்கும் பண்பின் வெளிப்பாடாகும்.

♦ **பிரமுகர்களின் முக்கியத்துவம் :**

இலங்கை கட்சி முறையில் தென்படும் பிறிதொரு பண்பு பெரும்பாலான கட்சிகள் சில பிரமுகர்களை மையமாகக் கொண்டு செயற்படுவதாகும். இப்பண்பினை பிரதான இரு கட்சிகள் மட்டுமன்றி ஏனைய பல சிறிய கட்சிகளிலும் காணலாம்.

♦ **இடதுசாரி கட்சிகளின் வீழ்ச்சி :**

இலங்கை கட்சி முறையில் அண்மைக்காலத்தில் தென்படும் ஒரு முக்கியமான பண்பு இடதுசாரி கட்சிகள் வீழ்ச்சியுற்றமையாகும். சுதந்திரம் பெறுவதற்கு முன்ன ரிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை இலங்கை அரசியலில் பலம் பெற்றிருந்த பழம் இடதுசாரிகள் 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்த பின்னர் இடதுசாரி கட்சிகளால் சுயமாக செயற்பட முடிவதில்லை. மாறாக அவை இரு பிரதான கட்சிகளுடன் ஏதேனும் ஒன்றுடன் இணைந்து செயற்படவில்லையாயின் அவற்றுக்கு இருப்பு இல்லை என்ற அளவுக்கு மோசமான நிலைக்கு உட்பட்டுள்ளன. இன்று பழைய இடதுசாரி கட்சிகளைத் தாண்டி JVP என்ற இடதுசாரி கட்சி முன்னிலையில் காணப்படுவதுடன் இலங்கை அரசியலில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்த முடிவதில்லை. இருந்தாலும் 2000 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் 10 ஆசனங்களையும் 2001 ஆம் ஆண்டில் 16 ஆசனங்களையும் 2004 ஆம் ஆண்டு SLFP உடன் கூட்டுச் சேர்ந்து 39 ஆசனங்களையும் JVP பெற்று ஒரு அதிகரிப்பை காட்டிய போதிலும் 2010, 2015 தேர்தல்களில் வீழ்ச்சி நிலையை எதிர் நோக்கியது. 2015 ஆம் ஆண்டு தேர்தலில் மரபு ரீதியான இடதுசாரிக் கட்சிகள் எந்த ஆசனத்தையும் பெறவில்லை. புதிய இடதுசாரி முன்னணியில் வாசுதேவ நாணயக்கார மட்டும் தெரிவு செய்யப்பட்டார் என்பது முக்கியமானதாகும்.

♦ **சிறிய கட்சிகள் தோன்றல் :**

இலங்கை அரசியல் முறைமையில் அண்மைக்காலத்தில் அதிக எண்ணிக்கையான சிறிய கட்சிகள் தோன்றியுள்ளன. அதனால் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதனை பாதித்த பிரதான காரணிகளாவன இனவாதப் பிரச்சினை, விகிதசம பிரதிநிதித்துவ முறை, மற்றும் மாகாண சபை முறை போன்றவையாகும். இதன் காரணமாக பொதுத் தேர்தல்களின் பின்பு உறுதியற்ற அரசாங்கங்கள் உருவாகின்றன.

A.C.M. Faleel (MA)
A.C.M. Faleel (MA)

♦ **இரு பிரதான கட்சிகளிடத்தும் கருத்தியல் வேறுபாட்டின் இடைவெளி குறைவ டைந்துள்ளமை:** சுதந்திர இலங்கையில் ஆட்சியை கைப்பற்றும் திறன்கொண்டவையாக UNP, SLFP ஆகிய இரு கட்சிகளும் பலம் பெற்று இருப்பதுடன் ஆரம்ப காலங்களில் இவ்விரு கட்சிகளும் கருத்தியல் ரீதியில் வேறுபட்டு செயற்பட்டன. எனினும் கெடுபிடி யுத்தத்தின் (1990) பின்னர் புதிய உலக ஒழுங்கில் ஏற்பட்ட மாற்றங்களை இவ்விரு கட்சிகளும் உள்வாங்கி தேசிய சர்வதேச கொள்கைகளில் ஒரே தன்மை யினதாக செயற்படுகின்றன. இதனால் ஆளும் கட்சியுடன் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் மிக இலகுவாகவே கட்சித்தாவலில் ஈடுபட்டு சலுகைகளையும் முன்னுரிமைகளையும் அனுபவிக்கின்றனர்.

இதைத்தவிர,

♦ வாக்களிப்பு வீதம் குறைவடைந்து செல்கின்றமை.
♦ யுத்தத்தின் பின்பு தமிழ் மக்கள் அரசியலில் கூடுதலாக ஈடுபடுகின்ற தன்மை காணப்பட்டமை.
♦ பிராந்திய கட்சிகள் பலம் பெற்றுள்ளமை.
♦ பௌத்த குருமார் நேரடி அரசியலில் பிரவேசித்துள்ளமை.
♦ கட்சித் தாவல்கள் ஏற்படுகின்ற நிலைமை காணப்படல.
♦ பலவீனமான எதிர்க்கட்சி காணப்படுகின்றமை.

(ஆ) அரசியல் கட்சிக்கும் அமுக்கக் குழுவிற்கும் இடையிலான வேறுபாடுகள்.

1. ❖ அரசியல் கட்சிகள் நேரடியாக அதிகாரத்தைக் கைப்பற்றி அரசாங்கத்துக்குள் நுழைய ஆதிக்கம் செலுத்துவனவாகும்.
   ❖ அமுக்கக் குழுக்கள் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கமின்றி அரசாங்கத்தின் சட்டங்களிலும், கொள்கைகளிலும், தீர்மானங்களிலும் அழுத்தங்களை ஏற்படுத்தும் நோக்கத்தை கொண்டனவாகும்.

2. ❖ அதிகாரத்தை கைப்பற்றும் அரசியல் கட்சிகள் தமது கொள்கைகளுக்கு நிகரான பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளும்.
   ❖ அமுக்கக் குழுக்கள் தமது நலன்களுக்கான பொறுப்பை நேரடியாக ஏற்றுக் கொள்ளாது அந்நலன்களை அடையவே முயலும்

3. ❖ ஓர் அரசியல் கட்சி ஆயிரக்கணக்கான அல்லது இலட்சக் கணக்கான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் போது,
   ❖ அமுக்கக் குழுக்கள் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான உறுப்பினர் களைக் கொண்ட சிறிய அமைப்புக்களாக இருக்கும்.

4. ❖ அரசியல் கட்சிகள் நேரடியாகச் செயற்படும் அமைப்புக்களாகும்.
   ❖ அமுக்கக் குழுக்கள் பெரும்பாலும் அரசியல் கட்சிகளினூடாகவே செயற்படும்.

5. ❖ அரசியல் கட்சிகள் பல்வேறு கொள்கைகளையும், கருப்பொருள்களையும், கொண்டு செயற்படும்.
   ❖ ஆனால், அமுக்கக் குழுக்கள் சூழல் பாதுகாப்பு, இளைப்பாறியோர் உரிமைகளைப் பாதுகாத்தல், பஸ் பயணிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற தனிக் கருப் பொருள்களைக் கொண்டனவாகவும் ஜனநாயகம், மனித உரிமைகள், சிவில் உரிமைகள் போன்ற பரந்த கருப்பொருள்களைக் கொண்டனவாகவும் செயற்படலாம்.

A.C.M. Faleel (MA)

6. ❖ அமுக்கக் குழுவொன்று சில குறிப்பிட்ட நலன்களை அடிப்படையாகக் கொண்டு காணப்படுவது வழமையாகும். இந்த வகையில குறிப்பிட்ட நலனை பாதுகாக்கவும் விருத்தி செய்வதற்குமென போராடவும் தயங்குவதில்லை.

இந்த நலனானது ஊதியம் மற்றும் மேலதிக படிகள் என்பவற்றை அதிகரிப்பதற்கான கோரிக்கையாகவோ அல்லது விவசாய உற்பத்திப் பொருட்களின் விலையினை அதிகரிப்பதற்காகவோ அல்லது குறிப்பிட்ட மொழி மற்றும் கலாசாரம் என்பவற்றினை பேணுவதற்காகவோ இருக்கலாம்.

எனவே அமுக்கக் குழு என்பது பல்வேறுபட்ட நலன்களைக் கொ்ணட ஒரு பொது நிறுவனமாக காணப்படுகின்றது. இந்த வகையில் வியாபாரிகள், தொழிலாளர்கள், விவசாயிகள், சட்டத்தரணிகள் போன்ற பல்வேறுபட்ட மக்கள் பிரிவினருக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற நலன்களை உள்ளடக்கியுள்ளதாக காணப்படுகின்றது. எனவே அரசியல் கட்சி ஒன்று மொத்த நலனை அடிப்படை யாகக் கொண்ட ஒரு கருவியாகக் காணப்பட, குறிப்பாக அமுக்கக் குழுவானது தங்களது குழு அங்கத்தவர்களது நலனை மாத்திரமே கருத்தில் கொண்டு செயற்படுவதை அவதானிக்கலாம்.

7. ❖ அமுக்கக் குழுக்கள் அரசியல் கட்சிகளாக மாற முடியும். ஆனால் அரசியல் கட்சிகள் அமுக்கக் குழுவாக மாற முடியாது.

(இ) சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரம்.

சர்வதேச அரசியலில் ஆராயப்படும் மிகப் பிரதான எண்ணக்கருக்களுள் ஒன்றாக தேசிய அதிகாரம் காணப்படுகின்றது. நாடுகளுக்கிடையிலான உறவில் தேசிய அதிகாரம் என்பது ஒவ்வொரு அரசிலும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. பொதுவாக அதிகாரம் என்பது பிற மனிதர்களுடைய மனதையும செயலையும் கட்டுப்படுத்துகின்ற திறன் என பேராசிரியர் ஹான்ஸ் ஜே. மொகன்தோ குறிப்பிடுகின்றார். எந்த ஒரு நாடு எண்ணற்ற நாடுகள் மீது தனது செல்வாக்கை செலுத்துகின்றதோ அந்நாடு சர்வதேச அரங்கில் வல்லரசு தன்மை பெற்ற அரசு என குறிப்பிடப்படுகின்றது.

அதிகாரம் என்பது மனிதனது வாழ்வில் பிரிக்க முடியாத ஒன்றாக காணப்படு கின்றது. அதாவது சமூக, பொருளாதார, இராணுவ, தொழில் நுட்ப, உளவியல் அடிப்படையில் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள மனிதர்கள் முயலுகின்றனர். எனவே தேசிய அதிகாரம் இவ்வாறான அதிகாரத்தினுள் ஒரு நாடு கொண்டிருக்கின்ற அதிகாரம், அது பயன்படுத்துகின்ற அதிகாரம் தேசிய அதிகாரம் என குறிப்பிடலாம். தேசிய அதிகாரம் என்பது ‘‘கட்புலனாகக் கூடிய அல்லது கட்புலனாகாத வளங்களைப் பயன்படுத்தி சர்வதேச அரச முறைமையினுள் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சர்வதேச ஏற்பாட்டாளருடைய இயலுமை என றோஸன் மற்றும் ஜோன்ஸ் எனும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

தேசிய அதிகாரத்தை உருவாக்க மூலங்களை பல்வேறு அறிஞர்களும் பல்வேறு விதமான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். தேசிய அதிகார மூலங்கள் தொடர்பாக கர்(Carr), மோகன்தோ, ஹார்ட்மேன், பால்மர், மெர்கின்ஸ் ஆகிய அறிஞர்கள் முக்கிய மானவர்களாவர். இவர்களது கருத்தின் படி தேசிய அதிகார மூலங்களாக 08 காரணிக ளைக் குறிப்பிடுகின்றனர்.

தேசிய அதிகார 08 மூலங்களையும் பேராசிரியர் மொகன்தோ நிலையான தன்மை கொண்ட மூலங்கள் என்றும் மாறுகின்ற தன்மை கொண்ட மூலங்கள் என 02 வகைப்படுத்தி குறிப்பிட்டுள்ளார். தேசிய அதிகார மூலங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

A.C.M. Faleel (MA)

1. புவியியல்
2. இயற்கை வளங்கள்.
3. தொழில் திறன்.
4. இராணுவ அமைப்புக்களும் இராணுவ தலைமையும்.
5. மக்கள் தொகை.
6. தேசிய குணநலன்.
7. இராஜதந்திரம்.
8. அரசாங்கத்தின் தன்மை.

தேசிய அதிகாரம் என்பது ஓர் அரசின் செயற்பாட்டிற்கான மிக முக்கியமான அடிப்படையாகக் காணப்படுகின்றது. தேசிய நலனை அடைந்து கொள்வதற்கான மிக அவசியமானதும் இன்றியமையாததுமான ஓர் கருவியாகக் காணப்படுகின்றது.

(ஈ) உலக அரசியலில் அரசு சார்பற்ற செயற்பாட்டாளர்கள்.

விசேடமான நோக்கம், பல நோக்கங்கள் அல்லது குறித்த ஓர் இலக்கினை அடிப்படையாகக் கொண்டு தொழிற்படுகின்ற நிறுவனங்கள் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் என அழைக்கப்படும். 20ம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் பரவலடைந்த இந்நிறுவனங்களின் எண்ணிக்கை சுமார் 5000 தாண்டியுள்ளது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிறுவனங்களின் செயற்பாடுகளாக மனித உரிமைகளைப் பாதுகாத்தல், விலங்குகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், போர் மற்றும் இயற்கை அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கல் என்பவற்றைக் குறிப்பிடலாம். சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International), சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) என்பன மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களாகும். சர்வதேச வனவிலங்கு நிதியம் (World Wild life Fund), விலங்குகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC), வேல்ட் விஷன் (World Vision) என்பன பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நிறுவனங்களாகும்.

A.C.M. Faleel (MA)